# உதயன்

31
தெளிவான
வானம்

சுடர் 30 | கதிர் 304 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 09, சனிக்கிழமை 26.09.2015


# 40,000 தமிழரின் உயிரைக் காப்பாற்ற தவறியது இந்தியா

## இலங்கையின் இறுதிப்போர் குறித்து மனம் திறக்கிறார் ஐ.நா. முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை

ஜெனிவா, செப்ரெம்பர் 26

இந்தியா உரிய நேரத்தில் தலையிட்டிருந்தால் இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரம் பொதுமக்களின் உயிரிழப்பைத் தவிர்த்திருக்க முடியும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 'தந்தி' தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் சர்வதேச நீதிப் பொறிமுறைகளைத் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றன. இந்நிலையில், இலங்கை போர்க்குற்ற விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப்

பக்.27



## வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப்.26

வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 3 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி ஆலயப்

பக்.28

## 10 வயதுச் சிறுவன் கொடூரக் கொலை

கொழும்பு, செப்.26

அத்துருகிரிய, கப்புறுகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் 10 வயதுடைய சிறுவன் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளான்.

நேற்று முற்பகல் 11.10 மணியளவில் இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொலைசெய்யப்பட்ட சிறுவனின் கைகள், கால்கள் மற்றும் கழுத்து போன்ற பகுதிகள் வெவ்வேறாகும் அளவுக்குக் கொடூரமான முறையில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்

பக்.28

## தாக்குதலில் காயமுற்ற ஆசிரியர் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், செப். 26

திருமணம் முடித்து ஒரு வாரத்தின் பின்னர், யாழ்.பஸ் நிலையத்தில் இரவு நேரம் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்ட ஆசிரியர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். குறித்த கும்பல் அடாவடியில் ஈடுபடத் தொடங்கியவுடன் அது தொடர்பில் யாழ். பொலிஸாருக்கும், 119 என்ற அவசர இலக்கத் ...க்கும் தொடர்பு

பக்.28

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் குறைகிறது யாழில்

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்.மாவட்டத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், இளவயதுத் திருமணம் மற்றும் இளவயதுக் கர்ப்பம் என்பன தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்வதாக, யாழ். மாவட்டச் செயலக புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போருக்குப் பின்னரான ஆறு ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை தொடர்ச்சி யான வீழ்ச்சிப் போக்கிலேயே சென்றுகொண்டிருப்பதாக, மாவட்டச் செயலக புள்ளிவிவ ரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

போரின் பின்னரான அடுத்த சில வருடங்களில் உச்ச அளவில் இருந்த துஷ்பிரயோகம் மற்றும் இளவயதுக் கர்ப்பம் என்பன, அவை தொடர்பில் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மூலமே குறை வடைந்து வருவதாக மாவட்டச் செயலக அதிகாரி

பக்.27

# நம்பகரமான நீதிச் செயற்பாட்டின் முக்கிய படிநிலை அமெ. தீர்மானம்

## இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி சுட்டிக்காட்டு

வோஷிங்டன், செப்.26

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு, நம்பகரமான இடைக்கால நீதிச் செயற்பாட்டின் முக்கியமான படிநிலை என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.



காணாமற்போனவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்கள் பற்றிய பதில்களை அறிந்து கொள்வதற்கு இந்தத் தீர்மானம் உதவும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்

பக்.28


# அமெ. தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணை

## விசேட வழக்கறிஞர்கள் அலுவலகம் அமைக்கவும் பிரதமர் ரணில் இணக்கம்

கொழும்பு, செப். 26

பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கி உள்நாட்டு விசாரணையை நடத்த சுயாதீன- நம்பகமான நீதிப் பொறிமுறை ஒன்றை அமைக்குமாறு கோரி அமெரிக்காவினால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மான வரைவுக்கு இலங்கை அரசும் அனுசரணை வழங்கும் எனப் பிரதமர் ரணில்

பக்.28



# சமூகவிரோதிகளை உடன் கைது செய்க

## பொலிஸாருக்கு யாழ்.மேல்நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், செப்.26

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரைத் தீவிரமாகக் கண்காணிக்குமாறும் அவர்கள் மது அருந்திவிட்டுச் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பதை உன்னிப்பாக அவதானிக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் உரிய வகையில் நடந்து கொள்ளவில்லையாயின் அவர்களைக் கைது செய்வ

பக்.28



## திலீபனின் நினைவு இன்று

யாழ்ப்பாணம், செப். 26

நல்லூரில் உண்ணாநோன்பிருந்து, தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் நினைவு நாள்

பக்.28

# அமெ. தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு கூட்டமைப்பு உதவும்

## அதனை வரவேற்று அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 26

சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கியதான நீதிமன்றச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசுக்கும் - சர்வதேச சமூகத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது பங்களிப்பை வழங்கும் என்று தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மான வரைவை வரவேற்பதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து அமெரிக்கா தனது தீர்மான வரைவைச் சமர்ப்பித்துள்ளமை வரவேற்கத்தக்கது. குறிப்பாக, இந்த வரைவில், சர்வதேச

பக்.27

# அமெரிக்கத் தீர்மானம் இலங்கைக்கு வெற்றி

## தம்பட்டமடிக்கிறது அரசு

கொழும்பு, செப்.26

அமெரிக்காவினால் ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்ற அழுத்தமும், கலப்பு நீதிமன்றம் என்ற யோசனையும் தவிர்க்கப்பட்டமை இலங்கை அரசுக்கு கிடைத்த வெற்றி என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித

பக்.27

# கலப்பு நீதிமன்றின் மூலமே தமிழர்களுக்கு நீதி கிட்டும்

## உள்ளக விசாரணை வெறும் கண்துடைப்பு என்கிறார் வடக்கு எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், செப். 26

உள்ளக விசாரணை என்பது வெறும் கண்துடைப்பு நாடகமாகவே [illegible] தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயிருந்தால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் சமர்ப்

பக்.27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 20 ஏக்கர் காணியில் எஞ்சியது 2 ஏக்கரே

## மிகுதியை இராணுவத்திடமிருந்து பெற்றுத்தருமாறு கிளி.தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.26

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு வழங்கப்பட்ட 20 ஏக்கர் காணியில் தற்போது 2 ஏக்கர் காணி மாத்திரமே தங்களிடம் உள்ளது என்று தெரிவித்துள்ள அதன் உதவிப் பணிப்பாளர் குகேந்திரா, இராணுவத்தினர் வசமுள்ள மிகுதி 18 ஏக்கரையும் மீட்டுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி கூட்டத்தின்போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கிளிநொச்சி ஏ–9 வீதியில் 155ஆம் கட்டைப் பகுதியில் உள்ள இளைஞர் சேவைகள் மன்றத்துக்குஎன போரின் முன்னர் 20 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது 2 ஏக்கர் காணி மட்டுமே உள்ளது.அதிலேயே தங்களுடைய அலுவலகம் மற்றும் விளையாட்டுப் பயிற்சி முற்றங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் தேசிய மட்ட நிகழ்வுகளுக்கு மாவட்ட இளைஞர், யுவதிகளை பயிற்றுவித்து அனுப்புவதில் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் குறிப்பிட்டது.

மிகுதிக் காணி இராணுவத்தினரின் வசம் உள்ளது. மிகுதி காணியையும் பெற்றுத் தந்தால் இளைஞர்களுடைய பயிற்சிகளை இலகுவாக மேற்கொள்ளமுடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மிகுதி காணியையும் இராணுவத்தினரிடம் இருந்து பெற்று தந்து கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களுடைய விளையாட்டு திறனுக்கு உதவுமாறு உதவிப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு கிளிநொச்சி – பூநகரி பகுதியில் உள்ள 10 ஏக்கர் 'யுத் பாம்' பையும் புனரமத்து தருமாறும் அவர் கோரிக்கை விடுத்தரர்.

(ற–21)

## கொட்டதெனிய சிறுமி கொலையைக் கண்டித்து அம்பாள்குளம் விவேகானந்தா வித்தி. மாணவர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.26

கொட்டதெனியாவைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமி கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து கிளிநொச்சி அம்பாள் குளம் விவேகானந்த வித்தியாலயத்தில் நேற்று கவனவீர்ப்பும், அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

கடந்த 11ஆம் திகதி தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த சிறுமி கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். இதனைக் கண்டித்து நாடு முழுவதும் பல பகுதிகளில் கவனவீர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

முற்பகல் பத்து மணிக்கு கிளிநொச்சி அம்பாள் குளம் பாடசாலை முன்றிலில் ஒன்றுகூடிய குறித்த பாடசாலை மாணவர்கள் கொலைசெய்யப்பட்ட சிறுமியின் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். கவனவீர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுப்பட்டனர்.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தின்போது, 'இதுவே இறுதிச் சம்பவமாக இருக்கட்டும்', 'பள்ளிக் கனவுகளை சிதைக்காதே', 'பூவாக மலரும் முன்னே புதைகுழி அமைக்காதே', 'சுதந்திரமாகச் சிறகடிக்க உரிமை கொடு எங்களுக்கு', 'பட்டினி என்றாலும் பாலகருக்கு பாதுக்காப்பான வாழ்வு கொடு', 'சிறுவர்கள் நாம் வன்முகொடுமைகளுக்கு ஆளாவதை தவிர்த்து, பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்ற நாட்டை உருவாக்கு' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்த கவனவீர்ப்பு நடவடிக்கையில், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற–21,ரி3)

### வேலணைப் பெண் கடத்தல்:

## சந்தேகநபர்கள் இருவரும் அடையாள அணிவகுப்பில்

யாழ்ப்பாணம் செப். 26

வேலணையில் நள்ளிரவில் வீடு புகுந்து பெண்ணைக் கடத்தி காட்டுக்குள் வைத்து வன்புணர்ந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கும் இரு சந்தேக நபர்களும் அடுத்த தவணை நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வேலணையில் கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவில் ஆயுதங்களுடன் வீடு புகுந்த சந்தேகநபர்கள் 2 பேரும் வீட்டில் கணவனைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அவரின் மனைவியைக் கடத்திச் சென்று காட்டுக்குள் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர் ஒருவர் புங்குடுதீவில் கைது செய்யப்பட்டதோடு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலமாகப் பொதுமக்களும் பொலிஸாரும் இணைந்து வேலணைக் காட்டுக்குள் தேடுதல் நடத்தியபோதே, காட்டுக்குள் இருந்து வீடு நோக்கி பெண்ணை இழுத்துச் சென்றுகொண்டிருக்கும்போது பெண்ணை மீட்டதோடு, மற்றைய சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.

அவர்கள் பரிசோதனையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

அன்றையதினம் சந்தேகநபர்களை நீதிமன்றில் அடையாள அணி வகுப்புக்கு முற்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற–4)

## யாழ். இந்துவின் 125 ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக் கொடை

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று குருதிக் கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்[illegible]ளது.

காலை 9 மணி தொடக்கம் பி.ப.3 வரை இடம் பெறும் இந்தநிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற–10)

## இ.போ.ச. பஸ் தாக்குதல்: கைதானவருக்கு மறியல்



யாழ்ப்பாணம், செப். 26

மன்னாரில் அரச பஸ் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற குறித்த பஸ் மன்னார் நகரில் பயணிகளை இறக்கி விட்டு, டிப்போவுக்குச் சென்று கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடதத்தப்பட்டுள்ளது. அதனால் பஸ்ஸின் சாரதியும் அதில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பஸ் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் ரூபா வரையில் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அரச பஸ் ஊழியர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் பஸ் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மன்னார் பட்டித் தோட்டத்தைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். அவரை மன்னார் நீதிமன்றில் பதில் நீதிவான் சி.பெல்டானோவிடம் முற்படுத்தினர். சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் பலர் தொடர்புபட்டுள்ளனர் என்று கூறப்பட்டதால், குறித்த நபர்களைக் கைது செய்யுமாறு பதில்நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ற–4)

# 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளருக்கு மாற்றல்

## பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கு வடக்கு மாகாண சபை அங்கீகாரம்

யாழ்ப்பாணம், செப். 26

பத்து வருடங்களுக்கு மேலாக ஒரே உள்ளூராட்சி மன்றத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களை, வேறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 35 ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் தீர்மானம், சபையின் ' அங்கீகாரத்துக்காக அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தால் வாசிக்கப்பட்டது.

வ.குமாரராசா என்பவர், யாழ். மாநகர சபையில் 1988 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம், நீர் வேலைப் பகுதி தொழிலாளியாக நியமனம் பெற்று 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் குழாய் பொருத்துநராக பதவி உயர்வு பெற்றுள்ளார். பின்னர் குறித்த குழாய் பொருத்துநர் பதவியில் வெற்றிடம் இல்லை என்று கூறி– 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முதல் ஓட்டுனராக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எனினும், யாழ்.மாநகர சபையின் 2000 ஆம், 2001 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் குழாய் பொருத்துநர் பதவியில் வெற்றிடம் காணப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மீள இவருக்கு 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து குழாய் பொருத்துநர் பதவியில் அமர்த்தி சம்பள மாற்றியமைப்பை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மக்களின் நலன் கருதி தமது துன்பங்களையும் [illegible] தீயணைப்புச் சேவையில் [illegible] டோரை வேறு பணிகளுக்குச் செல்லுமாறு பணித்து விட்டு, அவர்களது இடத்துக்கு வேறு புதியவர்களை யாழ்.மாநகர சபை நியமித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் உள்ளடக்கம் நியாயமானது. எனவே இந்த விடயம் தொடர்பில் சுயாதீனமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றில் நிர்வாக முறைகேடுகள் இடம்பெறுகின்றது என்று பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சபை கலைக்கப்பட்ட பின்பும், நகர சபை – பிரதேச சபைகளின் செயலாளர்களாக ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கடமையாற்றுகிறார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே செயலாளர்களாகக் கடமையாற்றுவோருக்கு ஒட்டுமொத்தமாக வெவ்வேறு பிரதேச சபைகளுக்கு இடமாற்றம் [illegible]

[illegible]

பல உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் 10 தொடக்கம் 15 வருடங்கள் ஒரே இடத்தில் கடமையாற்றுவது தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.எனவே தற்போது நடைமுறையில் உள்ள இடமாற்றக் கொள்கைக்கு பாதிப்பில்லாமல் 10 வருடங்களுக்கு மேலே ஒரே சபையில் கடமையாற்றுவோரை முதல் கட்டமாக இடமாற்றம் செய்ய வேண்டும். ஆகக் குறைந்தது அவர்களது வதிவிடங்களுக்கு அண்மையில் இருக்கும் வேறு உள்ளூராட்சி மன்றங்களுக்கேனும் இடமாற்றம் வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது.

பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை மாகாணசபை ஏகமனதாக அங்கீகரித்தது. குறித்த பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட திணைக்களம் – அமைச்சுக்கள் – முதலமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–5,ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகச் செய்கை இலாபம் தரவில்லை

## கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, செப்.26
கடந்த சிறுபோக நெற்செய்கையில் எதிர்பார்த்த இலாபத்தை எட்ட முடியவில்லை என்று தெரிவித்தனர் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள்.

அதிக வெப்பமான காலநிலையால் பயிர்களில் ஏற்பட்ட நோய்த்தாக்கத்தாலும், அறுவடை செய்யும் காலப் பகுதியில் பெய்த மழையாலும் அதிக நட்டம் ஏற்பட்டது என்று அவர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சிறுபோக பயிர் செய்கைக்காக இந்தமுறை இரணைமடு, கல்மடு, அக்கராயன், வன்னேரி ஆகிய குளங் களை உள்ளடக்கி 17ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்பயிர் செய்கை பண்ணப்பட்டது. குளங்களிலும் போதுமான நீர்மட்டம் இருந்தது.

குளங்களில் போதுமான நீர் மட்டம் இருந்த போதினும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக நாம் நட்டமடைய நேரிட்டது என்று கனகபுரத்தைச் சேர்ந்த விவசாயியான தி.ராமேஸ்வரன் கூறினார்.

வெப்பமான காலநிலை காரணமாக நெற் பயிர்கள் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகின. அதை ஒருவாறு சமாளித்து செய்கையில் ஈடுபட்டோம். ஆயினும் அறுவடை செய்யும் காலப்பகுதியில் மழை பெய்ததால் அதிக நட்டத்தை எதிர்கொள்ள வேண்டி நேர்ந்தது என்று அக்கராயனைச் சேர்ந்த விவசாயியான நஜெயசேகரம் தெரிவித்தார்.

அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் களஞ்சியப் படுத்துவதற்கு வசதிகள் இல்லாத நிலையில் தாம் அவற்றைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானாம் என்று விவசாயிகள் கூறுகின்றனர். அதனாலும் தம்மால் எதிர்பார்த்த இலாபத்தைப் பெறமுடியாது போனது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.


கோப்புப்படம்

நெல்லைச் சந்தை படுத்துவதற்கான வசதிகள் போது மானதாக இல்லாதன் காரணத்தால் ஆரம்பத்தில் அறுபடை செய்த நெல்லை அறுவடை முடிந்த உடனேயே வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு (1மூடை 1500 ரூபாவில் இருந்து 1700 ரூபா) விற்று விட்டேன். இந்தப் பிரச்சினை தொடர்பில் அரச அதிபர் முதற்கொண்டு பலரிடம் முன்னர் பேசியிருந்தோம் என்று ஊரியானைச் சேர்ந்த விவசாயி புனிதன் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் பிரச்சினைகளைத் தெரியப்படுத்திய போது நெல் சந்தைப்படுத்தும் அதிகாரிகளுடன் இது குறித்து ஆராயப்பட்டது. அதன் பின்னர் கடந்த ஆவணி மாதம் 3ஆம் திகதியில் இருந்து நெல் சந்ததைப்படுத்தும் சபையினரால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுடைய நெல் அரச விலை நிர்ணயத்தில் கொள்ளனவு செய்யப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

நெல் கொள்வனவு வட்டக்கச்சி, கண்டாவளை, புளியம் பொக்கணை, கரைச்சி, முழங்காவில் போன்ற பகுதிகளில் இடம்பெறும் என்று அரச அதிபர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

எனினும் நெல் சந்தைப்படுத்தும் சபையினரிடம் கிளிநொச்சி மாட்ட விவசாயிகளினுடைய நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்துவதற்குப் போதுமான வசதிகள் இல்லாததாலும், நெல்லுக்குரிய பணத்தை வழங்குவதற்கு போதுமான பண வசதிகள் இல்லாததாலும் கொள்வனவில் தடங்கல் ஏற்பட்டது. அதனால் நெல் சந்தைப் படுத்தும் சபையின் முன்பாக விவசாயிகள் நெல் மூடைகளுடன் காவல் இருக்கவும் நேர்ந்தது.

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தைச் சேர்ந்தரான புனிதன் இதுகுறித்துத் தெரிவிக்கையில்
அறுவடை செய்த நெல்லைச் சந்தை படுத்துவதாக இருந்தால் நன்றாகக் காயவிடவேண்டும் அப்படிக் காய விட்டு நாள்கள் கழிய அதை எடுத்து கொண்டு நெல் சந்தைப் படுத்தும் சபைக்கு சென்றால் அங்கே 'நம்பர்' எடுத்து காவல் நின்று தான் நெல்லை சந்தைப் படுத்த வேண்டும். நான் இரவு இரவாக காவல் இருந்தே எனது 20 மூடை நெல்லையும் விற்றேன்.– என்றார்.

இது தொடர்பில் நெல் கொள்வனவு சபையுடன் தொடர்புகொண்டு கேட்ட போது:–
கடந்த முறை கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெல் கொள்வனவு அநுராதபுரத்தில் உள்ள நெல் சந்தைப் படுத்தும் சபை மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த முறை புதிதாக கிளிநொச்சியில் நெல் சந்தைப்படுத்தும் சபை அமைக்கப்பட்டு நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. அதனால் கடந்த வருடத்தை இந்த வருடத் துடன் ஒப்பிட முடியாது.

அரச விலை நிர்ணயத்துக்கு அமைவாக ஒரு கிலோ சம்பா 50 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாடு நெல் 45 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது. கடந்த ஆவணி 3ஆம் திகதியில் இருந்து புரட்டாதி 9ஆம் திகதி வரை 3 ஆயிரத்து 068 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. – என்று பதிலளிக்கப் பட்டது.

(ற–21,ரி3)

### வளலாயில் 14 கிணறுகள் பாவனைக்கு கையளிப்பு



அச்சுவேலி, செப். 26
வளலாயில் வெடிகுண்டுகள் அகற்றப்பட்டு மக்கள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் உள்ள 14 கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன. ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தால் துப்புரவு செய்யப்பட்ட 14 கிணறுகளில் ஏழு கிணறுகளுக்குள் இருந்து வெடி பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

வளலாயில் மக்கள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் கிணறுகள் துப்புரவு செய்யப்படாமல் வெடிகுண்டு அபாயக் குறியீட்டு அடையாளங்கள் பொறிக்கப்பட்ட நிலையில் இருந்து வந்தன. இது தொடர்பாக வளலாய் மீள்குடியேற்ற செயற்குழு விடுத்த கோரிக்கையை அடுத்து 14 கிணறுகள் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டன. அதில் ஏழு கிணறுகளில் வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

கிணறுகளுக்குள் அபாயகரமான வெடி பொருள்கள் இருக்கலாம் எனக் கருதப்பட்டமையால் கனரக பைக்கோ இயந்திர சாதனங்கள் துப்புரவாக்கலில் பயன்டுத்தப்பட்டன. அதனால் கிணறுகளின் சுவர்கள் சேதமடைந்தன என்றும் சேதமடைந்த சுவர்களைத் திருத்தி அமைப்பதற்கான முன்முயற்சியில் விவசாய சம்மேளனம் மற்றும் மீள் குடியேற்ற செயற்குழு ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற–11)

### யாழ்.நீதிமன்ற தாக்குதல் சம்பவம்; சந்தேகநபர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,செப்.26
யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கடந்த கடந்த 23 ஆம் திகதி கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த நபரை பொலிஸார் யாழ்.நீதிமன்றில் முற்படுத்தி நீதிமன்ற தாக்குதல் வழக்குகளில் உட்படுத்த அனுமதிக்குமாறு விண்ணப்பித்தனர். அதனை ஏற்றுக் கொண்ட நீதிவான் பெ.சிவகுமார் சந்தேகநபருடைய வாக்குமூலத்தை நீதிமன்ற வளாகத்தில் வைத்துப் பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி வரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ–103)

# வெளிநாட்டு உதவிகளை பெற்று செயற்படுத்த கட்டமைப்பு தேவை

## ஆளுநர் பளிகக்காரவிடம் எடுத்துரைத்தார் வடமாகாண அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், செப். 26
வெளிநாட்டு உதவிகளைப் பெற்று செயற்படுத்துவதற்குரிய கட்டமைப்பு வடக்கு மாகாண சபைக்குத் தேவையாக இருக்கின்றது. அந்தக் கட்டமைப்புக்கான பெயர் தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இதற்கான அனுமதியை வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரப்பட்டுள்ளது என்று தெரிவித்த வடக்கு மாகாண அவைத் தலைவர், இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்துக்கான நியதிச் சட்டம் கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபையில் சமர்பிக்கப்பட்டது. இதற்கு வடக்கு மாகாணசபையில் அனுமதி வழங்கப்பட்ட போதும், குறித்த நியதிச் சட்டத்தை அங்கீகரிக்க அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அனுமதி மறுத்து விட்டார். இந்த நிலையில் குறித்த நியதிச் சட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

புதிய ஆளுநராக பளிகக்கார நியமிக்கப்பட்ட பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்துக்கான நியதிச் சட்டத்தின் அனுமதி தொடர்பில் பேசப்பட்டது. இதற்குரிய நடவடிக்கைகளை வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் முன்னெடுத்திருந்தார்.

முதலமைச்சர் நிதியம் என்ற பெயர் சட்டரீதியான சிக்கலுக்குரியதாக உள்ளது. மாகாணசபைச் சட்டங்களின் பிரகாரம், அவசரகால நிதியம், மாகாணசபை நிதியம் தவிர வேறு எந்த நிதியங்களையும் வைத்திருக்க முடியாது. வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்துக்கு மேற்படி காரணங்களைக் கூறி சட்டமா அதிபர் திணைக்களத்தினர் நிராகரித்துள்ளனர் என்று ... [illegible] ... யங்களை அவைத் தலைவருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் என்று தெரிய வருகின்றது.



அதனடிப்படையிலேயே, அவைத் தலைவர், பெயர் முக்கியமல்ல. வெளிநாட்டு உதவிகளைப் பெற்று செயற்படுத்துவதற்குரிய கட்டமைப்பே வடக்கு மாகாண சபைக்குத் தேவையாகவுள்ளது. அதற்கான அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு ஆளுநர், இது தொடர்பில் ஜனாதிபதியுடன் விரைவில் பேச்சு நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டது.

(ற–5)

### உயிர்முறைமை தொழில்நுட்ப பாடத்துக்கான பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.26
இந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பாடத்துக்குத் தோற்றிய மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளது. அதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் வகையில் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாதிரிப் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது. வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்துக்கான பரீட்சை கடந்த 16 ஆம் திகதி வ/செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. நேற்றும், இன்றும், நாளையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான மாதிரி செய்முறைப் பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இதுவரை இந்த மாதிரிப் பரீட்சையில் தோற்றாத மாணவர்கள் நாளை மறுதினம் மேற்படி கல்லூரிக்கு காலை 8.30 மணிக்கு சமுகம் தந்து மேற்படி பரீட்சையில் தோற்றலாம் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்தார்.

(ற–7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுக்குக் கையேந்தும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும்

## எச்சரிக்கின்றார் வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், செப். 26
எமது பகுதியில் இந்திய மீனவர்கள் இழுவைப் படகு மூலமாக மீன் பிடிப்பதையும், தடைசெய்யப்பட்ட செயல்முறைகளைப் பயன்படுத்தி எமது மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதையும் உடனடியாக நிறுத்த வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் எமது எதிர்காலச் சந்ததி கடல் வளத்துக்காக கையேந்தும் நிலை உருவாகும் – இவ்வாறு வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
அமைச்சின் அலுவலகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–
கடல் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான அதிகாரம் எந்த ஒரு மாகாண சபைக்கும் கிடையாது. மத்திய அரசிடமே அவை குவிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
கடல் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான நடைமுறைக்காக மக்களின் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை மேம்படுத்துவதற்காகக் குறித்த கடற்றொழிலாளர்களிடம் 6 அம்சங்கள் கூறப்பட்டு, அவை பற்றிய கருத்துக்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு வடக்கில் சகல கடற்றொழில்சார் சங்கங்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தன. மன்னார் மாவட்டத்தின் குறித்த ஒரு சங்கம் மட்டுமே அதனை வழங்கியுள்ளது. ஏனைய சங்கங்கள் வழங்கவில்லை.
மீனவ கிராமங்களில் எதிர்ப்பை சரி செய்யும் முகமாக முன்னெடுத்த குறித்த நடவடிக்கையை இவர்கள் கருத்தில் கொள்வதில்லை. இந்திய மீனவர் பிரச்சினைகளை எமது அரசியல்வாதிகள் அனைவரும் வாக்கு வங்கியாகச் செயற்படுத்தும் முகமாக இந்தப் பிரச்சினையைக் கையாளுகின்றனர். இது தொடர்பாக இருந்தால் எதிர்காலச் சந்ததியினர் கடல் வளங்களுக்காகக் கை ஏந்தும் நிலை உருவாகலாம். இதனைக் கருத்தில் கொண்டே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இது தொடர்பில் மனுக் கையளித்ததுடன், எமது ஜனாதிபதியின் கவனத்துக்கும் இரண்டுமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.
இத்தகைய நிலைசார் மாற்றம் உரிய முறையில் வழிநடத்தப்பட வேண்டும். இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தை வரவேற்கின்றேன்.
– என்றார். (ற–ரி5)

### கைக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன

கரணவாய், செப். 26
மந்திகைப் பகுதியில் மீட்கப்பட்ட 25 கைக்குண்டுகளும் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் குடத்தனைப் பகுதியில் வைத்து நேற்று வெடிக்க வைக்கப்பட்டன.
மந்திகைச் சந்திக்கு அண்மையிலுள்ள தனியார் வளவொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 25 கைக்குண்டுகள் கடந்த புதன்கிழமை பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரால் மீட்கப்பட்டன.
அந்தக் குண்டுகளே நேற்றுமுன்தினம் மதியம் குடத்தனைப் பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டன. (த–108)

### திருவிழா திருப்பலி

குருநகர், செப்.26
அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருப்பலி இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. திருவிழாத் திருப்பலி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் நடைபெறவுள்ளது. அதன் நிறைவில் புதிய ஆலயத்துக்கான அடிக்கல்லும் நடப்படவுள்ளது. (ற–51)

### சுவிஸ் – காரை. அபிவிருத்தி சபையின் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.26
சுவிஸ் – காரை அபிவிருத்தி சபையினால் நடத்தப்படும் கட்டுரைப் போட்டி இன்று நடைபெறவுள்ளது. பி.ப 3.00 மணிக்கு யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் .இந்த நிகழ்வு காரைநகரை பூர்வீகமாகவோ அல்லது பிறப்பிடமாகவோ கொண்ட மாணவர்களுக்கு மூன்று பிரிவுகளாக நடத்தபடவுள்ளது.
தரம் 7,8 மாணவர்கள் கீழ்ப்பிரிவாகவும் தரம் 10, 11 மாணவர்கள் மத்திய பிரிவாகவும் தரம் 12, 13, இந்த ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி கல்விபயிலும் மாணவர்கள் மேற்பிரிவாக்வும் கொள்ளப்படுவர். இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் இன்று நேரடியாக மண்டபத்துக்கு வருகை தந்து தம்மை அடையாளப்படுத்தியதன் பின்னர் போட்டியில் பங்குபற்றலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–10)

## மன்னார் தனியார் பஸ் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது



மன்னார், செப்.26
இ.போ.ச. பஸ். தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட தனியார் பஸ் சாரதியை விடுவிக்க வேண்டும் என்று தெரிவித்து, மன்னார் தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் மேற்கொண்டு வந்த பணிப்புறக்கணிப்பு நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்தது.
வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது. இந்தக் கூட்டம் கிராமிய அபிவிருத்தி மற்றும் போக்குவரத்துக்கான அமைச்சின் உப அலுவலகத்தில் நடைபெற்றது.
அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி அஜந்த ரொட்ரிக்கோ, மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிடோ லம்பேட் , மன்னார் வீதி போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சுமண சேகர, மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கொடியன் ஆகியோருடன்– நிர்வாக சபை உறுப்பினர்கள், பஸ் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.
எதிர்வரும் திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அங்கத்தவர்கள், இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிநிதிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் வடக்கு போக்குவரத்து அமைச்சர் ஆகியோர் பங்கு கொள்ளும் கலந்துரையாடல் ஏற்பாடு செய்வது என்றும், அதில் குறித்த பிரச்சினை தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் முடிவெடிக்கப்பட்டது.
அதையடுத்து பணிப்புறக்கணிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (ற)

### உண்டியல் உடைக்க முயன்ற சந்தேகநபருக்கு மறியல்

கரணவாய், செப். 26
புலோலி வேளாங்கண்ணி ஆலயத்தின் உண்டியலை உடைத்து திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.
குறித்த ஆலயத்தில் நேற்றுக் காலை 6 மணியளவில் உண்டியலை உடைத்து அதில் இருந்த பணத்தை திருட முற்பட்டபோது குறித்த இளைஞரை சுற்றிவளைத்த பொதுமக்கள் நன்றாகக் கவனித்த பின்னர் பருத்தித்துறைப் பொலிஸாரி[ம்] ஒப்படைத்தனர்.
குறித்த இளைஞரை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் கே.குமாரசாமி முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோது அவரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற–108)

## ஆளும்கட்சி உறுப்பினர் மகளுக்காக குரல் கொடுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், செப். 26
வடக்கு மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் மகளுக்கு, பாடசாலை நிர்வாகத்தால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர சாதாரணவகுப்பில்கல்விகற்கும் நல்விழி சசிதரன் என்ற மாணவி வடக்கு மாகாணத்தில் கராத்தேயில் காட்டா போட்டியில் 3 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார் எனத் தெரியவருகின்றது. கடந்த செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி தேசிய ரீதியில் நடைபெற்ற கராத்தே போட்டியில் இந்த மாணவி பங்குபற்றுவதற்கான ஒழுங்குகளை குறித்த பாடசாலை ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை என்பதை கெளரவ கல்வி அமைச்சர் அறிவாரா?
பாடசாலை நிர்வாகம் இந்த விடயத்தில் தான்தோற்றித்தனமாக நடந்து கொண்டது உண்மையெனில் இது தொடர்பில் அந்த நிர்வாகத்தின் மீது எடுக்கும் நடவடிக்கை என்ன?
சந்தர்ப்பத்தை இழந்த அந்த மாணவிக்கு எதிர்காலத்தில் வேறு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வியை எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்தார்.
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் கேள்வி எழுப்புவதற்காக, வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் குறித்த கேள்வியைச் சமர்ப்பித்திருந்தார். நிகழ்ச்சி நிரலிலும் சேர்க்கப்பட்டிருந்தது. எனினும் கேள்வி நேரத்தில் சபையில் கல்வி அமைச்சர் இருக்காமையால் குறித்த கேள்வி எடுத்துக் கொள்ளப்படவில்லை. (ற–5,101)

## திடீர் சோதனையில் சிக்கிய 37 வாகனங்கள் சீரற்றவை

### யாழ். மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 26
யாழ்.மாவட்டத்தில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளும் போக்குவரத்துப் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த திடீர் வாகனப் பரிசோதனை நடவடிக்கைகளில் 37 வாகனங்கள், போக்குவரத்துக்கு உகந்தவை இல்லை என்று இனங்காணப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.
யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் வாகனங்களைத் திடீர் சோதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளும், போக்குவரத்துப் பொலிஸாரும் இணைந்து இதனை முன்னெடுத்திருந்தனர். இதுவரையில் யாழ். மாவட்டத்தில், யாழ்.நகரிலும், நெல்லியடியிலும், தெல்லிப்பழையிலும் இவ்வாறு திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இந்தச் சோதனை நடவடிக்கைகளின்போது, வாகனங்களின் சமிக்ஞைகள், சில்லுறைகள், இயந்திர நிலைகள் மற்றும் வாகனத்தில் தேவையற்ற அலங்கார வேலைப்பாடுகள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பது உட்பட பல்வேறு விடயங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் பஸ்களும் இதன் போது விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
இதுவரையில் 132 வாகனங்கள் இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 37 வாகனங்கள், பாவனைக்கு உரிய முறையில் இல்லை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்வாறான வாகனங்கள், திருத்தங்களை மேற்கொண்ட பின்னரே பயன்படுத்துவதற்குரிய அனுமதி வழங்கப்படும் என்று மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ற–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு நிச்சயம்

## வாசுதேவ நாணயக்கார எம்.பி. நம்பிக்கை



கொழும்பு, செப்.26

இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையையும் அமெரிக்காவின் உத்தேச வரைவையும் இந்தியா எதிர்க்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐ.நாவின் தேவையை நிலைநாட்டவே அரசு பல்வேறு விசாரணைக் குழுக்களை அமைக்கவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பான அமெரிக்கப் பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நாவின் கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு நாம் இணங்க வேண்டிய அவசியமில்லை. இலங்கை இறையாண்மை கொண்ட நாடு. எமக்கென்று நீதித்துறை உள்ளது. எனவே எமது பிரச்சினைகளை நாமே விசாரிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக விசாரணையென்பது வெளிப்படைத் தன்மையாக அமைய வேண்டும். இதன்மூலம் எமது படையினர் மனித உரிமைகளை மீறியிருந்தால் அது தொடர்பான விசாரணைகள் உறுதிப்படுத்தப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் அரசு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேவைக்காக பல குழுக்களை அமைக்கவுள்ளது.

உண்மையைக் கண்டறியும் குழு, காணாமல்போனவர்களைக் கண்டறிவதற்கான குழு, அவர்களுக்கான நட்டஈடு வழங்குவதற்கான சபை, கருணைச் சபையென பல குழுக்களை அமைக்கவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவையனைத்தும் அவசியமற்றவை. சர்வதேச தேவைக்காகக் குழுக்களை அமைத்து விசாரணை செய்ய வேண்டிய தேவை கிடையாது. ஏற்கனவே உள்நாட்டில் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை போதும். இதற்கு மேலதிகமாக எதுவிதமான குழுக்களும் தேவையில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான ஐ.நா. அறிக்கையையும் அமெரிக்காவின் உத்தேச வரைவையும் இந்தியா எதிர்ப்பதுடன், இலங்கைக்கு ஆதரவை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ள அவர் அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கினால் இந்தியாவின் காஷ்மீர், நாகலாந்து பிரச்சினை தொடர்பாக விசாரிப்பதற்கும் கலப்பு நீதிமன்றம் தேவையென ஐ.நா. வலியுறுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா எமக்கு ஆதரவு வழங்குவது நிச்சயமாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ற)


# விசாரணை முடிந்த பின்னரே அரசின் நிலைப்பாடு அறிவிப்பு

## அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.26

அவன்கார்ட் கப்பல் ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் முழுமையாக விசாரணைகள் நடத்தப்பட்ட பின்பே அரசின் நிலைப்பாடு நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியம் தொடர்பாக எதிர்க் கட்சியின் பிரதம கொறடா அநுர குமார திஸாநாயக்க கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றினார். இதன்போது மேற்கண்ட விடயம் தொடர்பாக பல கேள்விகளையும் எழுப்பியிருந்தார்.



அநுரகுமார திஸாநாயக்கவின் கேள்விகளுக்கு பிறிதொரு தினத்தில் பதிலளிக்கப்படும் என சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அப் போது பதிலளித்தார்.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சபை அமர்வின் போதும் அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் அநுர குமார திஸா நாயக்க கருத்து வெளியிட்டார்.

அவன்கார்ட் ஆயுதக் களஞ்சிய சாலை சட்ட பூர்வமானது என்று சட்ட மா அதிபர், சபை முதல்வர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர். முன்னாள் கடற்படைத் தளபதி கூட இப்படித்தான் கூறியுள்ளார். எனவே இந்த விவகாரம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று வினா எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை பற்றி ஆராய வேண்டியுள்ளது. முழுமையாக விசாரணைகள் முடிந்த பின்னர் அரசின் நிலைப் பாடு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ற)

# மகிந்த தெரிவித்தவை கட்சியின் கருத்தல்ல

## டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, செப்.26

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிராகரித்தமையானது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கருத்தல்ல.– இவ்வாறு அந்தக் கட்சியின் பேச்சாளரும் பிரதியமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கையை நிராகரிக்கவேண்டும் என்று மகிந்த கோரிக்கை விடுத்திருந்தார். அது குறித்து நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த டிலான் பெரேரா, ராஜபக்சவின் கருத்து கட்சியின் கருத்தல்ல எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் தலைவர் என்ற வகையில் அது அவரது தனிப்பட்ட கருத்து என்று தெரிவித்த அவர், இந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் குழு ஒன்றை அமைத்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

அந்தக் குழு தற்போது அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# ஜனாதிபதியின் அதிகாரத்தால் தூக்கை நிறைவேற்ற முடியும்

## பிரசன்ன ரணதுங்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப்.26

குற்றச் செயல்களுக்காக விதிக்கப்படும் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் நாடாளுமன்றின் அனுமதி தேவையில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் தேசிய அரசுக்கு இருக்குமானால், அதனை ஜனாதிபதியின் அதிகாரத்தால் நிறைவேற்ற முடியும் எனக் குறிப்பிட்டுள்ள பிரசன்ன ரணதுங்க, அதற்காக நாடாளுமன்றின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியுள்ளார்.

எனினும் ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் ஜனாதிபதி அதனை நாடாளுமன்றின் பொறுப்புக்கு விட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்த எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்று ஜெனிவாவில் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் ஜனாதிபதி காலியில் தெரிவித்த கருத்தையா? அல்லது மங்கள ஜெனிவாவில் வெளியிட்ட கருத்தையா மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று புரியவில்லை என்றும் பிரசன்ன தெரிவித்துள்ளார். (ற)

# இராணுவத்தைக் காப்பாற்றவே உள்ளகப் பொறிமுறை கோரல்

## அமைச்சர் சம்பிக்க கூறுகின்றார்



கொழும்பு, செப்.26

சர்வதேச விசாரணைகளில் இருந்து தப்பவேண்டும் என நினைப்பது மகிந்த ராஜபக்சவைக் காப்பாற்றும் நோக்கத்தில் அல்ல. எமது இராணுவத்தையும் நாட்டையும் காப்பாற்றவே உள்ளக பொறிமுறைகளை கோருகின்றோம். – இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படுகின்றது. அதில் உண்மைத் தன்மைகளை கண்டறிய வேண்டும். ஆனால் அந்த நடவடிக்கைகளின் மூலம் நாட்டை மீண்டும் பழைய ஆயுதக் கலாசாரத்துக் கொண்டு செல்வதை நாம் அனுமதிக்க மாட்டோம். போர் முடிவடைந்து நாட்டில் அமைதியான சூழலொன்று உருவாகினாலும் நாட்டில் மூவின மக்களின் மனங்களை யும் வென்றெடுக்க முடியாமல் போய் விட்டது. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்துக்கான தேசிய முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் மனங்களை வென்றெடுக்க முடியாது போனமை போன்று சர்வதேசத்தையும் தக்கவைக்க முடியாமல் போய்விட்டது. அதற்கு எமது உள்ளகச் செயற்பாடுகளும் எமது வெளிநாட்டுக் கொள்கையுமே காரணமாகும். சர்வதேச சவால்களைச் சமாளிக்க அரசால் நியமிக்கப்பட்ட நபர்களும் எமது வெளிநாட்டுக் கொள்கையும் முழுமையாக பக்கச்சார்பான, நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளாகவே அமைந்தன. வெளிவிவகார அமைச்சர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அடிமையாக செயற்பட்டார். – என்றும் அவர் அதன்போது சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அதேபோன்று எமது நாட்டைச் சீரழிக்கும் வகையிலேயே மகிந்தவின் வெளிநாட்டுக் கொள்கையும் அமைந்தது. கடந்த அரசிலும் நாம் அங்கம் வகித்திருந்தோம். அதேபோல் இந்த அரசிலும் நாம் அங்கம் வகித்துச் செயற்படுகின்றோம். ஆகவே இரண்டு அரசுகளினது செயற்பாடுகளையும் எம்மால் நன்றாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மகிந்தவின் அரசில் செய்ய முடியாத அனைத்தும் இந்த அரசின் மூலம் செய்து காட்டியுள்ளோம். மூவின மக்களின் மனங்களையும் வென்றெடுத்து ஜனநாயக ரீதியிலான ஆட்சியை அமைத்துள்ளோம். அதேபோல் சர்வதேச உறவையும் பலப்படுத்தியுள்ளோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தீர்மானங்கள் மற்றும் சர்வதேச நாடுகளுடன் முன்னெடுக்கும் ராஜதந்திர நகர்வுகள் என்பன நாட்டைச் சரியான பாதையில் வழி நடத்துகின்றன.

இன்றும் மகிந்தவின் கொள்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் நாட்டின் நிலைமை மாறியிருக்கும். மகிந்த இன்றும் ஆட்சியில் இருந்திருந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகள் கடினமானதாக அமைந்திருக்கும். மகிந்த சர்வதேச நீதிமன்றின் தலையீட்டுடன் கைது செய்யப்பட்டிருப்பார். அதேபோல் இராணுவமும் குற்றவாளிகள் என ஒரு தீர்மானம் முன்னெடுக்கப்பட்டிருக்கும்.

அவ்வாறான சூழ்நிலையில் இருந்து நிலைமைகள் மாறியுள்ளன. அதேபோல் சர்வதேச விசாரணைகள் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் நாம் உள்ளகப் பொறிமுறையைக் கோருவது மகிந்த ராஜபக்சவை காப்பாற்றும் நோக்கத்திலோ அல்லது அவரது செயற்பாடுகளை மூடி மறைக்கும் நோக்கத்திலோ அல்ல. எமது நாட்டையும் எமது இராணுவத்தையும் காப்பாற்றவே நாம் உள்ளகப் பொறிமுறையைக் கோருகிறோம் – என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்ப உறுப்பினர்கள், உங்கள் திறமை மிக்க பணியை மனதாரப் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். பணவரவு திருப்திகரமாகும். வெகு நாள் வாங்க நினைத்த வீட்டு உபயோகப் பொருளை வாங்குவீர்கள்.

**இடபம்:** பேச்சைக் குறைத்து, வேலையில் நிதானத்துடன் செயல்படவும். பணவரவு சுமாராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். ஆடம்பர பொருள்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்:** தைரியம் நிறைந்த மனதுடன் பணிபுரிவது அவசியம். சுய இலாபத்திற்காக, சிலர் செய்ய முன்வரும் உதவியை ஏற்க வேண்டாம். கடின உழைப்பினால், உற்பத்தி, விற்பனை சீராகும். செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவது நல்லது. உடல் நலத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் இரக்க சிந்தனை வளரும். நண்பர்கள், உறவினர்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**சிங்கம்:** வெகுநாளாக எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். குடும்ப உறுப்பினர்கள் உங்களது பணித் திறமையை பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணம், கொடுக்கல் வாங்கல் சீராகும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** நண்பர்களின் குறையைப் பெரிதுபடுத்திப் பேச வேண்டாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய அவகாசம் தேவைப்படும். அத்தியாவசிய செலவுகளுக்கு கடன் வாங்க நேரிடலாம். தாயின் ஆறுதல் வார்த்தை மனதிற்கு நம்பிக்கைத் தரும்.

**துலாம்:** பணிகளில் முழுமனதுடன் ஈடுபடுவதால் உரிய நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் ஓரளவுக்கு இருக்கும். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனதுக்கு சாந்த குணம் உருவாகும்.


**விருச்சிகம்:** இனிமையாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். நண்பர்களிடம், உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கை எளிதாக எட்டுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** தகுதிக்கு மீறி வாக்குறுதி வழங்க வேண்டாம். கடும் உழைப்பினால் மட்டுமே தொழில், வியாபாரத்தில் இலாபம் பார்க்க முடியும். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**மகரம்:** முன்யோசனையுடன் செயற்படுவீர்கள்; நடக்கும் பணிகளில், முழு அளவிலான நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். வீட்டை அழகுபடுத்த பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** பொது இடத்தில், சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளைத் தாமதமின்றிச் சரி செய்யுங்கள். எதிர்பாராத வகையில், புதிய இனங்களில் செலவு ஏற்படலாம். உடல்நிலையில் சிறு பிரச்னை வந்து நீங்கும்.

**மீனம்:** எதிரிகள் விலகிப் போவர். புதிய நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்துக்கு நல்ல ஆலோசனை வழங்கி வெகுமதி பெறுவீர்கள்.



## அஜித்தின் வேதாளம் இரசிகர்களை மிரட்டுமா..?

சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வரும் படத்துக்கு 'வேதாளம்' எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அனிருத்தின் இசையில். ஸ்ருதி ஹாசன், லட்சுமி மேனன், சூரி மற்றும் பலர்நடித்துள்ள இப்படத்தின் தலைப்பு தொடர்பான கருத்துக்கள் நீண்ட நாள்களாக இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் திரைப்படத் தலைப்பு, அறிமுக புகைப் படங்களும் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

படத்தின் கதைப்படி நிகழ்கால, மற்றும் திருப்புக்காட்சி என இரு கதைகள் உள்ளனவாம். இதில் வேதாளம் என்பது திருப்புக் காட்சியில் வரும் அஜித்தின் கதாபாத்திரமாம். மேலும் அஜித்தின் அறிமுக புகைப்படங்களில் உள்ள மொட்டைத் தலை, காதில் கடுக்கன், கையில் காப்பு என தாதா தோற்றத்தில் தான் திருப்புக்காட்சியில் வருகிறாராம் அஜித். படத்தில் அஜித் இரு கதாபாத்திரங்களில் நடிக்கவில்லை. ஒரு அஜித் தான் தாதாவாக திருப்புக் காட்சிகளில் மிரட்ட உள்ளார். அந்த கதாபாத்திரத்தின் பெயர்தான் வேதாளம். இந்த கதாபாத்தி ரத்தின் முக்கியம் கருதியே தலைப்பு இடப்பட்டுள்ளது எனவும். படத்தின் தலைப்பு ஏற்கனவே வேறு ஒரு நடிகரால் பதிவுசெய்யப் பட்டிருந்தபோதிலும், அஜித்துக்காக தலைப்பை அவர் வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

மேலும் படத்தின் ஒரு பாடல் காட்சியும், ஒரு சண்டைக் காட்சிக்கான படப்பிடிப்பும் மட்டுமே மீதியிருக்கிறது. இந்த நிலையில் துரிதமாக பணிகளை நிறைவுசெய்து படத்தைத் திபாவளிக்கு வெளியிடுவதற்கு படக்குழு தீர்மானித்துள்ளதாம். பாகுபலி ஏற்படுத்திய தாக்கத்தால் ஹிந்தியில் தென்னிந்தியப் படங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருப்பதால். பாகுபலி மற்றும் புலி திரைப்படங் களைத் தொடர்ந்து தற்போது வேதாளம் திரைப்படமும் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் வெளிவரவுள்ளமை குறிப் பிடத்தக்கது. எது எப்படியோ அஜித்தின் அறிமுகப் புகைப் படங்கள் இரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்பதில் மட்டும் சந்தேகமில்லை.



ஆயுள் தண்டனை வேணும்னா "காதல் செய்"......



மரண தண்டனை வேணும்னா "திருமணம் செய்"......




நிம்மதியா இருக்கணும்னா உன் "வேலையை மட்டும் செய்"......






விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்

மன்னிப்பு கொடுங்கள் தவறுகள் குறையும்

மனம் விட்டு பேசுங்கள் அன்பு அதிகமாகும்...

பரிணாம வீழ்ச்சி
*Devolution*






## பித்தனின் சிந்தனை

பாடசாலை ஒன்றில் எட்டு வயதுடைய சிறுமியிடம் முன்பின் தெரி... [illegible] உன்னை அழைத்து வரச்சொல்லி உன்னுடைய அப்பா என்னை அனுப்பி வைத்துள்ளார். வா போகலாம் என்று அழைத் திருக்கின்றான்.

உடனே அந்தச் சிறுமி, கடவுச்சொல்லைச் சொல்லுங்கள், உங்களுடன் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாள். அதாவது முன் பின் தெரியாத யாராவது உன்னை அழைத்தால் இந்தக் கடவுச்சொல்லைக் கேட்டுத் தெரிந்துகொண்டு செல் என்று முன்னரே அச்சிறுமியின் தந்தை, சிறுமியிடம் ஒரு கடவுச் சொல்லை பகிர்ந்து வைத்திருந்திருக்கிறார்.

சிறுமி கடவுச்சொல்லைக் கேட்டதும் அந்தக் கடத்தல்காரன் [illegible] பாடசாலை [illegible] இந்தக் கடவுச்சொல் முறையை செயல்படுத்திப் பாருங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு தீர்வு வேண்டி யாழில் இன்று விசேட பிரார்த்தனை

யாழ்ப்பாணம், செப்.26
நீண்ட நெடுநாள்களாகத் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகிட்ட வேண்டி, யாழில் இன்று விசேட அபிஷேகமும் ஆராதனையும், பிரார்த்தனை வழிபாடும் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமான் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 6மணிவரை இந்த வழிபாடு இடம்பெறவுள்ளது. அத்துடன் இலங்கைத் திருநாடு புனித பூமியாக மலர இறை ஆசி வேண்டியும், தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டியும் இந்தப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் ஆசாரசீலர்களாக அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-ரி2)

# வைத்தியர்கள் கடமையில் இருந்தும் சிகிச்சைக்கு காத்திருக்கும் நோயாளர்கள்

## சாவகச்சேரி வைத்தியசாலையின் அவலநிலை

சாவகச்சேரி,செப் 26
சாவகச்சேரி வைத்தியசாலையில் நீண்டவரிசையில் நூறுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவில் காத்திருக்கும் நிலையில் கருமபீடத்தில் ஒரு பணியாளர் மட்டுமே கடமையில் உள்ளார். இதனால் வைத்தியர்கள் இருந்தும் நோயாளர்கள் கருமபீடத்தில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
சாவகச்சேரி வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் நான்கு வைத்தியர்கள் கடமையாற்றுகின்ற போதிலும் வெளிநோயாளர்களுக்கு மருந்துச்சிட்டை கொடுப் பதற்கும், வாகனங்களில் கொண்டுவரப்படும் நோயாளர்களை தள்ளுவண்டியில் வைத்தியரின் அறைக்குக் கொண்டு செல்வதற்குமென ஒரு பணியாளர் பணியாற்றுவதால், நோயாளர்களுக்காக காத்திருக்க வேண்டியநிலை வைத்தியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.
கருமபீடத்தில் ஒரு பணியாளர் மட்டும் கடமையாற்றுவதால் தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் வைத்திய பரிசோதனை பெற நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முன்னர் வெளி நோயாளர் பிரிவுக் கருமபீடத்தில் நான்கு பணியாளர்கள் கடமையாற்றியதால் அனைத்து நோயாளர்களையும் உடனுக்குடன் மருந்துச்சிட்டை கொடுத்து வைத்தியரின் அறைக்கு அனுப்பிய துடன் வாகனங்களில் கொண்டு வரப்படும் அவசர நோயாளர் களையும் அழைத்துச் சென்றனர். தற்போது வைத்தியசாலையில் கடமையாற்றிய தனியார் நிறுவன சுகாதாரப் பணியாளர்களின் சேவை நிறுத்தப்பட்டதால் நோயாளர் கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப் படு கிறது. தனியார் சுகாதார நிறுவனப் பணியாளர்கள் மேற்கொண்ட பணிகளை வைத்தியசாலையில் ஏனைய பணிகளில் கடமையாற்றிய சுகாதார உதவியாளர் கள் மேற்கொள்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பொது விடுமுறை என்பதால் முற்பகல் 10 மணியுடன் கருமபீடம் மூடப் பட்டதால் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச் சென்றமையும் அவதானிக்க முடிந்தது. (ஐ)

# போதைப் பொருள் பாவனை வவுனியாவில் அதிகரிப்பு

## பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வவுனியா,செப்.26
வவுனியா மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் மது பாவனை அதிகரித்துள்ளது.
இதனைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்குத் தேவை என்று ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி சமன்குமார தெரிவித்தார். ஓமந்தை வீட்டுத் திட்டதில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்குடன் பொலிஸாருக்கும் அரச ஊழியர்களுக்கும் இடையிலான விழிப் புணர்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டக் கிராமத்தில் இடம்பெற்றது. இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கும்போது வவுனியா மாவட்டம் கஞ்சா கடத்தும் மைய மாகத் திகழ்கிறது. பலதடவை நாம் கஞ்சா கடத்தியவர்களைப் பிடித்துள்ளோம். களவுகள் பலவும் வவுனியாவில் இடம்பெற்றுள்ளன. அவற்றுடன் சம்பந்தப்பட்ட பலரைக் கைது செய்துள்ளோம் தற்சமயம் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு பிண்ணனியில் இருப்பவர் களை எமக்குத் தெரியும். இந்த வீட்டுத்திட்டத்துக்கு அருகில் உள்ள கிராமத்தில் உள்ளவர்கள், இங்கு தொழிலின் நிமித்தம் வருகை தரும் கூலியாள்கள், மேசன்மார்கள் என்பது எமது புலனாய்வு செயற்பாடு மூலம் தெரியவந்துள்ளது. புதிதாக இந்தப் பகுதிக்கு வேலைக்கு வருபவர்கள் மற்றும் வீடுகளில் தங்கி நிற்கும் மேசன்மார், கூலியாள்கள் பற்றிய விவரத்தை எமக்கு கையளிப்பதன் மூலமும், சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடும் நபர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலமும், திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க முடியும். அரசஊழியர்கள் நலன்களைப் பேணவும் அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் நாம் தயாராகவுள்ளோம். எனவே இத்தகைய குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு மக்களது பங்களிப்பு பொலிஸாருக்குத் தேவை. சந்தேகத்துக்கிடமானவர்கள் தொடர்பான தகவல்களையும், சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பான தகவல்களையும் மக்கள் பொலிஸாருக்கு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ-402)



# ஆக்கங்களின் தொகுப்பு நூல் வெளியீடு

சாவகச்சேரி,செப்.26
கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் கைதடியூர் வே.தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண மண்ணின் நினைவுகளை எடுத்தியம்பல் குறித்தான ஆக்கங்களின் தொகுப்பு நூலான யாழ்ப்பாண நினைவுகள் பாகம்- 2 இன் வெளியீட்டு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூல் அறிமுகவுரையை மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன் நிகழ்த்துவார்.(ஐ)

# குருபூசையும் விரலிசை நாதமும் சிவகுருநாத பீடத்தில் நாளை

யாழ்ப்பாணம், செப் 26
கடையிற் சுவாமிகளின் 124 ஆவது வருடாந்தக் குருபூசை நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றை தினம் பிற்பகல் விரலிசை நாதம் நிகழ்வு இடம்பெறவுள்ளது. யாழ்.கந்தர்மடத்திலுள்ள ஸ்ரீ சிவ குருநாத பீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்தமடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் குருபூசையைத் தொடர்ந்து பண்ணி சைக் கச்சேரி இடம்பெறும். தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் மற்றும் தமிழ்நாடு ஓதுவார் மூர்த்தி தேவார இசைமணி குமாரசாமி இராமச்சந்திரன் ஆகியோர் பண்ணிசைக் கச்சேரியை நடத்தவுள்ளனர். பக்க வாத்தியங்களாக சியாமகிருஷ்ணாவின் வயலினும், செல்வச்சந்திரனின் ஆர்மோனியமும், துர்ரைராஜா வின் மிருதங்கமும், வேல்மாற னின் தபேலாவும் இடம்பெறவுள் ளன. குருமாரின் சமாதிகளுக்கு அபிஷேகம், ஆராதனை, பூசை வழிபாடுகளும் மற்றும் திருமுறை களும் வாழ்க்கை முறைகளும் எனும் தொனிப் பொருளில் குமார சாமி இராமச்சந்திரனின் சொற் பொழிவும் இடம்பெறும். தொடர்ந்து மகே ஸ்வர பூசை இடம்பெறும். அன்றைய தினம் பிற்பகல் 6.15 மணிக்கு விரலிசை நாதம் இடம் பெறவுள்ளது. திருமதி விதுர்ஷா கோபிகிருஷ்ணா குழுவினர் (சாகித் திய வீணாலயா) வீணை இசையும் கே.அனந்த கோபனின் மிருதங்கமும் இடம்பெறவுள்ளன. (ஐ-4)

# ஆவணக் காப்பகத்தில் கருத்துரை நிகழ்வு

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 21 ஆவது நிகழ்வாக இலங்கையில் அல்பேட் டியூரர் எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.199, கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக்காப்பகத்தில் நடைபெறவுள்ளது. சிங்கப்பூர் நன் யாங் பல்கலைக்கழகத்தின் கலைவரலாற்றுத்துறை துணைப் பேராசிரியர் சுஜாதா மீகம இந்த சிறப்புரையை நிகழ்த்துவார். (ஐ-10)


**காணி விற்பனைக்கு**
பலாலி வீதி, தபால் பெட்டி சந்திக்கருகில் நி.பர.2 குளி 12.37 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
(64794) (13.15.
தொடர்புகளுக்கு
077 977 3375, 0047 400 42067

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி நல்லூர் வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(83762)(12.3.7) தொடர்பு: 077 614 6434

**தேவை**
யாழ் நகரில் இயங்கும் அச்சகத்துக்கு அச்சு இயந்திர இயக்குநர்கள் தேவை. (KORA)
தொடர்பு: 0771659845

**வேலையாள்கள் தேவை**
யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாயில் இயங்கும் தையலகத்துக்கு தையல் வேலை தெரிந்த பெண் வேலையாள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு : 077 9521373

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கொழும்புத் துறை சுவாமியார் வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 614 6434

**விற்பனைக்கு**
மொடல் நம்பர் - 21 MP 90 மோட்டார் சைக்கிள் G.Q-XXXX மற்றும் ஜெனரேற்றர் 2000 W கொம்பிறே சன் இவை விற்பனைக்கு உள்ளன.
தொடர்புகளுக்கு: 077 930 9193
(64218)(12.13)

**தவறிவிட்டது**
சங்குவேலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் உருத்திரகுமார் ஆகிய எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், A.T.M card (இலங்கை வங்கி) ஆகியன 12.09.2015 அன்று சங்கானை சந்தைக்கும் H.N.B வங்கிக்கும் இடையில் தொலைந்து விட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 0770570479, 0772066096

**விற்பனைக்கு**
பொமேரியன் ஆண், பெண் நாய்களும், டாசோன் ஆண், பெண் நாயும், 60 நாள் பொமேரியன் குட்டிகளும், பொக்கட்ஸ் பெனியர் குட்டி களும், வான் கோழி, வெள்ளடியன், வன்ரம், சில்க்கி கினிகோழி, வாமஸ் விற்பனைக்கு.
தொடர்பு : மயூரன் பாம் சென்ரர், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோவில் பின் வீதி.

**கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம்**
**வருடாந்த பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும்**
மேற்படி நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் 27.09.2015 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி கரைச்சிப் பலநோக்குக் கூட்டுறவு பண்பாட்டு மண்டபத்தில் தலைவர் த.ஜெகதீஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.
க.ஜமுனாதரன்
செயலாளர்.
(63617)(11,13,16)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்**
**இடை நிறுத்தப்பட்ட விரிவுரைகள் மீள ஆரம்பம்**
யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான இடைநிறுத்தி வைக்கப்பட்ட விரி வுரைகள் யாவும் மீண்டும் எதிர்வரும் 28.09.2015 திங்கட் கிழமை ஆரம்பமாகின்றன. மேற்படி மாணவர்கள் அனை வரையும் காலை 8.30 மணிக்கு கைலாசபதிகலையரங்கில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
விடுதிவசதிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் 26.09.2015 சனிக்கிழமையில் இருந்து விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.
பீடாதிபதி.
25.09.2015
(19376)(14,15,16)

**மணமக்கள் தேவை**
* 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 15½ பாவமுடைய அமெரிக்கா பிரஜாஉரிமைபெற்ற ஆக்கிரெக் மணமகளுக்கு இஞ்சினியர் மணமகன் தேவை.
* 87 இல் பிறந்த 8இல் செவ்வாய் 27¾ பாவமுடைய ஆஸ்திரேலிய பிரஜாஉரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு இஞ்சினியர் IT முடித்த மணமகன்தேவை.
* 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 30 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த 8இல் செவ்வாய் 19 பாவமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு வேலை உள்ள அல்லது வேலை இல்லாத மணமகள் தேவை.
* 77 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற IT மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 36½ பாவமுடைய அமெரிக்கா பிரஜா உரிமை பெற்ற சொப்ட்வெயார் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலை, ஏ9 மாவடி.
077 6607 0862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை

## சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள் கவலை

சாவகச்சேரி, செப்.26

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களால் ஆட்சிக் கால இறுதியில் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட வேலைத் திட்டங்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி நீதிமன்றால் குற்றப் பணமாக அறவிட்ட தொகையும் மற்றும் காணிப் பதிவு அலுவலகத்தால் முத்திரை வரியாக அறவிடப்பட்ட தொகையுமாக 16 மில்லியன் ரூபா சாவகச்சேரி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டது. சபையின் 15 உறுப்பினர்களுக்கும் தலா ஒரு மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களை முன்மொழியுமாறும் கோரப்பட்டது. அதையடுத்து கிணறு, குளம், வாய்க்கால், வீதி வேலைகள் போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

ஆயினும் சபை கலைக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படாமை குறித்து சபையின் முன்னாள் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

மழை காலம் ஆரம்பிக்க முன்னர் கிணறு அமைத்தல், குளம் ஆழமாக்கல், வாய்க்கால்கள் புனரமைத்தல் போன்ற வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டும். ஆனால் இதுவரை எந்தவொரு வேலையையும் தற்போதைய நிர்வாகத்தரப்பு ஆரம்பிக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். (ற)

### கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 14.10.1969 மறைவு 25.09.2015

எமது பாடசாலையில் நீண்டகாலமாக தன்னலம் கருதாத சேவையாற்றி வருகின்ற **திருமதி மா.தர்சினி** (மைதிலி) அவர்களின் அன்புக் கணவர்

**ச.மாதவமணிவண்ணனின்**

திடீர் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

### மரண அறிவித்தல்

**கிருஷ்ணசாமி செல்வரத்தினம்**

பிறப்பு 03 . 05 . 1942



இறப்பு 20 . 09 . 2015

சரசாலை வடக்கு, சாவகச்சேரியினைப் பிறப்பிடமாகவும், மயூராபதி வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி செல்வரத்தினம் அம்மையார் 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும், மமிலாவின் (லண்டன்) பாசமிகு தாயாரும், கேதீஸ்வரரூபனின் (ஈசன் - லண்டன்) பாசமிகு மாமியாரும், விக்னேஸ், குமரேஸ் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.09.2015 சனிக்கிழமை மகிந்த மலர்ச்சாலையில் கல்கிசையில் (Mahinda Funeral Directors Mt. Lavania) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை கல்கிசை பொது மயானத்தில் மு.ப 10.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0112507155, 0773212886,
0773676748

தகவல் - குடும்பத்தினர்.

### இதய அஞ்சலி

எமது பாடசாலை பிரதி அதிபர் திருமதி லலிதா ரவீந்திரராசா அவர்களின் அன்புத் தந்தையார் **வைரமுத்து சபாரட்ணம்** அவர்கள் 27.08.2015 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(64916)(13.15)

### மரண அறிவித்தல்

**திருமதி இரத்தினேஸ்வரி அருளானந்தம்**



பிறப்பு 13.10.1935 இறப்பு 24.09.2015

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி அருளானந்தம் 24.09.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - பொன்னம்மா தம்பதியின ரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செ.அருளானந்தத்தின் பாசமிகு மனைவியும், விமலாதேவி, ஜீவானந்தன் (நீர்ப்பாசன திணைக் களம் - திருகோணமலை), செல்வகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவ ராஜா (ஓய்வுபெற்ற நீதிமன்ற சுருக்கெழுத் தாளர்), கலாதேவி, சுகந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கேதாரணி, துஷ்காந்தினி (கொமிற்றி நிப்போட்டர், பாராளுமன்றம்), ரஜீவன், கஜீபன், அருணன் (கனடா), அருஷ்ணவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணியளவில் திருகோணமலை, மின்சார நிலைய வீதி, இல.101 இல் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.101, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.
தொ.பே - 0771580268

தகவல் :- மகன் அ.ஜீவானந்தன்

# நிரந்தர நியமனம் கோரி ஆசிரியர்கள் போராட்டம்

வவுனியா சிங்களக் கோட்ட மட்டப் பாடசாலைகளில் அமைய அடிப்படையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி இரண்டு நாள்களாக அமை தியான முறையில் போராட்டம் ஒன்றை மேற் கொண்டுள்ளனர். வவுனியா சிங்கள கோட்ட மட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஒரு வருடமாக கடமையாற்றிய சுமார் 60 ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு ஏற்கனவே கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர். எனினும் கல்வியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் மனமுடைந்துள்ள ஆசிரியர்கள் கடந்த 22, 23 ஆம் திகதிகளில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பாக பதாகைகளைத் தாங்கி அமைதியான முறையில் தமக்கு நிரந்த நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா சிங்களக் கோட்டக் கல்விப் பணிமனையும், வவுனியா தெற்கு கல்வி வலயத்தினரும் மேலதிகாரிகளின் கவனத்துக்குத் தெரியப் படுத்தியுள்ளனர்

நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும், இல்லையேல் எமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-402)


# சிறைக் கைதிகளுக்கு கைப்பணிப் பயிற்சி

பனை அபிவிருத்திச் சபை யாழ். சிறைச்சாலையில் தங்கியிருக்கும் கைதிகளுக்கு பனம்பொருள் உற்பத்திக் கைப்பணிப் பயிற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சிறைச்சாலையில் உள்ள சுமார் இருபது கைதிகளுக்கு 6 மாதங்கள் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. சிறைச்சாலையில் 6 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கே இந்தப் பனம் உற்பத்தி, கைப் பணிப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் எஸ். கோகுலதாசன் இந்தக் கைதிகளுக்கான பயிற்சிகளை ஆரம்பித்து வைத்துள்ளார். சபையின் பொது முகாமையாளர் பி.லோகநாதன், விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.சிறைக்கைதிகளுக்கான இந்த 6 மாதங்களுக்கான பயிற்சிநெறி முடிவில் அவர்களுக்கான பயிற்சிக்கான உபகரணங்கள்மற்றும்பொருள்களை பனை அபிவிருத்திச் சபை வழங்கும் என்றும் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-17)

### மரண அறிவித்தல்

**இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் (ஆசை)**



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி - ஜெகதீஸ்வரன் (ஆசை) 22.09.2015 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (அப்பாத் துரை) - மனோன்மணி (பட்டு) தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமித்துரை - பிள்ளையம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (வசந்தி) யின் அன்புக் கணவரும் சுத்தானந்தன்(ஸ்ரீ), சந்திரலீலா, சந்திரமோகனா, சத்தியானந்தன் (ராசன்), சந்திரகாந்தா, கிருபானந்தன் (ஈசன் - பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரவசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாவித்திரி, செல்வராஜா, பத்மநரதன், தர்மலதா, கோபிநாதன், குமுதா, புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், விஜயலக்சுமி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உமாசுதன், கனேசுதன் (ஆஸ்திரேலியா), பிரமிளா(UK), கஜிந்தா(UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபா, ரதிவதனா(ஆஸ்திரேலியா), மதனசூரியா(UK), பவதீசன் (UK) ஆகியோரின் அன்புமாமனாரும் நிஷோத்ரா, யாதவி, டஸ்வின், ரேனுஜன், கிஷாரா, ஆரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்துமயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 205 3142,077 981 4312

தகவல்: குடும்பத்தினர்.

(64674)(14.15)

### மரண அறிவித்தல்

**கார்த்திகேசு ஆறுமுகம்**



மலர்வு 13.03.1930 உதிர்வு 24.09.2015

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சிவிக்ஸ் சென்ரர், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் 24.09.2015 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இறைவடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விநாசித்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வேலுப்பிள்ளை,தங்கம்மா, நிர்மலநாதன் ஆகியோரின் மைத்துனரும், பவானந்தன் (ஆனந்தன்), காலஞ்சென்ற நித்தியானந்தன்,சதானந்தன் (அமுதன்),புவனலோஜினி (லோஜி), சுதானந்தன் (வரதன்), யோகானந்தன் (நந்தன், நீதன் -லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாணி, சுமதி, தீபா ஆகியோரின் அன்பு மாமனும், அட்சயன், நிலாந்தன், தேவமைந்தன், மிதுசன், கிசோபன், கவிசன், நிஹித்தா, ஹனித்தா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வட்டக்கச்சி பன்னங்கட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.743, சிவிக்ஸ்சென்ரர்,
வட்டக்கச்சி

(சி 19273) (13.15)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்கிய குடும்ப அட்டையை தரவில்லை பிரதேச செயலகம்

## எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் கவலை

சாவகச்சேரி, செப்.26

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் மீளாய்வுக்கென எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட குடும்ப அட்டைகள் நீண்ட நாள்களாகியும் இன்னமும் மீள வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அட்டைகளைப் பிரதேச செயலகம் பெற்று நான்கு மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் மீள வழங்கப்படவில்லையென அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குடும்ப அட்டையை பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்றும் பிரதேச செயலகம் அவற்றை இன்னமும் மீள வழங்காதுள்ளது என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (ற)


**NSB National Savings Bank** **பகிரங்க ஏல விற்பனை**

**தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் அடகுவைக்கப்பட்டு 31.05.2014 வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 26.09.2015 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.**

1) காரைநகர்
2) மல்லாவி
3) கிளிநொச்சி

**ஏலத்தை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.**
**வடபிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி.**


# விதிமுறை மீறிய சாரதிக்கு அபராதம்

சாவகச்சேரி, செப்.26

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சாரதியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை 10ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குறித்த சாரதிக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

அதேவேளை, அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்ட நேரத்தைத் தாண்டி வாகனத்தில் மணல் ஏற்றி வந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட வாகனச் சாரதியொருவருக்கும் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற)

# பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

யாழ்ப்பாணம், செப்.26

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறும் புதிதாக இணைய விரும்புகிறவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-4)


**செய்து கொடுக்கப்படும்**

இந்தியா, நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து இயற்கைப் பூக்கள் வரவழைத்து திருமண மாலைகள், ஆண்டாள் மாலைகள் மற்றும் சடநாகங்கள் என்பன செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு : 076 801 9006**


**வீதிப்பெயர்மாற்ற அறிவித்தல்**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள மகாறம்பைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள கீழ் வரும் வீதிக்கு இப்பெயர் மாற்றம் தொடர்பாக தங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இருக்குமிடத்து இவ்வறிவித்தல் திகதியிலிருந்து ஒரு வாரகாலத்திற்குள் (7 நாள்கள்) செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அறியத்தரவும்.

கிராமம்: மகாறம்பைக்குளம்
வீதியின் தற்போதைய பெயர்: சாந்தசோலை மூன்றாம் ஒழுங்கை
உத்தேசிக்கப்பட்ட புதுப்பெயர்: திருமூலர் வீதி

சுகந்தி கிஷோர்,
செயலாளர்,
வவுனியா தெற்கு , தமிழ் பிரதேச சபை. (10368)(14,15,16)


தேரேறி வரும் வல்லிபுர ஆழ்வார் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

**e Mobile & Lap Mart**

- Unlocking
- Spare Parts
- All Kind Of Cellular Phone Sales
- Software & Hardware Solutions
- Lap Accessories & Lap Repair




Main Street
Nelliady,
T.P : 021 226 1414
077 411 5544


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



அகவை அறுபதில்
கால் பதிக்கும்
இறை பணியாளர்
அருட்திரு
**வரதுங்கம் இராஜ்குமார்**
அவர்களை
நலமுடன் வாழ்ந்து
இறைபணியாற்ற
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

இறைபணியாளர்கள்
அமெரிக்கன் சிலோன் மிஷன்
திருச்சபை.

**மனிதநேயப் பணியில் இணைந்துகொள்ள விரும்புகிறீர்களா?**

மன்னார்,திருக்கேதீச்சரம் சிவன் அருள் இல்லம், சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு மனிதநேயப் பணியாளர்கள் தேவை.

| | | |
|---|---|---|
| நிர்வாக அலுவலர் | (ஆண்) | - 01 |
| இல்லமேற்பார்வையாளர் | (ஆண்) | - 02 |
| இல்லமேற்பார்வையாளர் | (பெண்) | - 02 |
| நிர்வாக உதவியாளர் | (பெண்) | - 01 |

**தேவையான பொதுவான தகைமைகள்**

திருக்கேதீச்சரத்தில் (இல்லத்தில்) தங்கியிருந்து பணியாற்றக் கூடியவர்களாக இருப்பது அவசியம். வயது 22 - 45 இற்கு இடைப்பட்டதாக இருக்கவேண்டும். அரசசேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடு தளர்த்தப்படும். சிறுவர், சிறுமியருடன் அன்பாகவும் பாசமாகவும் பழகக் கூடியவர்களாகவும் நல்லொழுக்கம் உடையவர்களாகவும் இருப்பதுடன் சைவசமய விழுமியங்களில் ஈடுபாடு உள்ளவர்களாகவும், அதற்கேற்ப சிறுவர், சிறுமியரை வழிநடத்தக் கூடியவர்களாகவும் இருத்தல் அவசியம். இதனை ஒரு கடமையாகக் கருதாது சேவை மனப்பான்மையுடன் கூடிய மனிதநேயப் பணியாகக் கருதக்கூடிய மனப்பக்குவம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். முன் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.

**தேவையான கல்வித்தகைமைகள்**

நிர்வாக அலுவலர் - பட்டதாரியாகவோ அல்லது இளைப்பாறிய அரச அலுவலராகவோ இருப்பது விரும்பத்தக்கது.

நிர்வாக உதவியாளர்- குறைந்தது க.பொ.த.(உயர்தரம்)சித்தியடைந்திருக்க வேண்டும். வர்த்தகப் பிரிவு விரும்பத்தக்கது.

மேற்பார்வையாளர்கள்- குறைந்தது க.பொ.த.(சாதாரணம்) சித்தியடைந்திருக்கவேண்டும்.

# தங்குமிட வசதியும் சைவ உணவும் வழங்கப்படும்.
## ஏனைய விடயங்கள் பேசித் தீர்க்கப்படலாம்
### பணிநிலையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

முடிவுத்திகதி: 07.10.2015

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: பணிப்பாளர் (நிர்வாகம்)
சிவன் அருள் இல்லம்,
திருக்கேதீச்சரம்,
மன்னார்.

தொ.பே.இல. 071 861 8030, 071 619 3459 C/19371) (13.15.16.17)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**125 ஆவது**
**ஆண்டு நிறைவு கலைவிழா அழைப்பு - 2015**

காலம்
24,25,27 புரட்டாதி 2015
வியாழன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமை

நேரம்
★காலை அமர்வு 8.00 மணி ★மாலை அமர்வு 4.00மணி

**இடம்: குமாரசுவாமி மண்டபம்**

**மூன்றாம் நாள் அமர்வு : காலை நிகழ்வுகள்**

காலம்: 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.30 மணி

தலைமை
சு.கதிர்காமநாதன்
தலைவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழையமாணவர் சங்கம் - கனடா

பிரதமவிருந்தினர்
வைத்திய கலாநிதி மு.வேற்பிள்ளை
யா.இ.க.ஐக்கிய இராச்சிய பழையமாணவர் சங்க
முன்னைநாள் தலைவரும், சமூகசேவையாளரும்.

மூத்தோர் கௌரவிப்பு

**மூன்றாம் நாள் அமர்வு - மாலை நிகழ்வுகள்**

காலம்: 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி

தலைமை
ஐ.தயானந்தராஜா
அதிபர்

பிரதமவிருந்தினர்
மாண்புமிகு முதலமைச்சர்
கௌரவ க.வி.விக்னேஸ்வரன்
வடக்குமாகாணம்.

125 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பதக்கம் வழங்கல் நிகழ்வு

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி.19326) (13.15.17) கல்லூரி சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுத்துப்பாக்கியால் தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதி

கிளிநொச்சி,செப்.26

வாய்த் தர்க்கத்தின் போது, கட்டுத்துப் பாக்கியால் சுட முயன்று குறி தவறியதால் கட்டுத்துப் பாக்கியின் பிடியால் தாக்கப்பட்டவர் காய மடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி பழைய முறிகண்டிப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம் பெற்றுள் ளது. சம்பவத்தின் போது பழைய முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த எஸ்.இரத் தின சிங்கம் (வயது- 51) என்பவரே தாக் கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். முல்லைத் தீவு மாவட்டத்தின் வனப் பகுதியில் சட்ட அனுமதி பெற்று மர வேலைக் காகச் செல்லும் ஒரு குழுவினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க் கத்தின் போது மது போதையில் இன்னொரு நபர் கட்டுத் துப் பாக்கியால் குறித்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள் ளார். எனினும் குறி தவறியமையினால் துப்பாக்கியின் பிடியால் தாக்கியுள் ளார். இதனால் காய மடைந்த குறித்த நபர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையி[ல்] சிகிச்சை பெற்று வருகி றார். இதே வேளை தாக்குதல் நடத்திய சந்தேக நபர் தலை மறை வாகி யுள்ள தால் அந்த நபரை மாங் குளம் பொலி ஸார் தேடி வருகின் றனர். (ஐ-101)

## மோட்டார் சைக்கிளின் சில்லு சறுக்கி மூவர் கடலில் தூக்கி வீசப்பட்டனர்

சாவகச்சேரி,செப்.26

மோட்டார் சைக்கிளின் சில்லு சறுக்கியதில் அதில் பயணித்த மூவர் தூக்கி வீசப்பட்டு கடலேரித் தண்ணீருக்குள் வீழ்ந்தனர். இந்தச் சம்பவம் கடந்த 22 ஆம் திகதி சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப் பட்டு கடலேரிக்குள் குறித்த மூவரும் வீழ்ந்ததை அந்த வழியே பஸ்ஸில் பயணித்தவர்கள் அவதானித்து 110 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து சாவகச்சேரி வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி சம்பவ இடத்துக்குச் சென்று காயமடைந்து எழுந்து நிற்க முடியாத நிலையில் காணப்பட்ட குறித்த மூவரையும் ஏற்றி வைத்திய சாலைக்குக் கொண்டு வந்தனர். இவர்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரியில் இடம்பெற்ற சாவு வீடொன்றுக்குச் சென்றவர்கள் தனங்களப்பு வீதி வழியாக பயணித்த வேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ஐ)


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
## நிழல்கள்

அமரர்
கந்தையா
குலசேகரம்பிள்ளை
(சமாதான நீதிவான்)



அன்னை மடியில்
30.08.1926

அம்பாள் அடியில்
14.10.1997

பழமுதிர் சோலையில் எனைப் பார்த்திருந்தீரே
வளமுடன் வாழும் வழிகளில் என்னைச் சேர்ந்திருந்தீரே
நிலவுகள் காட்டி இனிமைகள் ஊட்டி தினம் நெகிழவைத்தீரே
குல உறவுகள் கூட்டி மனம்குழைய மகிழ வைத்தீரே

நாகம்மா என்று நா இனிக்க நீர் அழைத்தால்
பாகாய் உருகி பழமாய்க் கனிந்தேனே
மோகம்பிறக்குதையா உன் மேன்மைச் சுகங்களிலே
தாகம் தணம்புதடா என் தங்கமே உன் தாளச் சுருதிகளில்

குழந்தைகள் பிறந்தன மழலையில் மகிழ்ந்தோமே
வளர்ந்து அவர் வாழ்வுகள் மலரும் வகையினில் வாழ்ந்தோமே
மன்னவனாய் நீ இருந்தாய் மாளிகையில் நான் மனம் நிறைந்தேன்
மன்னவனும் காண இல்லை மாளிகையும் மனம் நிறைய பேணவில்லை

மக்கள் மருமக்கள் பேரர், பூட்டர் என பெரும் பேறு கொண்டோமே
திக்கெங்கு போனாலும் தங்கள் திருநாமம் பேசும் புகழ் கண்டோமே
பிள்ளைகள் துணையாக உங்கள் பெருமைகள் பேணவைப்பேன்
வள்ளல் நீர் வணங்கும் விழுபளையாள் உம் புகழில் விளங்கி நிற்பாளே.

திருமதி க.நாகம்மா
பழமுதிர்சோலை
எழுது மட்டுவாழ் தெற்கு, எழுது மட்டுவாழ் (64931) (14,15)

அன்பு மனைவி
குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ் கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும்
கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும்
கொண்ட
தங்கரத்தினம் பொன்னம்பலம்

23.09.2015 புதன்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை
(27.09.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில்
நடைபெறும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
கு.கனகலிங்கம் குடும்பம் (பேராமகன்)
திருச்செல்வம் வீதி, பலாலிரோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
077 602 5002

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி
கந்தசாமி



பிறப்பு
04.09.1947

இறப்பு
23.09.1999

திதி: திரயோதசி (26.09.2015)

ஐயா, என்றழைத்து பதினாறு ஆண்டானதோ?
எம்மை ஆளாக்கிய தெய்வமே
ஆறவில்லை எம்துயரம் - என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாடும்

G.S. லேன்
எருவன், கொடிகாமம்.

உங்கள்
மனைவி, பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நடராசா
கனகலிங்கம்
(மரக்காலை உரிமையாளர்)

மலர்வு 28.06.1954
உதிர்வு 06.09.2010



எம் நெஞ்சமதைக் கனக்க வைத்து
கண்களில் கண்ணீர்
கண்ணிமைப் பொழுதினில்
காலனவன் கவர்ந்து கொண்டான்
இது கனவாக இருக்காதா
என ஏங்கியது எங்கள் மனம்
களங்கமில்லாது கவலையில்லாது
காத்திருப்புக்களோடும் ஏக்கங்களோடும்
கணநேரத்தில் வாழ்க்கைப் பயணத்தை
கடந்த செய்தி எம் நெஞ்சமதைப்
பிளந்ததே.....
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், நாதன் குடும்பம்,
கருணா குடும்பம், கந்தாகரன் குடும்பம்,
சகோதர சகோதரிகள், மச்சான்,
மச்சாள் மற்றும் உறவினர்கள்.
அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 06 1949



உதிர்வு 06 10 2014

திருமதி இராசலட்சுமி தனபாலசிங்கம்
(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)
திதி : பூர்வபட்ச திரயோதசி (26.09.2015)

பெண்ணின் இலக்கணமே !
இலட்சியம் பல கொண்டு
முழு மூச்சாய் செயற்படுத்தி
பெருமை கொண்ட தாய்மையே !
பிரிவு உங்கள் உடலுக்கு
நினைவுகள் எங்களுடனே
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

ராஜ்மஹால்
82/2, குருக்கு வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

## ஈராண்டில் ஈரவிழிகள்

தோற்றம் 26 12 1948



மறைவு 16 10 2013

திதி: புரட்டாதி பூர்வபட்ச திரயோதசி

அமரர்
கனகசபாபதி ஐயர் மஹா கணபதீஸ்வரக்குருக்கள்

ஈராண்டுகள் ஓடி விட்டாலும்- எம்
ஈரவிழிகள் காயவில்லையே அப்பா!
இரக்கமில்லை இறைவனுக்கு- எம்
ஈசனைத் திருப்பித்தா
இதயங்களில் சுமையோடு காத்திருக்கிறோம்
கணபதியே உன் தரிசனத்துக்காய்

18, துரைராஜா வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
021 222 5851 (64863) (14,15)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிள் நிறுவனத்தின் புதிய வரவுகள்

அப்பிள் நிறுவனம் தனது புதிய தயாரிப்புகளை அறிமுகம் செய்துள்ளது. புதிய ஐ வாட்ச் மூலம் நோயாளிகளின் இதய மற்றும் குருதி அழுத்த அளவுகளை நோயாளிகள் கை யில் உள்ள 'ஐ வாட்' சில் இருந்து உட னடியாக மருத் துவர் கையில் உள்ள ஐ வாட்சில் தெரி யும். இதனால் கர்ப் பிணிப் பெண்கள் அடிக்கடி மருத்து வமனைக்கு வரத் தேவையில்லை. மருத்து வரும் இருந்த இடத்தில் இருந்தே அவசர பிரச்சினைகளை உடனே தெரிந்து உடனடி மருத்துவக் குறிப்புகள் கொடுக்கலாம். உங்கள் வீட்டில் வைத்துள்ள இரகசியக் கமராவின் காணொலிப் படம் உங்கள் ஐ வாட்சில் தெரியும் வசதியும் உள்ளது.



### ஐபாட் ப்ரோ

ஐபாட் ப்ரோ என பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய டேப்லட் கணினி முழுக்க முழுக்க அதிக திறன் கொண்ட திரை (12.9 இன்ச்) புதிய எ–9 செயலி, நான்கு ஒலிப்பான்கள், 10 மணிநேர மின்கல திறன், 8 மெகா பிக் சல் கமரா, திரை யின் மீது எழுத பென்சில் எனும் உள்ளீட்டுக் கருவி, தனியாக இணைக் கக் கூடிய கீ போர்ட். இதைப் பார்க்கும் போது மைக்ரோ சொப்ட் நிறுவனம் வெளியிட்டு வெற்றி பெற்ற சர்பேஸ் ப்ரோ 3 வகை டேப்லட்டின் பல அம்சங்களை அப்படியே நகலெடுத்து அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது போல் தெரிகிறது. ஆனால் இதன் திரை தெளிவு திறன் மட்டுமே புதிய சிறப்பம்சமாகும்.




### ரி.வி.ஓ.எஸ்

ரி.வி.ஓ.எஸ் எனப்படும் புதிய வகை இயங்கு தளத்தில் இயங்கும் சிறிய சோப்பு டப்பா அளவிலான ஒரு சாதனம் தான் ஜரிவி. பல வருடங்களாக உள்ள பிற சாம்சங், எல்.ஜி ஸ்மார்ட் ரிவிக்களை விட பல சிறப்பம்சங்களைக் கொண்டு இந்த ரிவி அறிமுகம் ஆகியுள்ளது. சிறி எனப்படும் செயற்கை நுண்ணறிவு உதவியாள் மென்பொருளை இந்த ரிவி கொண்டுள்ளது. என்ன படங்கள் வேண்டும் என நீங்கள் உங்கள் கையில் உள்ள ரிமொட்டிடம் சொன்னால் அந்தத் திரைப்படங்களை ஏற்கனவே உள்ள நெட்ப்ளிக்ஸ் மென்பொருள்கள் வழியாக கண்டறிந்து காட்டும். இதில் யூரிப் இல்லை. நீங்கள் ஐ போன் , ஐ பேடில் வாங்கும் படங்கள், விளையாட்டுக்கள் இனி இந்த ரிவியிலும் தெரியும். குறி பார்த்து அழுத்த வேண்டிய தேவையை புதிய ரிமோட் அகற்றியுள்ளது. ஆம் புளூடூத் வகை அலை வரிசையில் நீங்கள் சமையலறையில் இருந்து கொண்டே ஒலியைக் குறைப்பதை எளிதாகச் செய்ய முடியும். அதுமட்டுமல்ல மடிக் கணினிகளில் உள்ளது போல தொடு உள்ளீடு உள்ளது இந்த ரிமோட்டில்.







### ஐபோன் 6எஸ், ஐபோன் 6 ப்ளஸ்

12 எம், 5 எம் கமராக்கள், இருபுறமும் கமரா ப்ளாஸ் லைற். 4கே ரக உயர் தெளிவு திறன் படங்களையும் காட்சிப் படுத்தும் திறன் என கமரா அற்புதமாகவுள்ளது. இந்தக் கைபேசியில் உள்ள புதிய செயலி முந்தைய ஐ போன் 6 இன் செயலியை விட 90 வீதம் திறன் வாய்ந்தது என அறிவித்துள்ளார்கள். வேறு எந்தக் கைபேசியிலும் இல்லாத வகையில் 3டி டச் எனும் புதிய வகையில் திரையை சற்று அதிகமாக அழுத்துவதை ஒரு புதிய வகை உள்ளீட்டு முறையாக அறிமுகம் செய்துள்ளனர். இது சாதாரணமாக செய்ய முடியும் ஒரு வன்பொருள் வடிவமைப்பு அல்ல. தொடு திரையின் மேலும் உள்ளீடு சென்சாரும் இயக்கு தளமும் இணைந்து தொடுதலின் வித்தியாசத்தை உணரும் ஒரு முறை இது.

### அண்ட்ராய்ட் பயனர்களை இழுக்கும் அப்பிள்:

அண்ட்ராய்ட் கைபேசி பயன்படுத்துமொருவர், எளிதாக தனது பழைய அண்ட்ராய்ட் கைபேசியில் உள்ள தனது கணக்கு விவரங்கள், மென்பொருள்கள், படங்கள் ஆகியவற்றை இந்தப் புதிய ஐ போனில் எளிதாக இட மாற்றம் செய்யும் வசதி வந்துள்ளது.













சுன்னாகம் மேற்கு நாகேஸ்வரி வித்தியாலத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ் மக்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் விதமாக விழிப்பூட்டும் வகையிலான நடை பவனி ஒன்று நேற்று சுன்னாகத்தில் இடம் பெற்றது. பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மாணவர்கள் நடைபவனியாகச் சென்றனர். இந்த நடைபவனியில் மாணவர்கள் தமிழ் மக்களின் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் காவடியாட்டம், கோலாட்டம் போன்ற கலை அம்சங் கள் பொருந்திய நிகழ்வுகளுடன் சென்றனர். நிகழ்வில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ–86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்கு நிதியுதவி

நியூயோர்க், செப்.26
மத்திய கிழக்கிலுள்ள சிரிய நாட்டின் அகதிகளுக்காக பணிபுரியும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுக்கு மேலும் நூறுகோடி டொலர் நிதியுதவி அளிக்க ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.
மிகப் பெரிய அளவில் அகதிகள் மற்றும் குடியேறிகள் எதிர்காலத்தில் வரும் சாத்தியம் உள்ளது என்றும், ஐரோப்பிய வெளி எல்லைகள் பாதுகாக்கப்படுவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் பிரசல்ஸில் நடந்த அவசரக் கூட்டமொன்றின் பின்னர் பேசிய, ஐரோப்பிய கவுன்சில் தலைவர் டொனால்ட் டஸ்க் எச்சரித்துள்ளார்.
தற்போது வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட நிதி லெபனான், ஜோர்தான் மற்றும் துருக்கியில் செயற்படும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–ரி4)

# தொழுகை செய்தோர் மீது மனிதக் குண்டுத் தாக்குதல்

### ஏமனில் 25 பேர் உயிரிழப்பு



சனா, செப்.26
ஏமன் தலைநகர் சனாவில் உள்ள பள்ளிவாசலில் நடத்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் கடும் காயங் களுக்குள்ளாகியுள்ளனர்.
பக்ரீத்பண்டிகையைமுன்னிட்டுநடைபெற்ற சிறப்புத் தொழுகையின் போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் பள்ளிவாசலுக்கு உள்ளே குண்டொன்று வெடித்தது என்றும் அதையடுத்து அங்கிருந்தவர்கள் தப்பியோடியபோது வாயிலில் மற்றொரு மனிதக் குண்டுத் தாக்குதல்நடத்தப்பட்டதுஎன்றும்அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்றபோதும்– ஷியா முஸ்லிகளைக் குறிவைத்து ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.
ஏமனில் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் சனா உள்ளிட்ட முக்கிய பகுதிகளைக் கைப்பற்றினர். அதையடுத்து ஏடன் உள்ளிட்ட சில பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. (ற–ரி4)





இந்தோனேசியாவின் சுமத்திரா மாகாணத்தின் தென் காட்சியளிக்கின்றது. அத்துடன் இந்தோனேசியாவின் அ பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. தீ நேற்றுமுன்தினம் நடந்த ஹச் பெருநாள் தொழுகைகளை

## மெக்சிக்கோவில் பெண் தாதா கைது

### 180 கொலைகளுடன் தொடர்புடையவராம்

வொஷிங்டன், செப்.26
மெக்சிக்கோவைச் சேர்ந்த பிரபல போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவியைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.
மெக்சிக்கோவைச் சேர்ந்தவர் மெலிசா மார்கரீட்டாகால்டெரொனா.போதைப் பொருள் விற்பனைக் கும்பலின் தலைவியான இவர், அவரது கடத்தல் குழுவினரால் லாசினா என்றும் அழைக்கப்படுகிறார். கடந்த 2005 ஆம் ஆண்டு டமாசொ கார்டெல் குழுவில் இணைந்து குற்றச் செயல்களில் ஈடுபடத் தொடங்கினார். உலகின் மிகபெரிய கடத்தல் மன்னன் எல் சப்போ கூஷ்மெனின் சினாலோ கார்டெல் குழுவுடன் டமாசோவும் கூட்டு வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில் அந்தக் குழுவின் தலைவியாக லாசினா மாறினார். பின்னர் மெக்சிக்கோவில் உள்ள முக்கியமான பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளார். கடத்திச் சென்றவர்களைத் துண்டு துண்டாக வெட்டி கொலை செய்து பின்னர் அவர்களின் வீட்டு வாசலில் உடல்களைப் போடுவது இவரது வழக்க மாகும். இதன் காரணமாக ஆண்கள் மட்டுமேஆதிக்கம்செலுத்திவந்தபோதைப் பொருள் விற்பனையில் இவர் முன்னேறி வந்தார். இவர் மீது 180 கொலை வழக்குகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.
அவரது காதலர் எல் பீற்றர் அளித்த தகவலின்படி பெண் தாதா கைது செய்யப்பட்டார். (த–ரி4)

# சிவப்பு நிலவு நாளை



லண்டன், செப்.26
பூரண சந்திர கிரகணம் காரணமாக பௌர்ணமி தினமான நாளையும், நாளை மறுநாளும் மிகப் பெரிதானதும் சிவப்பு நிறத்தினாலாதுமான நிலவைக் காணக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்க, ஆபிரிக்க கண்டங்களில் வசிப்போர் இந்த அரிய காட்சியைக் காணமுடியும். சந்திரன் பூமியை வட்டப்பாதையில் சுற்றி வரும் போது அண்மிப்பதால் இந்த நிகழ்வு ஏற்படுகின்றது. இரவு 10.11 மணிக்கு ஆரம்பித்து இரவு 10.47 மணியளவில் கிரகணம் உச்சத்தை அடையும் என்றும் இந்த அரிய நிகழ்வு சுமார் 72 நிமிடங்கள் நீடிக்கும் என்றும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
நாம் அன்றாடம் காணும் நிலவை விடவும் வித்தியாசமானதொரு நிலவைக் காணமுடியும் என்றும், சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா இதனை தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
1982 ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போது தான் இவ்வாறானதொரு நிகழ்வு நடைபெறவுள்ளது.
அதேவேளை, இந்த நிகழ்வை கிறிஸ்தவ மதத்தினர் இறுதி நாள்களின் அறிகுறி எனக் குறிப்பிட்டுள்ளனர். (ற–ரி4)

# ஜேர்மனியில் அ புதுப்பிக்கப்பட்ட

### பதில் நடவடிக்கை எடுக்கப்படும்


மொஸ்கோ, செப்.26
அமெரிக்காவால் புதுப்பிக்கப்படும் புதிய அணு ஆயுதங்களை ஜேர்மனியில் நிறுத்தினால் ரஷ்யா அதற்கான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என ரஷ்ய இராணுவ செய்தித் தொடர்பாளர் மிர்த்தி பெஸ்கோவ் எச்சரித்துள்ளார்.
அமெரிக்கா, தனது பி61–122 வகை அணுகுண்டுகளின் புதுப்பிக்கப்பட்ட ரகங்களை, ஜேர்மனியிலுள்ள பூஷெல் விமானத் தளத்தில் வைத்திருக்க முடிவு செய்துள்ளது என்று அண்மையில் ஜேர்மனி ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன்.
அதையடுத்தே மிர்த்தி பெஸ்கோவ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அமெரிக்கா புதிய ரக அணு ஆயுதங்களை ஜேர்மனியில் நிறுத்தினால் அது ஐரோப்பாவில் ராணுவச் சமநிலையைப் பாதிக்கும். எனவே, அந்தச் சமநிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக ரஷ்யா எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என மிர்த்தி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, ஆயுள் நீடிப்புத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் புதிய ஆயுதங்கள் என்று வகைப்படுத்த முடியாது. அவற்றின் அழிக்கும் திறனில் எந்த மாறுபாடும் செய்யப்படுவதில்லை என அமெரிக்க ராணுவத் தலைமையகமான பெண்ட

# ஹப்பி பேர்த்டே டு யூவை இனி இலவசமாகவே பாடலாம்

வொஷிங்டன், செப்.26
எமது வீட்டு பிறந்த நாள் கொண்டாட்டங்களில் இந்தப் பாடலைப் பாடலாம். ஆனால் பார்வையாளர்களுக்குமுன்இந்தப்பாடலைபாடவோ இதன் இசைக்குறிப்புகளை இசைக்கவோ செய்தால், இந்தப் பாடலுக்குக் காப்புரிமை பெற்றிருக்கும் நிறுவனத்திற்கு உரிமைப் பணம் கொடுக்கவேண்டும்.
உலகம் முழுவதிலும், சரிவர ஆங்கிலம் தெரியாத மக்கள் கூடப் பாடும், எளிமையான பாடல் "ஹப்பி பேர்த்டே டு யூ". இந்த பிறந்த நாள் வாழ்த்துக்குக் கா புரிமை பெற்றிருக்கும் அமெரிக்க நிறுவனத்தின் பெயர் வார்னர் சாப்பல் மியூசிக்.
அடாவடியான இந்த நிறுவனம். 1988ஆம் ஆண்டு 'ஹப்பி பேர்த்டே டூ யூ' என்ற பாடலுக்கான காப்புரிமையைக் கைப்பற்றியது. ஒரு தி[illegible] படத்திலோ, தொலைக்காட்சி நி[illegible]சியிலோ அந்தப் பாடலை பயன்படுத்த வேண்டுமானால் அதற்குக் கட்டணமாக 1500 டொலரை (சுமார் 190 ஆயிரம் ரூபா) அந்த நிறுவனம் வசூலிக்கிறது. கட்டணம் செலுத்தாமல் பாடலைப் பயன்படுத்தினால், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அபராதமும் வசூலிக்கிறது. ஹப்பி பேர்த்டே பாடல் வரிகளுக்கும், இசைக்குமான காப்புரிமை தன்னி[illegible] இருப்பதாகக் கூறி வார்ன[illegible] சாப்பல் நிறுவனம் [illegible] 1.5 கோடி டொலர் (சுமார் 1900 கோடி ரூபா) சம்பாதித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மெட்டு 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பேட்டி ஹில், மில்ட்ரெட் ஹில் என்ற இரு சகோதரிகளால் உருவாக்கப்பட்டது. அது "குட் மோர் னிங் டு ஆல்" என்ற வரிகளுடன் எழுதப்பட்டுள்ளது. 1911 ஆம் ஆண்டு பாடல் வரிகள் எழுதப் பட்டது, இந்தப் பாடல் முதல்முறையாக 1935 ஆம் ஆண்டுதான் வெளியிடப்பட்டது. இந்த நிலையில், இசைக்கான காப்புரிமை 95 ஆண்டுகளுக்கு மேல் செல்லுபடியாகாது என்பதை கோடிட் டுக் காட்டி, இனி ஹப்பி பேர்த்டே பாடல் அனைவருக்கும் சொந்தமா னது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அமெரிக்காவின் மாவட்ட நீதிபதியான ஜோர்ஜ் எச். கிங் வெளியிட்டுள்ளார். இதனால் கின்னஸ் சாதனை புரிந்த, பூமியின் மிகவும் புகழ்பெற்ற பாடலுக்கான தனி நபர் காப்புரிமையை அந்த நிறுவனம்இழந்துள்ளது.ஹேப்பி பேர்த்டே டு யூ–வை இனி அனைவரும் இலவசமாகவே பாடலாம். (த–ரி4)

சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...தின் தென்பகுதியில் பெரும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. அதனால் அந்த மாகாணம் முழுவதும் புகை மண்டலமாகக் ...யா்வின் அயல் நாடுகளான சிங்கப்பூர், மலேசியாவிலும் புகை பரவிவுள்ளது. புகை மூட்டம் காரணமாக சிங்கப்பூரில் சில ...ளது. தீயைக் கட்டுப்படுத்துமாறு இந்தோனேசிய அரசுக்கு அந்த நாடுகள் அழுத்தம் கொடுத்துள்ளன. அதேவேளை, ...ழுகைகளை சுமந்திராவின் பிளம்பாங் நகர மக்கள் கடும் புகை மூட்டத்துக்கு நடுவே மேற்கொண்டனர். (ந)

# ஐந்து வயதுச் சிறுமி பாப்பரசருக்கு கடிதம்

நியூயோர், செப்.26
அமெரிக்காவுக்கு முதல் முதலாகப் பயணம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் பிரான்சிஸ், வொஷிங்டனில் தனது திறந்தவெளி வாகனத்தில் சென்று மக்களைச் சந்தித்தார். அதன் போது 5 வயது சிறுமி ஒருத்தி பாப்பரசருக்குக் கடிதம் ஒன்றைக் கொடுத்துள்ளாள். அரசியல்சாசன வீதியில் பாப்பரசர் பொதுமக்களைச் சந்தித்த போது 5 வயது சிறுமி ஒருவள் நெருங்கிச் சென்றபோது பாதுகாவலர்கள் தடுத்தனர். ஆனால் அந்தச் சிறுமியைத் தன்னிடம் அழைத்து வருமாறு பாப்பரசர் கூறினார்.
சிறுமியை பாப்பரசரின் அருகில் அழைத்துச் சென்றபோது, அவர் அந்தக் குழந்தையை அரவணைத்து முத்தமிட்டார். அப்போது அந்த சிறுமி தன் வசமிருந்த ஒரு கடிதத்தைப் பாப்பரசரிடம் கையளித்தாள்.
அவள் பாப்பரசரிடம் அளித்த கடிதத்தில்:-
'என் தந்தையை போன்றவர்கள் உரிய ஆவணங்களின்றி அமெரிக்காவில் தங்கி இருக்கலாம். ஆனால் அனைவரும் அமெரிக்காவுக்காக உழைத்திருக்கிறார்கள். அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கு தகுதி படைத்தவர்கள். அவர்கள் மரியாதையுடன் வாழ்வதற்கு உரியவர்கள். அவர்கள் குடியுரிமை சீர்திருத்தம் பெற வேண்டியவர்கள். இதற்கு நீங்கள் உதவ வேண்டும். ஆதரவு தர வேண்டும்.'- என்று அந்தச் சிறுமி குறிப்பிட்டிருந்தாள். (ந-ரி4)



# ...அமெரிக்காவின் ...ட அணு ஆயுதம்

## ...டும் என எச்சரிக்கிறது ரஷ்யா

...புதங்
...அது
...லை
...ந்தச்
...த்து
...கை
...ருக்
...தெரி
...திட்
...புதங்
...ன்று
...றின்
...டும்
...ரிக்க
...ண்ட



கன் தெரிவித்துள்ளது.
ஜேர்மனியில் நிறுத்தவிருப்பதாகக் கூறப்படும் பி61-122 வகை அணு குண்டு அமெரிக்காவால் 1960 ஆண்டளவில் வடிவமைக்கப்பட்டது.
நீண்ட காலமாக கையிருப்பில் உள்ள அணு ஆயுதங்களின் வாழ்நாளை அதிகரிக்கும் அமெரிக்காவின் ஆயுள் நீடிப்புத் திட்டத்தின் கீழ், பி61-122 வகை அணு குண்டுகள் திறனேற்றம் செய்யப்படவுள்ளன.
அந்த அணுகுண்டுகளின் துல்லியமாக இலக்கைத் தாக்கும் திறனை அதிகரிக்கவும், புதிதாக சில சாதனங்களைப் பொருத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
ஏற்கெனவே அமெரிக்க அணுகுண்டுகள் ஜேர்மனியில் இருந்தாலும், மேம்படுத்தப்பட்ட பி61-122 அணுகுண்டுகளை அங்கு நிறுத்த ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (ந)



அமெரிக்காவின் வொஷிங்டன் மாநிலத்தில் உள்ள சியாட்டில் நகரில் சுற்றுலா பஸ் ஒன்று மற்றொரு பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் 4 பேர் உயிரிழந்ததுடன், 12 பேர் படுகாயமடைந்தனர். 'டக்ஸ்' வாகனம் என்று அழைக்கப்படும் இந்த சுற்றுலா பஸ் சுமார் 30 பயணிகளுடன், நகரின் முக்கிய பாலமான ஆரோரா பாலத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி அருகில் வந்து கொண்டிருந்த பஸ் மீது மீது மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ரி4)

## சீன ஜனாதிபதி அமெரிக்கா பயணம்

வொஷிங்டன், செப்.26
சீன ஜனாதிபதி சி ஜின்பிங் அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்றுமுன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் அவர் உத்தியோகபூர்வமற்ற சந்திப்பில் கலந்துகொண்டார்.
அதில் ஈரானின் அணுஆயுத விடயங்கள் உட்பட பலவிடயங்களை இரு நாட்டு ஜனாதிபதிகளும் பகிர்ந்து கொண்டனர். நேற்று வெள்ளை மாளிகையில் 21 துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டு சீன ஜனாதிபதிக்கு மரியாதை வழங்கப்பட்டு, விருந்துபசாரம் நடைபெற்றது.
இரு நாடுகளுக்குள்ளான இணையத்தாக்குதல்கள், இரு நாடுகளுக்குள்ளான உறவு, சீனாவின் தற்போதைய நிலை அத்துடன் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரி4)



# சிரியாவில் முதன்முறையாக ரஷ்ய டிரோன்கள்



சிரியாவில் உள்நாட்டு போர் நடந்து கொண்டிருக்கும் நிலையில் ரஷ்ய ஆளில்லா விமானங்கள் (டிரோன்) முதல் முறையாக கடந்த புதன்கிழமை இயக்கப்பட்டுள்ளன என்று சிரியா ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி [illegible] [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும், அந்த ஆளில்லா விமானங்கள் உளவு விமானங்களா அல்லது தாக்குதல் விமானங்களா என்ற விவரத்தை சிரிய ராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை.
அண்மைக் காலமாக சிரியாவில் ரஷ்யா தனது ஆயுதங்களைக் குவித்து வருவதாக அமெரிக்கா கவலை தெரிவித்து வந்த நிலையில், இந்தச் செயறபாடு மேலும் அதற்கு வலுச் சேர்க்கும் வகையாக அமைந்துள்ளது.
சிரியா ராணுவத்துக்கு 5 போர் விமானங்களை ரஷ்யா கடந்த வியாழக்கிழமை வழங்கியிருந்தது. (ந-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த் திருவிழா காண வல்லிபுரம் செல்வோம் வளம் பெருக்கி வாழ்வோம்

கந்த. தியாகராசா

மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச் சுடரென்றும், கால், தீ, நீர், வான், மண் பிறவுமாய பெருமானாகி நின்றான் என்றும், கறந்த பாலுள் நெய்போல எங்கும் நிறைந்து செடியாய வல்வினைகளைத் தீர்க்கும் நெடுமாலே என்றும் துதிக்கப் படுகின்ற ஸ்ரீமத் நாராயண மூர்த்தியின் கருணைத் திறன் சொல்லும் தரமன்று. உலகளந்த உத்தமன் உலகைப் படைத்த ஆச்சரியமான செயலை அன்று மண் நீர் எரிகால் விண் மலை முதல் அன்று சுடரிரண்டும் பிறவும் பின்னும்,
அன்று மழையுயிர் தேவும் மற்றும் அப்பன் அன்று முதலுலகம் செய்த அற்புதத்தை நம்மாழ்வார் பாசுரம் செப்புகின்றது. பஞ்ச பூதங்களோடு சூரிய சந்திரனையும் படைத்து உகந்த பரஞ்சோதி மச்ச அவ்தாரத்தின் மகிமையை மாந்தர்க்கு வெளிப்படுத்திய வரலாறு மிகவும் சுவையானது. அதிசயமானது, பக்திமயமானது. இந்து மாகடல் மருவி நிற்கும் கற்கோவளக் கடலில் அற்புத மீனாகத் தோன்றி விளையாட்டுக்காட்டி வியக்க வைத்து நின்றது. இந்த அதிசயத்தைக் காண ஊர் மக்கள் திரண்டனர். மாய மீனைக் கண்டு மயங்கி நின்ற வேளை வல்லிநாச்சியார் என்னும் மாதரசியின் மடியில் விழுந்து அழகிய குழவியாய் தவழ்ந்தது. அந்தத் திவ்விய குழந்தையின் கார்வண்ண நிறமும், பவள வாயும், கமலக்கண்களும் கொண்ட கதிர் மதியம் போலும் முகத்தையும் கண்ட மக்கள் வியப்பெய்தினர். குழந்தையைப் பேழையில் வைத்து தூக்கிக் கொண்டு சென்றவேளை தாகம் தணிக்கவெண்ணி பேழையை கீழே வைத்துவிட்டு நீர் அருந்திய பின் வந்து பேழையைத் தூக்கினர் பேழை அசையவில்லை. செய்வதறியாது திகைத்து நின்றபோது வேதியர் தோன்றி மாந்தர் மருட்சியை போக்கி சுதர்சன சக்கரம் ஒன்றைக் கொடுத்து வழிபடுமாறு அறிவுறுத்தி வேதியர் மறைந்தார். அந்தப் புனித இடமே இன்று பேராலயமாக, புண்ணியத் திருக்கோயிலாக திகழ்ந்து திக்கெட்டும் உள்ளாரை ஈர்த்து நிற்கின்றது. வல்லி நாச்சியார் மடியில் மாயவன் தவழ்ந்தமையால் வல்லிபுரமாகி, வள்ளல் வரதராஜன் நாமம் வல்லிபுர ஆழ்வார் ஆகி, துன்னையம் பதியில் திகழ்கின்றது, அருளாட்சியைப் பெருக்கி அடியார்களைக் கவர்ந்து நிற்கின்றது.
மச்ச அவதாரத்தின் பெருமையை
"வாதைவந்தடரா வானமும் நிலமும் மலைகளும் அலைகடல்
குளிப்பமீது கொண்டுகளும் மீனுருவாகி விரிபுனல் வீரிய
கட்டொழித்தோன்
போதலர் புன்னை மல்லிகை மௌவல் புதுவிரை மதுமலரணைந்து சீதவொண்





தென்றல் இசைதொறும் கமழும்" எனத் திருமங்கையாழ்வார் பாடிய பாசுரத்துக்கு ஒப்ப மணிவண்ணன் குடிகொண்ட இடமே வல்லிபுரம். மச்சவுரு மாயோன் ஆகி, செந்தமிழ் மண்ணில் குடி கொண்டது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.
வடமராட்சியில் வான்தொட்டு நிற்கும் கோபுரம், அழகூட்டும் திருக்கோயில் மண்டப அமைப்பு, பொலிவூட்டும், புகழோடும் அருளோடும் விளங்கும் ஆழ்வார் திருத்தலத் துறை சக்கர ஆழ்வாரை தூயோமாய் வந்து நாம் பூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் கூதலுமாய் நின்றனவும், தீயினில் தூசாகும் என்று வழிபடும் முறையை பகவானின் அருட் திறனை ஆண்டாள் சொல்லி வைத்தார். வரலாற்றுச் சிறப்பும், பக்தர் ஈர்ப்புச் சக்தியும் கொண்டு, கடலும் கடல் சார்ந்தும், மணலும் மணல் சார்ந்தும், உள்ள தூய இடத்தின் திவ்விய கோயில் கொண்ட சக்கரத்தாழ்வார் மகோற்சவப் பெருவிழா புரட்டாதித் திங்கள் பூரணைத் திதியை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பிரமோற்சவம் இடம்பெறுகின்றது. இங்கு இடம்பெறுகின்ற ஒவ்வோர் திருவிழாவும் வரலாற்றுத் தொடர்புடையவை மிகச் சிறப்பானவை, ஆன்மிகத்துக்கு உந்துசக்தியானவை. பெருந்திருவிழாக் காலத்தில் துன்னையூரவர் மட்டுமல்ல கற்கோவளம், பொலிகண்டி உட்பட வடமராட்சி உள்ளாரும் பிற இடங்களில் வல்லிபுரத்தாழ்வார் பக்தர்களும் ஆசாரம் காத்து பரமனடி பாடி நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாள்களே நீராடி மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம் என்ற ஸ்ரீ ஆண்டாள் அருள்வாக்குக்கு ஒப்ப ஆடவரும், பெண்டிரும் விரதம் கைக்கொள்வர். ஆலயச் சூழல் எங்கும் வீதியோரங்களில் தூய்மை பரவி இருக்கும். பரந்தாமன் சீலத்தைப் பேசி நிற்கும் பெருந்திருவிழாவின் ஒன்பதாம் நாள் இடம்பெறுகின்ற வெண்ணைத் திருவிழா மிக உன்னதமானது, வேறெங்கும் காணக்கிடைக்காத நெற்பெருவிழா, பத்தாம் நாள் இரவு இடம்பெறும் கம்சன் போர் மிகச் சிறப்பானது. சிந்தையைக் கவரும் பான்மை கொண்டது.
வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து வந்திக்கும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாருக்கு பதினான்காம் நாளான இன்று தேர்த் திருவிழா. சக்கரத்தாழ்வார் தேரில் ஆரோகணித்து வலம் வரும் நன்னாள். சித்திரத்தேர் ஏறி ஜீவராசிகளைக் காத்தருள திருவீதி உலாவரும் பொன்னாள், திருத்தலம் எங்கும் நாராயணா என்னும் நாமம் ஒலிக்கும். வேதபாராயணம் ஒலிக்கும். காண்டாமணி ஒலிக்கும், மங்கல வாத்தியங்களின் இன்னிசை ஒலிக்கும். தமிழோடு இசைபாடல்கள் பஜனைக் கீதங்கள் ஒலிக்கும். கோவிந்தா கோவிந்தா எனும் கோசம் ஒலிக்கும். திண்தோள் மணிவண்ணனின் திவ்விய சுதர்சனத்தின் பவனி காண்பார் மெய்மறந்து கைதொழுது காதலாகி கசிந்துருகி நீர் மல்க
"எந்தையே என்றும், எம் பெருமான் என்றும் சிந்தை இவை வைப்பன் சொல்லுவன் பாவியேன்,
எந்தையயம் பெருமான் இன்று வானவர் சிந்தையுள் வைத்து சொல்லும் செல்வனையே"
என நம்மாழ்வார் பாசுரத்துக்கு ஒப்ப பணிந்தேத்துவர் காத்தற்கடவுளாம் கண்ணபிரான் கருணை கைவரப் பெற்றோம், கவலையை விட்டோம் என நாரணன் நம்பியைக் கும்பிட்டு நிற்பர். பதினைந்தாம் நாள் இடம்பெறுகின்ற சமுத்திரத் தீர்த்தம் மீனுருவில் தோன்றிய கற்கோவளக் கடலிலேயே நடைபெறுவது பெருஞ்சிறப்பு. குழந்தையோடு பேழையை தூக்கி அன்று கொண்டு வந்த கற்கோவள அடியார்களே இன்று சுவாமியைக் காவிச் செல்லும் வழமையே உள்ளது. பதினாறாம் நாள் நடைபெறுகின்ற பிராயச்சித்த அபிஷேகம் ஆயைத்தடாகத்தில் தீர்த்தோற்சவமாக இடம்பெறுவதும் இன்னோர் சிறப்பம்சமாம். சுதர்சன சக்கரம் அற்புதமானது, ஆற்றமில்மிக்கது. விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிபவன், எல்லாம் வல்லவன். அளப்பரிய பெருமைவாய்ந்த விஷ்ணு சக்கரம் திருக்கோயிலின் கருவறையில் வீற்றிருந்து சுடர்பரப்பி அருளாட்சி செய்கின்றது. வல்லிபுர ஆழ்வாரை உள்ளன்போடு தூயோமாய் வந்து தூமலர் தூவி தரிசிப்பாருக்கு கழல் பற்றுவார் தமக்கு
போத்த பிறப்பொடு நோயயாடு மூப்பொடு இறப்பிவை பேர்த்து பெருந்துன்பம் வேரற நீக்கி தன் தாழின் கீழ் சேர்த்து சேமத்தை அருளவல்லான். எனவே அவன் சேவடி பணிந்து இகபரசுகம் பெற்று இனிதே வாழ்வோம்.
"கோவிந்த நாம சங்கீர்த்தனம், கோவிந்தா கோவிந்தா"

> வடமராட்சியில் வான்தொட்டு நிற்கும் கோபுரம் அழகூட்டும் திருக்கோயில் மண்டப அமைப்பு பொலிவூட்டும், புகழோடும் அருளோடும் விளங்கும் ஆழ்வார் திருத்தலத்துறை சக்கர ஆழ்வாரை தூயோமாய் வந்து நாம் பூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் கூதலுமாய் நின்றனவும் தீயினில் தூசாகும் என்று வழிபடும் முறையை பகவானின் அருட் திறனை ஆண்டாள் சொல்லி வைத்தார்.

# வல்லிபுரத்து ஆழ்வார் இன்று தேரிலே ஆரோகணிக்கின்றார்

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான காத்தற் கடவுள் ஸ்ரீமகா விஷ்ணு மூர்த்தியானவர் தம்மை வழிபடும் அடியார் பெருமக்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் போக்கும் வகையில், அருள்புரியும் நோக்கில் வல்லிபுரத்து ஆழ்வாராக எழுந்தருளி வீற்றிருந்து அருள் பொழிகின்றார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற சிறப்பு மிக்க இந்த அருள்மிகு ஆலயத்திலே இன்று ரதோற்சவம். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் வல்லிபுரத்தான் இன்று தேரேறி வருகின்றார். ஈழவள நாட்டிலே யாழ்.குடா நாட்டிலே அழகுற அமைந்திருக்கும் இந்த வல்லிபுரக் கோயிலிலே இன்று நடைபெறுகின்ற ஆனந்தக் கோலாகல அற்புதத் தேர்த்திருவிழா வைக் கண்டு தரிசிப்பதற்காக மாய வன் அடியார் கூட்டம் இன்று அலை மோதும்.
ஊர் கூடித் தேரிழுக்கும் திருமால் அடியார்கள் அனைவரும், "கோவிந்தா! கோவிந்தா!!" என்று எழுப்புகின்ற கோஷம் வானைப்பிளக்க, முன்னே மங்கல இசை முழங்க, பின்னே அடியார் கூட்டம் அங்கப்பிரதட்சணம் செய்த வண்ணம் உருண்டு வர மாயக்கண்ணனின் அழகிய அலங்கார சித்திரத்தேர் ஆடி அசைந்து வரும் அழகுத்திருக் காட்சி கண்கொள்ளாக் காட்சியன்றோ!
"தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் நான் அவதாரம் எடுத்து அவனியைக் காப்பேன்" என்று கூறிய ஸ்ரீகிருஷ்ண பரா...



மாத்மா இன்று வல்லிபுரக் கோயிலிலே ஸ்ரீசக்கர வடிவிலே தேரேறி வந்து அடியவர் துன்பந்துடைக்கும் காட்சி பக்தி பூர்வமானது. அழகெல்லாம் சேர்ந்து ஓர் உருவெடுத்தாற்போன்று ஆனந்தமயமான அற்புதக் கோலாகலத் திருக்காட்சியைக் காணவருமாறு அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தப்படவேண்டிய திருவடிநிலை தீர்த்தக்கரை

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட இயற்கை எழில் நிறைந்த திருவடிநிலை கடற்கரை ஆக்கிரமிப்பாளர்களின் வசப்பட்டு சோபை இழந்து புதர்க்காடாக மாறிப் பற்றைகள் மண்டிக்கிடக்கிறது. கடலில் குளிக்க வருவோர் தொகை குறைந்துவிட்ட நிலையில் பொன்னாலை மற்றும் பறாளாய் ஆலயங்களில் இருந்து சுவாமி தீர்த்தமாட வருவது மட்டும் வருடாந்தம் நிகழ்ந்து வருகின்றது. தீர்த்தமாட வரும் சுவாமி கொலு விருக்கும் அழகிய மண்டபம் பொலிவிழந்தும் குளிக்க வரும் பெண்கள் உடைமாற்ற அமைக்கப்பட்டிருந்த சிமெந்துக் கூரையினாலான கட்டடம் இருந்த இடம் தெரியாமல் சிதைவடைந்தும் சிதிலமாகிப்போயிருக் கும் பரிதாபம் மனதை வாட்டுகிறது.

அந்தியேட்டிக் கிரியைகளை நிறைவேற்றவென அந்தக் கடற்கரையைப் புனிதமாக எண்ணும் அனேகர் இன்றும் அங்கு செல்லத்தான் செய்கிறார்கள். இவர் களால்தான் திருவடிநிலையும் புனித தீர்த்தக்கரை என அடையாளப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது எனலாம். இதற்காகவென அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறு மடத்தில் (நல்லவேளை அந்த மடமாவது சைவ நலன்விரும்பிகள் சிலரால் அந்தியேட்டி செய்வதற்கு அமைக்கப்பட்டிருப்பது பெரும் ஆறுதல்) அந்தி யேட்டிக் கிரியைகள் நடைபெறுகின்றன. இப்படியான ஒன்றுக்காகச் செல்லவேண்டிய ஒரு நிலை அண் மையில் எனக்கு ஏற்பட்டது.

அங்கு சென்றதன் பின்னர்தான் அந்த மடத்தின் நிலையைக் கண்டு கொள்ள முடிந்தது. மடத்தின் அலங்கோலத்தைக் கண்டு அருகில் இருந்த காய்ந்த வடலி ஓலைக் கீலங்களால் கூட்டிப் பெருக்கித் துப்புரவு செய்து கிரியைகள் மேற்கொள்வதற்காக - கிரியைகளுக்கு கோலம் போடுவதற்காக இடத்தைத் தயார்ப்படுத்திக் கொடுத்தோம். கிரியைகள் ஆரம்பிக்கும்போது குத்துவிளக்கை ஏற்றுவதற்கு கடற்காற்று இடம் தரவில்லை. மடத்தின் முன் வாசல் கடல் முகத்தைப் பார்த்தபடி அமைந்திருந்ததால் காற்றின் வல்லாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது அந்த மடம். ஏகாந்தப் பிரதேசம் என்பதால் கலாசார சீரழிவுகளுக்கு வழியேற்படுத்தலாம் என்றதொரு சிந்தனையும் இந்த மடத்தை அமைத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்குமோ என்னவோ.




கிரியைக்கான பொருள் பண்டங்களை எடுத்துக் கொண்டுவந்த அட்டைப்பெட்டியை காற்று வழத்துக்கு எதிராக நிறுத்தி வைத்து பெரிய கற்களால் அதற்கு முட்டுக்கொடுத்து அதனுள்ளே குத்து விளக்கை நிறுத்திவைத்து ஒளியேற்றுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. இதில் குறிப்பிட வேண்டியது என்னவெனில் அன்றைய கிரியைகளின் முதன்மை நாயகன் ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தராவார்.

மடத்தை அமைத்த தொழில் வல்லுநர்கள் பற்றிய விமர்சனங்கள், பலவாறாக எழுந்தன.

அங்கிருந்தவர்களில் ஒருவர் ஒருபடிமேலே போனவராக, "தம்பி நீரும் ஒரு ரீ.ஓ.தானே. இப்படியான வேலைகளைச் செய்யும்போது பொருத்தமான ஆலோசனைகளை வழங்கக்கூடாதா" என்று கேட்டுவிட்டார். பிதிர்க்கடன் செய்ய வந்த அந்தத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தலையாட்டிக் கொண்டே பிதிர்க்கடமையைச் செய்து கொண்டிருந்தார். அவரது இந்த நேரடி அனுபவம், இனி இங்கு பிதிர்க்கடன் நிறைவேற்ற வருபவர்களின் குறைபாடுகள் நீங்க வகை செய்ய வேண்டும்.

கடற்கரைகளைத் தூய்மைப்படுத்தும் தேசிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தக்காலப்பகுதியில் இந்தக் கடற்கரையையும் தூய்மைப்படுத்த இதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள், அமைப்புக்களைத் தூண்டும் விதத்தில் சமூக நலன்விரும்பிகள், ஆர்வலர்கள் செயற்பட வேண்டும். பிதிர்க்கடன் நிறைவேற்றவென தொலைதூரங்களுக்குச் சென்று, மணிக்கணக்கில் காத்திருப்பதுடன், பெரும் தொகையையும் செலவிடும் நிலையை இந்தப்பிரதேசம் சார் இந்துக்கள் தவிர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

நன்கு திட்டமிட்டு அந்தியேட்டி மடம், பெண்கள் உடைமாற்றும் இடம் ஆகியவற்றை அமைப்பதன் மூலம் பிதிர்க்கடன் நிறைவேற்ற வருவோர் தொகை அதிகரிக்கவும் ஒரு சிலருக்காவது வேலை வாய்ப்பை வழங்கவும் முடியலாம். இந்தக் கடற்கரைப் பகுதியைத் தூய்மைப்படுத்தும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தினால் உடற்சுகாதாரம், கடற்குளிப்பு என்று அங்குமிங்கும் அலைந்து கலாசார சீரழிவுக்குள்ளாகும் உள்ளூரவர்கள் மற்றும் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து கொள்வதுடன் அதேசமயம் எமது கலாசாரம் பிறழ்வுக்குள்ளாகாத வகையிலான பண்பாட்டுக் கட்டமைப்பையும் சமாந்தரமாக மேற்கொண்டு வலிகாமம் மேற்குப் பிரதேச சபை தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கானதொரு வழியை ஏற்படுத்துவதுடன் எமது பிரதேச இயற்கை வளங்களையும் பேணிக்கொள்ள முடியும்.

***செல்வவேலாயுதம்,***
யாழ்.நகர்.

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# எப்போது முடிவுக்கு வரும் சிறுவர் மீதான வன்முறைகள்?

சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாகத் தலை தூக்கத் தொடங்கியிருக்கின்றன. ஒரு சம்பவம் இடம்பெற்று, அதன் அலை அடங்குவதற்கு முன்பதாகவே அடுத்த சம்பவம் நடந்தேறுகின்றது. இந்தச் சம்பவங்களுக்கு ஓரிரு போராட்டங்கள் நடைபெறுவதுடன் அவையும் மௌனமாகி விடுகின்றன.

புங்குடுதீவில் பாடசாலை மாணவி வன்புணர்வின் பின்னரான படுகொலை, கிளிநொச்சியில் எள்ளுக்காட்டுச் சிறுமி படுகொலை, களுத்துறை மாவட்டத்தில் சிறுமி சேயா வன்புணர்வின் பின்னரான படுகொலை என்று தொடர்ந்து கொண்டிக்கின்றது இந்தப் பட்டியல். இந்தச் சம்பவங்களினால் எழுந்த அலைகள் அடங்குவதற்கு முன்பாகவே, வேலணையில் மற்றொரு சம்பவம் நடந்தேறியிருக்கின்றது.

சினிமா திரைப்படப் பாணியில் வேலணையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கணவருடன் வீட்டில் இருந்த பெண்ணை, வீடு புகுந்து கணவரைத் தாக்கி விட்டு கடத்தியுள்ளனர். கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திவிட்டுக் கொலை செய்வதற்குக் கூட முயன்றுள்ளனர். பாதிக்கப்பட்ட குறித்த பெண் தனது வாக்குமூலத்தில் இதனைத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

வேலணைச் சம்பவம் உள்ளிட்ட, சகல சம்பவங்களுடனும் தொடர்புடைய சந்தேக நபர்கள் உடனடியாகவே பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். நீதிமன்றங்களின் ஊடாகச் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த சில காலங்களுக்கு முன்னர் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படாத நிலைமை நீடித்திருந்தாலும், தற்போது அந்த விடயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் இந்த மாற்றத்தின் பயனை மக்கள் அனுபவிக்க முடியாத நிலையே இருக்கின்றது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவகப் பகுதிகளில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றதான தோற்றப்பாடு உருவாகி வருகின்றது. இது துரதிர்ஷ்டவசமானது என்று அரச அதிபர் நா.வேதநாயகன் கூடக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான நிலைமை ஆபத்தானது.

தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரச அதிபர் இதன்போது குறிப்பிட்டிருந்தாலும், இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது குறைவடைவதாக இல்லை. இந்த விடயத்தில் பொலிஸார் கூடுதல் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவர் கோரிக்கையும் விடுத்திருந்தார்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்குவதற்குரிய ஆதாரங்களைத் திரட்டவேண்டியது பொலிஸாரின் கடமை. அந்தக் கடமையைப் பொலிஸார் சரிவரச் செய்கின்றனரா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

பல்வேறு சம்பவங்கள் தொடர்பில், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும், குறித்த காலத்தின் பின்னர் அவர்கள் பிணையில் வெளிவருகின்றனர். அவர்களுக்குரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமாக இருந்தால், பொலிஸார் ஆதாரங் களைத் திரட்டி நீதிமன்றத்திற்கு கொடுக்க வேண்டும். அதனைச் செய்ய பொலிஸார் தாமதிப்பதும் இவ்வாறான குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஓர் வகையில் உந்துவிசையாக அமைந்து விடுகின்றது.

மேலும், இந்தப் பத்தியில் முன்னரும் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்று தண்டனை மீது பயமிருந்தால்தான், தவறு செய்வதற்கு எவரும் தயங்குவார்கள். எனவே, மீண்டும் தூக்குத் தண்டனை கொண்டு வரப்படுவது தொடர்பில் ஜனாதிபதி பரிசீலனை மேற்கொள்வது வரவேற்கக் கூடியது.

பல்வேறு நாடுகள், தூக்குத் தண்டனையை இரத்துச் செய்து வருகின்றன. ஆனாலும், தவறுகள் குறிப்பாக பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வரும் இலங்கை போன்ற ஒரு நாட்டில், தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதில் தவறேதும் இருக்காது. தண்டனை மீதான பயமே, தவறைக் குறைக்கும். அந்தத் தண்டனையை குற்றவாளிக்குப் பெற்றுக் கொடுப்பதில் பொலிஸாரும் முனைப்பாக இருக்க வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற் போனோர் விவகாரம்; ஐ.நா. உயர்குழு உதவுமா?

இலங்கையில் வலுக்கட்டாயமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில், விசாரணை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்டக் குழு ஒன்று, அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி கொழும்புக்கு வரவுள்ளது. அந்தக் குழு பத்து மாதங்கள் இங்கு தங்கியிருந்து செயற்படும்.

இந்தத் தகவல் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, இப்போது நடைபெறும் அதன் வருடாந்தக் கூட்டத் தொடர் வேளையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப விசாரணைக்குழுவுக்குத் தலைமை வகிக்கும் ஏரியல் டுயுவிற்ஸ்க்கி இதனை வெளிப்படுத்தி உள்ளார்.

இது விவகாரத்தில் -- விடயத்தில் -- வெறும் வாய்ச் சொற்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் கரைந்து போய்விட்டன. பாதிப்புற்ற உறவுகளின் மனத்துயரைப் போக்குவதற்கு உண்மை, நீதி நாடிய செயற்பாடே அத்தியாவசிய, அவசர தேவையாகும்.

மெக்சிக்கோ, திமோர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற (enforced) திணிக்கப்பெற்ற காணாமற் போகச் செய்யப்பட்டோர் விவகாரத்தைக் கையாண்ட வகையிலேயே, இலங்கை (அரசு) சம்பந்தப்பட்ட நிலையையும் கையாள உள்ளதாக என்று டுயுவிற் ஸ்க்கி அறுத்து உறுத்து அறிவித்துள்ளார்.

காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் பென்னம் பெரும் விவகாரத்தை, இலங்கை அரசு துளியாக நினைத்து அந்த வழித்தடத்திலேயே தொடர்ந்தும் நடைபோடுமே என்ற அச்சம் அவர்களின் உறவுகளை கடந்த சுமார் 30 ஆண்டுகளாக எலும்பும் தோலும் என்ற உடல் நிலைக்கும், தமக்கு வாழ்வா சாவா என்ற விரக்தியின் கடைசி எல்லைக்குள்ளும் தள்ளிவிட்டு உள்ளது. அதனை மனதார்ந்து உணர்ந்து உருப்படியாக எதனையும் கடந்த கால அரசு வெளிப்படுத்த வில்லை.

அதனை நாடி உண்மையாகவே உழைக்க வேண்டும் என்ற மனம் இன்றி, வெறுமனே விசாரணை ஆணைக்குழுவை நியமித்துக் காலத்தைக் கடத்திய, கடத்திக் கொண்டிருக்கின்ற, போசக்கை நாடகமே நடிக்கப்படுகிறது.

இது விவகாரத்தில், வாக்குறுதிகளாலும் வெறும் வார்த்தை ஜாலங்களாலும், பாதிப்புற்று அரை உயிர்களோடு அல்லாடும், காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் உறவுகளுக்கு வகை சொல்லும் பொறுப்பு முழுக்க முழுக்க அரசுக்கே உண்டு.

பழைய (மகிந்த) அரசு கவிழ்ந்து, புதிய (ரணில்) அரசு தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில்-

காணாமற் போனோர் என்று முத்திரை பதிக்கப்பட்டவர்கள் குறித்து அனைத்துலக முயற்சிகளையும் முறித்துக் கொட்டுவதற்கே இந்தப் புதிய அரசும் வகை செய்யுமோ என்ற ஏக்கமே பாதிப்புற்ற தமிழர் நெஞ்சங்களை - உறவுகளை உலுக்கிக் கொண்டிருக்கிறது.

வலுக்கட்டாயமாக அல்லது சுயவிருப்பமின்றி காணாமற் போகச் செய்யப்பட்டோர் விவகாரத்தில் அப்போதைய, இப்போதைய அரசுகள், அண்ணன் தம்பியராகவே நடந்துகொள்வது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது!

உண்மையை, உள்ளதைச் சொல்லபோனால்--


காணாமற் போகச் செய்யப்பட்டோரின் நிலைமையை அப்போதைய (மகிந்த) அரசும் சரி, இப்போதைய (ரணில்) அரசும் சரி மாமன் - மச்சான் என்ற நிலையில் நின்றே அணுகுவது துலக்கமாகத் தெரிகிறது!

நவம்பர் (கார்த்திகை) மாதம், இலங்கைத் தமிழ் மக்களின் சோகம் ததும்பும் காலமாகவே கடந்த 29 ஆண்டுகளாகத் தொடர்கிறது. நீத்தார் நினைவாக விளக்கு ஏற்றவும், ஆலயங்களில் நித்திய பூசை செய்யவும், இயலாத தடைகள் என்று நொந்து, நசிந்து மணித்துளிகளை ஓட்டும் பாவம் சூழும் காலம் அது.

**அந்த மாதத்திலேயே, இந்த ஆண்டில் இன்னமும் சுமார் ஒன்றரை மாதங்களில் ஏரியல் டுயுவிற்ஸ்க்கி - இலங்கையில் காலடி வைக்கப் போகிறார்.**

**அவரது இலங்கைக்கான வருகை, பாதிப்புற்ற தமிழ் மக்களது வாழ்வில் வெளிச்சத்துக்கு வழி சமைக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.**

**கொழும்பு அரசின் கழுகுக் கண்களுக்கு, அவர் எத்தகையவராகத் தென்படுவார் என்பதனைப் பொறுத்தே இது அமையும் என நம்பலாம்.**



# போர்க்குற்ற விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமா நல்லாட்சி

சேரலாதன்

இலங்கையின் வியப்புக்குரிய, விந்தையான அரசியல்வாதியான மகிந்த ராஜபக்ச முக்கிய பதவி எதனையும் வகிக்காது ஒதுங்கி இருப் பது அவருக்கு ஏதோ ஒரு வகையில் நன்மையை அளித்துள்ளது.

இதனால்தான் மகிந்தவை மின்சார நாற்காலியிலிருந்து தற்போதைய அரசு விடுவித்துவிட்டதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார். இறுதிப்போர் இடம்பெற்றபோது ஜனாதிபதியாக இருந்தவர் மகிந்த ராஜபக்சதான். போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் அவரே பொறுப்புக் கூறவேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அவரது எண்ணம் ஈடேறாததால் தற்போதைய அரசின் தலைமீது இது வீழ்ந்துள்ளது.

இன்று மகிந்த ஆட்சிப் பொறுப்பில் இருப்பாரேயாகின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வேறுவிதமாக அமைந்திருக்கும். அமெரிக்காவும் இலங்கைக்குச் சார்பான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய தேவையும் இருந்திருக்காது. மகிந்த ராஜபக்ச மேற்குலக நாடுகளைவிட சீனாவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். இதனை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. சீனாவை அந்த நாடுகள் பரம வைரியாகக் கருதியதால் மகிந்தவின் சீனச் சார்பான கொள்கையை அவை வெறுத்தன. இந்தியா கூட இதே நிலையில்தான் காணப்பட்டது.

> **மைத்திரி ரணில் நல்லாட்சி இலங்கையில் மலர்ந்துவிட்டதாகக் கூறுவது உண்மையாக இருக்குமேயானால் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அரசு பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். போர்க்குற்றவாளிகளுக்குத் தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்படுவதையும் அரசு உறுதி செய்ய வேண்டும்.**

மகிந்த ராஜபக்சவை வழிக்குக் கொண்டு வருவதற்கு இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் அமெரிக்காவுக்கும், மேற்குலக நாடுகளுக்கும் நல்ல வாய்ப்பாக அமைந்துவிட்டன. மகிந்தவும் தமது மேற்குலக எதிர்ப்புக் கொள்கை காரணமாகப் பெரும் எதிர்ப்புக்களைச் சம்பாதித்திருந்தார். இந்த நிலையில்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா நிறைவேற்றிக் கொண்டன. மகிந்த ராஜபக்ச தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருந்திருப்பாராயின் அமெரிக்காவின் தீர்மானம் அவர் மீது பாய்ந்திருக்கும். ஆனால் விதி மைத்திரிபால சிறிசேனவின் உருவில் வந்து அவரைக் காப்பாற்றி விட்டன. மைத்திரி தலைமையிலான புதிய அரசின் நடவடிக்கைகள் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளை வெகுவாகக் கவர்ந்து விட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்குலகின் பக்கம் சாய்ந்தவர் என்பதால் அரசின் மீதான நம்பிக்கை மேலும் அதிகரித்து விட்டது.

ஆனால் அமெரிக்கா கொண்டு வரவுள்ள புதிய தீர்மானத்தில் சர்வதேசத்தின் அனுசரணையுடன் கூடிய உள்ளகப் பொறிமுறையின் கீழான விசாரணைக்கே பரிந்துரைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலமாக நீதியான விசாரணைகள் இடம்பெறுவதையே அமெரிக்கா ஆதரிக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அவ்வாறு விசாரணைகள் இடம்பெறுமாயின் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பித்துச் செல்லும் வாய்ப்பு மிகக் குறைவானதாகவே இருக்கும்.

மேலும் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை மேற்குலக நாடுகள் மட்டுமல்லாது இந்தியாவும் ஆதரிக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் விசாரணைகள் இடம்பெற்று நீதி நிலை நாட்டப்படுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர 18 மாதங்களுக்குள் விசாரணைகள் பூர்த்தியடைந்து விடுமென ஜெனிவாவில் வைத்துக் கூறியுள்ள போதிலும், இதனை நம்புவதற்கில்லை. இலங்கையின் கடந்தகால அனுபவங்கள் இவ்வாறு நினைப்பதற்குத் தூண்டுகின்றன. மேலும் போர்க் குற்றங்கள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள படையினர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதை இலங்கை அரசு அனுமதிக்குமா என்பதும் சந்தேகமே. ஏனென்றால் போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படுவதற்கு எதிரான வாக்குறுதிகள் அரசின் உச்சமட்டத் தலைவர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் மகிந்த ராஜபக்சவும் அடங்குகின்றார்.

ஆனால் பெரியதொரு பொறிக்குள் இலங்கை அரசு மாட்டிக் கொண்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் நடந்து கொள்ளவேண்டிய தேவையும் அதற்குண்டு. ஏனென்றால் இலங்கையில் நல்லாட்சி ஒன்று நிலவுவதாகக் கூறிவிட்டு வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விடுவது அரசின் நம்பகத் தன்மைக்கு குந்தகத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இந்த நிலையில் இறுதிப் போரின்போது இடம்பெற்ற வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்படாமை ஐ.நாவின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஏனென்றால் இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களில் வெள்ளைக்கொடி விவகாரம் முக்கியத்துவம் வாய்ந்தது. இனிமேல் இடம்பெறப்போகும் விசாரணைகளில் இந்த விவகாரத்தையும் உள்ளடக்குவது ஐ.நாவின் முக்கிய பொறுப்பாகும். ஏனென்றால் நம்பியார் போன்ற ஐ.நா. அதிகாரிகள் பொறுப்பற்ற விதமாக நடந்து கொண்டதால் வெள்ளைக்கொடி ஏந்தியவாறு சரணடையச் சென்ற புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கோரமாகக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஐ.நாவின் பக்கமே விரல்கள் நீட்டப்பட்டன. இது தொடர்பாக ஐ.நாவும் சரியான விளக்கம் எதனையும் இதுவரை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**மைத்திரி ரணில் நல்லாட்சி இலங்கையில் மலர்ந்துவிட்டதாகக் கூறுவது உண்மையாக இருக்குமேயானால் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அரசு பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். போர்க்குற்றவாளிகளுக்குத் தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்படுவதையும் அரசு உறுதி செய்ய வேண்டும். இதைவிடுத்து வெறுமனே நல்லாட்சி என்று மட்டுமே கூறிக்கொள்வதில் எந்தவிதமான அர்த்தமும் கிடையாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகதீபம் தீலிபனின் தியாகம் வீண் போகப் போவதில்லை

மூனாத்தானா



இன்று தியாக தீபம் திலீபனின் 28 ஆவது நினைவு தினம்

**1987 செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி இலட்சிய வெறியுடன் புறப்பட்ட தியாக தீபம் திலீபன் இந்திய அரசை நோக்கி ஐந்து கோரிக்கைகள் முன் வைத்து நல்லூரான் வீதியில் உண்ணா நோன்பு விரதத்தை ஆரம்பித்து செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி முற்பகல் வேளையில் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் தன்னுயிரை ஈகம் செய்தார்.**

28 ஆண்டுகள் நிறைவடைகின்ற காலகட்டத்தில் தியாக தீபம் திலீபனது நினைவு நாளும், விட்டுச் சென்ற கனவுகளும் ஈழத்தமிழர்களது இதயங்களில் ஏதோ ஒரு வகையில் இன்றும் நெருப்பாய் எரிந்தவாறு உள்ளது. திலீபனது கனவுகள் நனவாகவில்லை. தமிழருக்கு விடிவு கிடைக்கவில்லை. திலீபனது ஐந்து கோரிக்கைகள் எவையும் நிறைவேறவில்லை.

தமது இலட்சியப் பயணத்தில் இம்மியளவும் விலகாது உண்ணா நோன்பை மேற்கொண்டு 12 ஆவது நாளில் தனது இன்னுயிரை ஈகம் செய்த இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட திலீபனது உயிர்த்தியாகம் உன்னதமானது, மகத்துவமானது மனித குலத்தினால் போற்றப்படக் கூடியது.

1987 செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி இலட்சிய வெறியுடன் புறப்பட்ட தியாக தீபம் திலீபன் இந்திய அரசை நோக்கி ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரான் வீதியில் உண்ணா நோன்பு விரதத்தை ஆரம்பித்து செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி முற்பகல் வேளையில் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் தன்னுயிரை ஈகம் செய்தார். தியாக தீபம் திலீபனது 28 ஆவது ஆண்டு நினைவு நாளை தமிழினம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் நாள் இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தம் ஈழத்தமிழர்களின் வாழ்வில் சீர்குலைவை ஏற்படுத்தியிருந்தது. ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் இந்தியா எப்போதும் தமிழினத்துக்கு அனுசரணையாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஈழத் தமிழர்கள் மட்டுமல்லாது தமிழகத் தமிழ் மக்களும் கொண்டிருந்தனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இலங்கை அரசியலில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டதுடன், தமிழர்களின் போராட்டங்களும் பல்வேறு வடிவங்களை எட்டியது. 1987 ஆம் ஆண்டு மே மாதம் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் மேற்கொள்ளப்பட்ட வடமராட்சி (லிபரேசன் ஒபரேசன்) நடவடிக்கையின் பின்னர் இந்தியாவின் அரசியல் தலையீடு இலங்கையில் தவிர்க்க முடியாததாகிவிட்டிருந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பை தனது வழிக்குள் கொண்டு வந்து, தமது காலடியில் வைத்திருக்க விரும்பியது இந்தியா.

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி சில உறுதிமொழிகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருந்தாலும் அவற்றை நிறைவேற்றவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஈழத்தமிழர் சம்பந்தமான விடயங்கள் எதுவும் பெரிதாகக் குறிப்பிடவில்லை என்பதை விடுதலைப் புலிகள் அமைப்பு சுட்டிக் காட்டியிருந்தது.

இந்தியா மூலமாகத் தமிழருக்கு விடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை தியாக தீபம் திலீபனின் சாவுடன் தமிழர்கள் மத்தியில் இருந்து அகன்று போனது.

திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்று நல்லூர் வீதியில் நீர் கூட அருந்தாமல் உண்ணாநோன்பை ஆரம்பித்திருந்தார். இந்தியா மீது ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்த திலீபன் செப்ரெம்பர் மாதம்26 ஆம் திகதி வீரசுவர்க்கமடைந்தார். 12 நாள்கள் வரை தான் முன்வைத்த கொள்கையில் வழுவாது உறுதி கொண்ட தூய்மைப் போராளி உண்ணா நோன்பு மேற்கொண்டபோது, இந்திய அரசு திலீபன் முன்வைத்திருந்த ஐந்து கோரிக்கைகளையும் இம்மியளவேனும் கவனத்திலெடுக்காது தனது கபடத்தனத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

திலீபன் தான் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா நோன்பு இருப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளவில்லை. தமிழருக்குப் பாதகமான நடவடிக்கையை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு தீவிரமாக மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதே அவரது பிரதான கோரிக்கையாக இருந்தது. திலீபனின் ஐந்து கோரிக்கைகளும் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. மீள் குடியமர்தல் என்ற போர்வையில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக நடைமுறைப்படுத்தப்படும் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
2. சிறைக் கூடங்களில் இராணுவப் பொலிஸ் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும்.
3. அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.
5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக நிறுவப்படும் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் நின்று உயரிய இலட்சியத்துடன் போராடி உயிர் நீத்த திலீபன் ஒரு வரலாற்று நாயகனாவார். அவர் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தில் நல்லூர் வீதியில் தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்று திரண்டு வந்து இணைந்து கொண்டனர். மக்கள் ஆதரவுடன் தியாகதீபம் திலீபன் தனது உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்த வேளையில் இந்திய அரசு திலீபனது ஐந்து கோரிக்கைகள் மீது அக்கறை கொள்ளவேயில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதங்களைப் பறித்தெடுப்பதில் இருந்த வேகம் திலீபன் முன்வைத்த 'கோரிக்கைகள் மீது இருக்கவேயில்லை.

திலீபனின் உண்ணாவிரதத்தை தோற்கடிப்பதிலும், தடுப்பதிலும் இந்திய அமைதிப்படை முழுமூச்சாகச் செயற்பட்டது. ஆனால் அதைத் தடுக்க முடியவில்லை.

காந்தி தேசம் எனப் புகழ்பாடும் இந்தியா திலீபனின் அகிம்சைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி தவறான போராட்டம் என தப்புக் கணக்குப் போட்டது. இந்திய தேசத் தந்தையான மகாத்மா காந் தியின் உண்ணாவிரதப் போராட் டம் எந்த வகையில் குறைந்தது என எண்ணிய இந்தியா, காந்தி நீர் அருந்தித் தானே நோன்பிருந்தார். திலீபன் நீர் குடிக்காதது காந்திய வழியா? எனக்கூறி அவமானப் படுத்தியது. இந்திய தேசம் திலீபனது உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாள்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில் திலீபனின் அறப்போரைக் கண்டு கொள்ளாது சாவடையட்டும் என நாள்களை எண்ணிக் கொண்டிருந்தது.

உலகத்துக்கே அகிம்சையை போதித்ததாகப் பறைசாற்றும் இந்தியாவைப் பின்பற்றி அதே அகிம்சையை ஆயுதமாக வைத்து தமிழ் மக்களின் பிரச் சினைகளை தீர்க்க முடியும் என விடுதலைப்புலிகள் நம்பினர்.

இந்த நம்பிக்கையுடன்தான் தமிழர்களுடைய அடிப்படைப் பிரச்சிகைளைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைமையின் கட்டளைக் கமைவாக செயல் வடிவம் கொடுப்பதற்கு முன்னின்ற போராளியாக தியாக தீபம் திலீபன் முன்வந் தமையானது மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் தனக்கும் ஒரு முக்கிய பங்கு இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துக் காட்டியது.

யாழ்ப்பாணம் ஊரெழுவை சொந்த இடமாகக் கொண்ட திலீபன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக தமது சொந்த வாழ்க்கையையே இளவயதில் தூக்கியெறிந்து விட்டு விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டவன். மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகிய நிலையில் அதனை நிராகரித்து மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இரண்டறக் கலந்து கொண்டு அணிவகுத்து நின்றவன்.

1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி பிறந்த திலீபன் தனது 24 ஆவது வயதில் உண்ணா நோன்பைக் கடைப்பிடித்தார்.

தியாகம் என்றால் திலீபன். திலீபன் என்றால் தியாகம் என்று கூறுகின்ற அளவுக்கு திலீபன் மேற்கொண்ட போராட்டம் அதி உச்சமானது, உன்னதமானது. வார்த்தைகளால் வடிக்க முடியாதது. என்றென்றும் திலீபனின் தியாகம் வீண்போய் விடக்கூடாது. ஆயிரம் ஆயிரம் மக்கள் நல்லூரான் வீதியில் நடக்கின்றபோது, 12 நாள் நடந்த யாகத்தில் ஆகுதியான திலீபனின் நாமத்தை உச்சரிக்கின்றபோது, அந்தப் பன்னிரண்டு நாள் வரையில் இந்தியாவின் ஏமாற்றுத்தனத்தையும், முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிப்போரின்போது இந்தியா இலங்கை அரசுக்குச் செய்த பேருதவிகளையும், தமிழினத்தை அழிப்பதற்கு உறுதுணையாக இருந்ததையும் நினைக்கும் போது இரத்தக் கண்ணீரைத் தான் வடிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 3 | | | 7 | |
| 2 | | | | | | 6 | | 3 |
| | | | | | | | 5 | |
| 1 | | | | | | | | 7 |
| | 9 | | 3 | 6 | | 5 | | |
| | 8 | | 9 | | 2 | | | |
| | 6 | 2 | | 1 | 7 | | | |
| 7 | | 8 | 4 | | | | | 6 |
| | | | | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 | 1 | 2 |
| 7 | 2 | 3 | 6 | 5 | 1 | 8 | 9 | 4 |
| 1 | 8 | 4 | 2 | 3 | 9 | 7 | 6 | 5 |
| 4 | 9 | 5 | 3 | 6 | 8 | 1 | 2 | 7 |
| 2 | 1 | 8 | 9 | 7 | 5 | 4 | 3 | 6 |
| 3 | 6 | 7 | 4 | 1 | 2 | 9 | 5 | 8 |
| 5 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 | 4 | 1 |
| 8 | 4 | 2 | 1 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 6 | 7 | 1 | 5 | 4 | 3 | 2 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள் ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர விலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### துணிச்சலுடன் உங்கள் கடமையைச் செய்யுங்கள்

கற்பு என்பது ஆண் பெண் என்ற பேதமில்லாமல் இருபாலாரிடமும் இருக்கவேண்டிய நன்னெறி ஆகும்.நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல், தோற்றம் கூட மாறிவிடும். நீங்கள் மனிதகுலத்துக்கே ஒரு வரப்பிரசாதமாக மாறிவிடுவீர்கள்.எதை நினைக்கிறீர்களோ அதுவாகவே ஆகிறீர்கள். நீங்கள் உங்களை வலிமையுள்ளவர்களாக, மனத்தூய்மை மிக்கவர்களாக எண்ணினால் நிச்சயம் அப் பண்புகள் உங்கள் உணர்வோடு கலந்து விடும்.நீங்கள் மகத்தான பணிகளைச் செய் வதற்காகப் பிறந்திருக் கிறீர்கள். சிறிய நாய்க் குட்டிகளின் குரைப் பைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. எழுந்து நின்று துணிவுடன் உங்கள் கடமை யைச் செய்யுங்கள். பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் நமக்கு நாமே நன்மை செய்தவர்களா கிறோம். நன்மை பெறு வதற்கான ஒரே வழி இது மட்டும் தான். எப்போதும் விரிந்து மலர்வது தான் வாழ்வின் பயனாகும். உங்கள் மனம் பரந்த நோக்குடன் திகழட்டும். தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிச்சிகரத்தை எட்டிப் பிடிக்கத் தேவையான குணங்கள். இவை அனைத் துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண் டும். கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடி கொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் உலகில் இல்லை. உயிர்களுக்கு சேவை செய்வதன் மூலம் நாம் கடவுளுக்கே சேவை செய்தவரா கிறோம்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 60 | 60 | 30 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 60 | 60 | 80 | 40 |
| கரட் | 50 | 120 | 120 | 80 | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50 | 40 |
| பயிற்றை | 60 | 40 | 60 | 60 | 70 | 80 | 100 | 50 |
| பாகல் | 100 | 100 | 120 | 100 | 80 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 70 | 120 | 60 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 80 | 100 | 80 | 100 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 80 | 100 | 80 | 100 | 100 | 60 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 80 | 60 | 70 | 100 | 80 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 30 | 30 | 30 | 25 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 130 | 140 | 160 | 160 | 200 | 120 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 60 | 40 | 80 | 40 |
| கோவா | 70 | 80 | 70 | 70 | 60 | 80 | 100 | 50 |
| வெண்டி | 50 | 40 | 50 | 60 | 60 | 40 | 50 | 25 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 160 | 160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 | 80 | 70 | 100 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50 | 40 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 100 | 80 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 180 | 120 | 120 | 120 | 100 | 240 | 160 | 180 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 120 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 140 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 | 80 | 120 | 80 | 120 | 80 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 550 |
| நண்டு | 300 | 400 | 300 | 350 | 250 | 400 |
| கணவாய் | 650 | 600 | 300 | 500 | – | – |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 500 | 420 |
| சுறா | 500 | 500 | – | 650 | 600 | – |
| சீலா | 300 | 400 | 300 | 400 | 400 | 350 |
| விளை | 700 | 450 | – | 500 | 500 | 350 |
| முரல் | 350 | 400 | – | 450 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 500 | – |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 500 | – | – |
| ஒரா | 350 | 300 | 300 | 450 | – | – |
| திரளி | 250 | 250 | 100 | 350 | 200 | 250 |
| நகரை | 200 | 250 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 80 | 120 | 150 | 80 |
| ஒட்டி | 250 | 300 | 100 | 350 | – | – |
| திருக்கை | 150 | 300 | 250 | 300 | 250 | 150 |
| பாலை | 400 | 250 | – | 500 | 500 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 400 | 250 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | 100 | |
| மதனம் | 150 | 200 | – | 300 | – | 200 |

### நாளை

புரட்டாதி–10
ஞாயிற்றுக்கிழமை
27.09.2015

*திதி: சதுர்த்தசி
மு.ப.11.40 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
மு.இ.09.46 வரை
சுபநேரம்:
09.02–10.32 வரை
இராகுகாலம்:
04.32–06.02 வரை
பூரணை விரதம்.
உமாமகேஸ்வர விரதம்.
கடையிற் சுவாமி குருபூஜை*

## முளைகட்டிய உருளைக்கிழங்கை சாப்பிடுவது ஆபத்தானதா?

காய்கறிகளில் ஒன்றான உருளைக்கிழங்கை சமையல் செய்து சுவைப்பதை ஏராளமானோர் விரும்புவார்கள்.

வறுவல், போண்டா என சுவைத்தாலும், உருளைக் கிழங்கு முளை கட்டுவதால், அதனுள் ஒருசில இரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. முளை கட்டிய உருளைக்கிழங்கில் உள்ள ஸ்டார்ச் சர்க் கரையாக மாற்றப்படுகிறது. மேலும் நன்கு முற்றிய உருளைக்கிழங்கு மென்மையாக இருப்பதற்கு, அதில் உள்ள காபோவைதரேட் சர்க்கரையாக மாற்றமடைந்திருப்பது தான் காரணம். உருளைக் கிழங்கு இப்படி மாற்றமடையும்போது அது இரண்டு வகையான விசமிக்க அல்கலாய்டுகளை உற்பத்தி செய்கிறது. அவையாவன, சோலனைன் மற்றும் ஆல்பா சாகோனைன். இதில் சோலனைன் கூடிய விசத்தன்மை கொண்டது. இதனைச் சிறிதளவு உட்கொண்டாலே மிகவும் ஆபத்து. இதனால் பல தீவிர விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

உருளைக்கிழங்கின் தோல் பச்சையாக இருந் தாலும், அதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அவற்றில் அந்த அல்கலாய்டுகள் இருக்கும். நீங்கள் வாங்கிய உருளைக்கிழங்கில் பச்சை நிறத்தோல் இருந்தால், அந்தப்பகுதியை நீக்கி விடுங்கள். பொதுவாக முளைகட்டிய கிழங்கு ஆரோக்கியமானது என்ற கருத்து இருப்பதால், இதுக் குறித்து ஆய்வு ஒன்றில் பரிசோதிக் கப்பட்டது. அந்த ஆய்வின் முடிவில் முளை கட்டிய உருளைக்கிழங்கில் முளை கட்டியதை மட்டும் நீக்கிவிட்டு சாப்பிடலாம் என்று தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நல் வாழ்த்துகள்

வி்க்ரர் வதனராஜ் சுமதி



26.09.2015 இன்றைய
பொன்நாளாம் நன்நாளில்
யாழ். தூய மரியன்னை
பேராலயத்தில்
சுப மங்கல
மெய்விவாகத்தினால்
இணைக்கப்பட்டு
திருமணத் தேரிலேறி
மணவாழ்வெனும் புது உலகிற்கு
வருகை தரும் வசந்த
காலபறவைகளாம்
விக்ரர் வதனராஜ்
சுமதி எனும்
புதுமணத்தம்பதியரை
பதினாறும் பெற்று
பலகாலம் சீருடனும்
சிறப்புடனும் வாழ
இதய மலர்கள் தூவி
வாழ்த்துகின்றோம்.

விக்ரர் வதனராஜ்



Wedding Wishes


சுமதி

ராஜ்மஹால்
இல.107, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம்.

நெஞ்சார வாழ்த்தும்:
அப்பா, அம்மா,
அக்கா, அத்தான், அண்ணா, அண்ணி
தம்பி, மச்சாள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பகுத்தறிவு


ஒரு மகாராஜாவின் மகன் மிகவும் மக்காக இருந்தான். அதிகாரம் உள்ள பல குடும்பங்களில் இந்த மக்கு மகன்பிரச்சினை எப்போதும் உண்டு. அவனுக்கு ஆட்சியைக் கொடுக்க மக்கள் விரும்பவில்லை. மூத்தவர் சபை அதனை எதிர்த்தது. என்ன செய்யலாம் என்று அரசர் கவலைப்பட்டார். வெளி நாட்டில் திறமையான கலாசாலையில் மகனைச் சேர்த்துவிட்டால் அவர்கள் எப்படியும் அறிவாளி ஆக்கிவிடுவார்கள் என்று மகாராஜா முடிவு செய்தார். அங்கு பலதுறைகள் இருந்தன. உயர்தரமான அந்தக் கலாசாலையில் ஐந்து வருடங்கள் தங்கிப் படித்துவிட்டு இளவரசன் நாடு திரும்பி வந்தான். அவனது நடையுடை, பாவனைகள் என எல்லாம் மாறியிருந்தன. புளிச்சென்று உடையணியப் பழகியிருந்தான். அழகாக நடப்பது, கைகுலுக்குவது, மரியாதையாய்ப் பேசுவது என்று நிறைய மாற்றங்கள். மகாராஜாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. முதியோர் சபையில் மகனை நிறுத்தி அவர்கள் அனுமதியுடன் அறிவாளியாக்கப்பட்ட மகனை அரசனாக்க நினைத்தார். பலரும் அவனை அறிவாளி என்றே ஒப்புக் கொண்டனர். பல்கலைக் கழகத்தின் சாதனையைப் பாராட்டினர். ஒரு வயதானவர் மட்டும் இளவரசனைச் சோதிக்க நினைத்தார். என்ன படித்தாய்? என்றார். நிறைய, நிறைய... சோதிடம் கூட முறையாகக் கற்றுத் தந்தார்கள். நீங்கள் சோதிடத்தில் கேள்வி கேட்டால் கூடச் சொல்வேன் என்றான். வயதானவர் தமது மோதிரத்தை உள்ளங்கையில் வைத்து மூடிக் கொண்டு, இது என்ன? என்றார். இளவரசன் யோசித்தான். ஒரு காகிதத்தை எடுத்து கணக்குப் போட்டான். உங்கள் கையில் உள்ளது வட்டமானது. நடுவில் ஓட்டையானது. ஒளியுடையது என்று விடை சொன்னான். வயதானவருக்கு உள்ளூரச் சந்தோஷம். இருந்தாலும்,அடையாளங்களைச் சொல்கிறாயே ஒழிய அது இன்னதென்று சொல்லக்கூடாதா? என்றார். அது எங்கள் பாடத்திட்டத்தில் இல்லை என்றார் இளவரசன். யூகித்துச் சொல் என்றான் வயதானவர். உடனே இளவரசன் பாடத் திட்டத்தில் இல்லையென்றாலும் எனது பொது அறிவை வைத்துச் சொல்லி விடுவேன்.. அது ஒரு வண்டிச் சக்கரம் என்றான். சர்வகலாசாலை சொல்லிக் கொடுத்ததைச் சரியாகச் சொல்லி விட்டான். ஆனால் வண்டிச்சக்கரத்தை எவரும் உள்ளங்கையில் ஒளித்து வைக்க முடியாது என்ற சின்ன விடயம் கூட அந்த மடையனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

முட்டாளையும் படிப்பாளியாக்க முடியும். ஆனால் அறிவாளியாக்க முடியாது.

## அதிசயங்கள் நிறைந்த இலங்கைத் தீவு

- இலங்கை இயற்கை அழகு மிக்கது. இதனை ஸ்ரீலங்கா, இரத்தினதுவீபம், தப்பிரபேன், ஈழம் என்றும் அழைப்பர்.
- இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும்.
- இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
- இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப்பல இனத்தவர் வாழ்கின்றனர்.
- இலங்கையில் இருந்து தேயிலை, இறப்பர், தைத்த ஆடைகள் என்பன ஏற்றுமதியாகின்றன.
- இலங்கையில் பேதுருதாலகால, சிவனொளிபாதம் போன்ற பெரிய மலைகள் உள்ளன.
- இலங்கையில் மகாவலிகங்கை, களனிகங்கை, மாணிக்க கங்கை போன்ற ஆறுகள் பல உள்ளன.
- இலங்கையின் நிர்வாகத் தலைநகர் ஸ்ரீஜயவர்த்தனபுர ஆகும்.
- இலங்கையின் கொழும்பு மாவட்டத்தில் அரச அலுவலகங்கள் பல உள்ளன.
- இலங்கையில் அழகான நீர்வீழ்ச்சிகள் பல உள்ளன.
- பிற நாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகள் பலர் இலங்கைக்கு வருகின்றனர்.
- உல்லாசப் பயணிகள் நுவரெலியா, பாசிக்குடா, ஹிக்கடுவை, நீர்கொழும்பு, திருகோணமலை, கண்டி ஆகிய இடங்களுக்குச் செல்கின்றனர்.
- இலங்கையின் இயற்கை அழகு உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்கிறது.
- இந்து சமுத்திரத்தின் முத்து என்று இலங்கையை எல்லோரும் போற்றுகின்றனர்.

# காலம் பொன்னானது



காலம் என்பது பொன்னானது. அதைத் தவறவிட்டால், வாழ்க்கையில் இழப்புகளையே அனேகமாகச் சந்திக்கின்றோம். காலமும் வெள்ளமும் எவருக்காகவும் காத்திருப்பதில்லை என்கிறார்கள். இரண்டுமே அதன் போக்கில் போய்க் கொண்டிருக்கும், அதோடு சேர்ந்து நாமும் ஓடினால்தான் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க முடியும்.

நம்மைச் சுற்றி நேரத்தை அலட்சியப்படுத்துபவர்கள் ஏராளமான பேர் இருக்கின்றார்கள். இதன் அறுவடையையும் அனுபவித்து வரு கின்றார்கள்.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும் வாளது உணர்வார்ப் பெறின் என்கிறார் வள்ளுவர் பெருமான். ஒவ்வொரு நாளும் காலை, நண்பகல், மாலை என ஒன்றுபோல் தோன்றி ஏமாற்றும். உண்மையில் அது நமது வாழ்நாளைச் சிறிது சிறிதாய்க் குறைக்கும் வாள் என்பதுதான் இந்தக் குறளின் பொருள்.

காலம் என்பது எமது கண்முன்னே மெல்ல மெல்லக் கழிகின்றது. கழிந்த பொழுது என்றுமே திரும்பி வரப்போவதில்லை.

எனவே இந்தக் காலம் என்பதை விரயமாக்காது நாம் நடந்து கொள்ளத் தவறினால், எமது வாழ்வில் என்றுமே ஒழுங்கீனம் என்பது மட்டுமல்ல, பல வாய்ப்புகள் கைநழுவியும் விடுகின்றன.

நேரம் என்பதுதான் வாழ்வின் ஆத்மா என்கிறார் ஒரு பிரபல்யமான ஆங்கிலக் கவிஞர். மனிதன் நேரத்தை அளவிடுகின்றான். நேரமோ மனிதனை அளவிடுகின்றது என்பது ஓர் இத்தாலியப் பழமொழி. காலத்தின் காயங்களைக் காலம்தான் குணப்படுத்துகின்றது என்பது பிரான்ஸ் நாட்டில் வழமையிலுள்ள ஒரு பழமொழி!. நேரம் பல பொன்னான வாய்ப்புக்களைத் திருடி விடுவது நிஜந்தான்! ஒரு நிமிடம் என்பது எந்த அளவுக்கு நீண்டது என்று கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்? என்ன ஓர் அற்ப பொழுதான ஒரு நிமிடத்தை எவ்வளவு நீண்டது என்று கேட்கிறாரே என்ற முணுமுணுப்பு உங்களிடமிருந்து வருகின்றதா? சற்றே பொறுங்கள். இயற்கை அழைப்பின் உபாதையில் கழிவறையின் கதவடியில் காத்து நிற்கிறீர்கள் நீங்கள். மூடிய கதவின் மறுபக்கம் உள்ளே நிற்பவர் வெளியே வர சில சமயம் வெறும் ஒரு நிமிடமாக இருக்கலாம். ஆனால் உங்களுக்கோ அந்த இக்கட்டான நிலையில், இந்தக் காத்திருப்பு நேரம் ஒரு யுகம் போல இருந்திருக்கும். அதாவது ஒரு நிமிடம் ஒரு யுகம் அளவுக்கு நீண்டது என்ற பதிலை இங்கே பார்க்கிறோம். ஒத்துக் கொள்கிறீர்களா? நேரம், நேரம், நேரம் அது மிகவும் முக்கியமானது மாத்திரமல்ல. பொல்லாத ஒன்று என்றும் சொல்ல[illegible] அதிகம் தேவைப்[illegible] ஆனால் நாமோ அதை மிக மோசமான வழியில்தான் உபயோகித்து வருகின்றோம். எவருக்குமே சமமான வாய்ப்பைக் கொடுப்பது நேரம். எவருக்குமே தினசரி ஒரே அளவு மணித்தியாலங்களும், நிமிடங்களும் கிடைக்கின்றன. பணக்காரர்களாக இருந்துவிட்டால் அதிகமான மணிநேரத்தை எந்த ஒரு நாளிலும் வாங்கிவிட முடியாது. விஞ்ஞானி களால், புதிதாக ஒரு மணி நேரத்தைக் கண்டுபிடித்து ஒரு நாளில் இணைக்க முடியாது. இன்று சேமித்து நாளை உபயோகிக்க முடியாதது நேரம். இன்றைய பொழுது நாளை வராத ஒன்று. அப்படியிருந்தும் நேரம் பெருந்தன்மையாகவே உங்களுடன் நடந்து கொள்கின்றது. நீங்கள் கடந்த காலங்களில் நேரத்தை வெறுமனே விரயம் செய்திருந்தாலும், ஒரு புதிய நாளில் புதிதாக 24 மணித்தியாலங்களை அது கொட்டி மீண்டும் ஒரு வாய்ப்பளிக்கின்றது. நேரம் என்பது அற்புதமான ஓர் ஆசிரியராக இருந்தும், துரதிருஷ்டவசமாக [illegible]கள் சிலரைக் கொல்லத் [illegible]லை. நேரம் என்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்றாக இருந்தும், நாம் ஒவ்வொருவரும் வேறு வேறு வழியில் உபயோகிக்க முனையும் போது தான் விளைவுகள் மாறுபட ஆரம்பிக்கின்றன. நேரத்தைக் காட்டும் கடிகாரத்தின் முட்கள் என்றுமே பின்னோக்கி ஓடுவதில்லை. நமது வாழ்விலும் இதையே செய்யும்படி இந்த முட்கள் நம்மை நிர்ப்பந்திக்கின்றன. காலம் என்பது கடிகார முட்கள் போல வேகமாக முன்னோக்கி ஓட, ஞாபகங்கள் மாத்திரம் எமது மனதில் உறைந்து கிடப்பதால், பல சமயங்களில் எமது வாழ்வின் பொல்லாத, நல்ல நேரங்களை இரைமீட்டுப் பார்க்க முடிகின்றது.

எவர் வாழ்விலும் ஒரு குறிக்கோள் என்பது இருந்தால்தான், நேரம் என்பதைச் சீராகவும், அர்த்தம் உள்ளதாகவும் எம்மால் மாற்ற முடியும். நேரம் என்பதை அலட்சியம் செய்து ஓரம் போனீர்களானால் உங்கள் இலட்சியப் பாதை வெகு தூரம் போய்விடும். எனவே நேரத்தை மதிப்போம். அது எங்களை நிச்சயம் மதிக்கும். வாழ்வில் உயர்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 26

முத்தான வியர்வை 2015 வாழ்வின் எழுச்சி விற்பனைக் கண்காட்சி நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும் இந்த நிகழ்வுக்கு நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறீ தலைமை வகிக்கவுள்ளார். நிகழ்விவுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக வாழ்வின் எழுச்சித் திணைக்கள கணக்காளர் திருமதி யூ. வோட்டன் மஞ்சுளா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி ம.சுபாஜினி, நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் திருமதி ர.கலைச்செல்வி, நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை அதிபர் ரி.மனோகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-10)

## 31ஆம் நினைவு நாள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 19 . 08 . 1966 |  | 27 . 08 . 2015 |

**திருமதி றோஸ்மேரி வசந்தா விக்ரர் ஜெயக்குமார்**

*"உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்"*

*(மத் 25:21)*

4/5, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(64937)(10.17)

## நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரையுள்ளது கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான கூட்ட அறிவித்தல்

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

**காலம் : 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு**

| கிளை இல. | கிளைகளின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 1 | கோட்டைக்காடு | கிளை இல 01 கோட்டைக்காடு கிளைக் கட்டடம் |
| 2 | சாறாப்பிட்டி | கிளை இல 02 சாறாப்பிட்டி கிளைக் கட்டடம் |
| 3 | மத்தி | கிளை இல 03 மத்திக் கிளைக் கட்டடம் |
| 4 | மாவிலித்துறை | கிளை இல 04 தலைமைச் செயலகக் கட்டடம் |
| 5 | மகாவித்தியாலயப் பகுதி | கிளை இல 05 மகாவித்தியாலய கூட்டுறவுக் கட்டடம் |
| 6 | நெழுவினி | ஜே 01 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகக் கட்டடம் |
| 7 | தீர்த்தக்கரை | கிளை இல 07 தீர்த்தக்கரை கிளைக் கட்டடம் |

சகல கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் தபால் மூலம் கூட்ட அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளிக்க தகுதியுடையவர்களுக்கு அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாத விடத்து இந்த அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடமாகாணம், யாழ்ப்பாணம்.

(64945)(10.17)

திருமதி. மதுமதி வசந்தகுமார்.
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்க பதிவாளரும் (வ.மா)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 . 02 . 1927 |  | 06 . 10 . 2014 |

**அமரர் முத்து பொன்னையா**

**(ஓய்வுநிலை கிளை முகாமையாளர்)**

பொறுமையோடும் துணிவுடனும் செயலாற்றி
பெற்ற பிள்ளைகளின் உயர்வுக்கெல்லாம்
வழிகாட்டி வளம் சேர்த்து
அவனியில் என்றும் புகழுடன் வாழவைத்த
அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(64903)(10.17)

அம்மன் வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

## 16ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 . 09 . 1954 |  | 12 . 09 . 2015 |

**அமரர் மீனாட்சி சுந்தரம் கோவிந்தராசா**

கடந்த 12.09.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த அமரர் மீனாட்சி சுந்தரம் கோவிந்தராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் துண்டுப் பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ராஜபதி
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

மனைவி, பிள்ளைகள்,
பேரமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நன்றி நவிலல்

**திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை**

**(பாஷையூர் சட்டத்தரணி T.M.அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவி)**



எமது குடும்பத்தலைவி திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த 11.09.2015இல் இறைபதமடைந்த செய்தி கேட்டு அன்னாரின் இல்லத்திற்கு வருகை தந்து, துயர் பகிர்ந்து, ஆறுதல் கூறிய யாழ் ஆயர் பேரருள் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களுக்கும் யாழ் குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள். மேலும் வருகை தந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபருக்கும், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபருக்கும் இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி அதிபருக்கும், அருட்தந்தையர்களுக்கும், அருட் சகோதரிகளுக்கும், பாஷையூர் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவிகளுக்கும், புனித வளன் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், மண்டைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், ஏனைய பாடாசலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், மலர் வளையங்களால் அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், பாஷையூர் பங்கின் மரியாயின் சேனை, மாதா கூட்டம், புனித வின்சன்டிபோல் சபைகள் அங்கத்தவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் வருகை தந்த அன்பர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய வெளிநாட்டு, உள்நாட்டு அன்பு உள்ளங்களுக் கும், செபமாலை ஓதி வழிபாடு நடத்திய உறவினர்களுக்கும் ஏனையோருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள்.

14 ஆம் திகதியன்று மாலை 3.30 மணிக்குப் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்த அருட்திரு P.P. பிலிப் O.M.I அவர்களுக்கும், அதில் பங்கு பற்றிய குருக்கள், கன்னியர், இறைமக்கள், பொதுமக்கள் ஆகியோருக்கும், நல்லடக்க ஊர்வலத்தில் பங்கேற்ற ஊர் மக்களுக்கும் ஏனையோருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

மேலும் இந் நிகழ்ச்சிகளிலும் ஏனைய அனைத்து செயல்களிலும் ஆர்வமுடன் செயலாற்றிய எற்றியன் நோயல் பிறின்ஸ் அவர்களுக்கும் அவரது நண்பர்களுக்கும், ஏனைய ஊர் மக்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள். அத்துடன் இந்நிகழ்வுகளிலும், இதன் பின்னரும் வருகை தந்து எமக்கு ஆறுதல் கூறிவரும் அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இல.847, கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
கணவர், மக்கள், மருமக்கள்,
மைத்துனர்கள் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**af பிரெஞ்சு மொழி**



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

இன்று ஆரம்பம். 2.10.15வரை பதிவுசெய்யலாம்...

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

குறிப்பு : யாழில் பல பொய்களை கூறி மோசடி செய்வோரிடம் ஏமாந்த பலர் எமது AF க்கு வந்துள்ளனர். நம்பிக்கை, கற்றல் கற்பித்தல் தரம், சர்வதேச அங்கீகாரம் உள்ள எமது நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள். வெளிநாடு ஒன்றில் இருக்கும்போது பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகிறோம். 021 222 8093


## பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடகம் மீண்டும் நாளை மேடையேறுகிறது

யாழ்ப்பாணம், செப். 26

பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாச்சார மண்டபத்தில் மேடையேறவுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய இந்த நாடகத்தை செயற்றிறன் அரங்க இயக்கம் தயாரித்துள்ளது. நல்லூர் நாடகத் திருவிழா 2015 இல் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டது. பலரது வேண்டுகோளுக்கமைய இந்த நாடகத்தை செயற்றிறன் அரங்க இயக்கம் சிறுவர்களின் நலன் கருதி இலவசமாக மேடையேற்றத் திட்டமிட்டுள்ளது. நாவலர் கலாசார மண்டபத்தில் 250 பார்வையாளர்களை மட்டுமே அனுமதிக்க முடியும் என்பதால், முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது பதிவுகளை செயற்றிறன் அரங்க இயக்கத்துடன் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.



சிறுவர்களின் உடல் உள விருத்திக்கு, அரங்கை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் செயற்றிட்டமாக செயற்றிறன் அரங்க இயக்கம் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நாடகங்களை மேடையேற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தே.தேவானந்தின் 'சிரிப்புமூடை' சிறுவர் நாடகம் மேடையேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)


**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் சமையல்காரர், மிக்சர், பவோடா தயாரிப்பாளர்கள், உதவியாளர்கள் இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0779464287, 0773666177

**அறைகள் வாடகைக்கு**

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு 600/=, 1200/=, 2500/=, A/C, TV : 4000/= (Attached Bathroom) காலி வீதிக்கு முகப்பாக இராமகிருஷ்ணா பெட்ரோல் ஷெட்டிற்கு அருகில்.
Hotel Villa - 0114999944, 0722552222

**விதை நெல் விற்பனைக்கு**

விவசாய பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு, சிபார்சு செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்ட B.G 406 ரக விதை நெல் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 659 2044

**வாகன சாரதி தேவை**

Heavy vehicle இற்குரிய சாரதி அனுமதிப் பத்திரமுள்ள பணியாளர் தேவை.

தொடர்பு : 077 895 4882




**விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்**
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

| | |
|---|---|
| Dip.in Information Technology | DiTEC |
| Diploma in Office Automation | DOA |
| Dip. in Pre-Press Desktop Publicating | DTP |
| Diploma in Pc Applications | DPCA |
| Adv. Dip. in Hardware & Networking | ADHN |
| Dip. in Video Production & Multimedia | DVPM |
| Dip.in Web Designing & Development | DWD |
| Dip. in Computerized Accounting | DCA |

AFTER A\L



DMI COMPUTER EDUCATION

Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்
26/9/2015 (Sat) - 9.30 am.
28/9/2015 (Mon) - 9.30 am

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவன (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

Awarding University
New College Lanarkshire
Scotland, UK.



# UK Certified Dental Nursing Courses in Jaffna

**Certificate Course** (One Year) | **Diploma Course** (Two Years)





| | |
|---|---|
| Qualifications | : Three Passes in GCE (A/L) Examinations in Science subjects (Six Passes in GCE (O/L) Examination with Three Credit Passes in Science, Maths & Tamil will be considered with additional training) |
| Eligibility | : Females under 25 Years |
| Applications | : Bio data with photograph should be sent to the Director on or before 10th October 2015 by Reg.post or E-Mail |
| Course Fee | : Inquiry by e-mail : info@smiledentals.com |
| Course Commencement | January 2016 |
| Interview on | : 18th October 2015 in Jaffna |

*Opportunities*
- Foreign Employments
- Students Visa to study in UK
- Local Employments with attractive salary - Day / Evening shifts

**Smile Dental Care (Pvt) Ltd**
Dental Education Centre
711, Peradeniya Road, Kandy.
Tel: 081 2232118


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 26.09.2015






ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

யாழ். வல்லையில் அதி நவீன வசதிகளுடன்

Yarl Beach Hotel






- குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய திருமண மண்டபம்.
- குளிரூட்டப்பட்ட உயர்தர படுக்கை அறைகள்.
- சிறந்த வாகன தரிப்பிடம்.
- சைவ, அசைவ உணவுகள்.
- உங்கள் விருப்பத்திற்கேற்ப வாகன ஒழுங்குகள்.

09 அறைகள், வரவேற்பு அறை, சமையல் அறை போன்றன நாள் வாடகைக்கு வழங்கப்படும்.

உங்கள் விழாக்கள் எதுவாயினும் சிறந்த முறையில் நடத்துவதற்கு நாடவேண்டிய ஒரே இடம் ....

யாழ். வீதி, கரணவாய் வடக்கு, கரவெட்டி,

தொ.பே: 021 226 1567 Email: yarlbeachhotel@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வரலாறு

எங்கும் நிறைந்த இறைவனை சிறப்பாக ஓர் இடத்தில் இருத்தி சிந்தையைப் புனிதமாக்கி சீரோடு வாழ்வதற்கு எழுந்தவையே ஆலயங்கள்.

ஈழமணித் திருநாட்டின் சிரம் என விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே வடபால் அமைந்த பதி வடமராட்சி. இப்பதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பூத்த பழமையும்சிறப்பும் பெற்ற ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இவ் ஆலயமானது துன்னாலை, புலோலி வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள வல்லிபுரத்தில் அமைந்துள்ளது.

ஆர்ப்பரிக்கும் கடல், வெள்ளை மணற்பரப்பு, பசுமை கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் இடத்தில் மிளிர்வது சிறப்புக்குரிய தாகும். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற ஒன்றாக மிளிர்வது சிறப்புக்குரிய அம்சமாகும்.

வல்லிபுரம் என்ற பெயருக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத் தில் கி.பி.303 இல் நாகர்களுடைய ஆட்சியும் கி.பி.556 இல் லம்பகர்ணர் ஆட்சியும் நிறைவுக்கு வந்தாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்பகுதி களில் குடியேறிய படைவீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சிய டையத் தொடங்கியபோது வடமறவர் ஆட்சி செய்த இடமாக வடமராட்சி விளங்கியது. திரு.ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை கருத்துப்படி தொண்டை நாட்டில் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும், அவர்கள் குடியேறிய பிரதேசத்துக்கு வடமராட்சி எனப் பெயரிட்டதாகவும் தெரியவருகின்றது. இக்குழுவின் தலைவனாக வல்லிய தேவன் என்பவன் இருந்ததாகவும், எனவே அவன் பெயரைக் குறிக்கும் முகமாக இக் கிராமத்துக்கு வல்லிபுரம் என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு கடவுள் பக்தியும்,செல்வப் பெருக்கும் நிரம்பப் பெற்ற குடும்பத்தில் இலவல்லி பிறந்தாள் அவள் திருமணமாகி குழந்தைப் பேறின்றித் திருமாலை வழிபட்டு வந்தாள். இக் காலத்தில் விஷ்ணு வங்கக்கடலில் மீனவர்க்கு பெரும் தொல்லை கொடுத்து வந்தார். இவ்வேளை இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளத்தை அடைந்து கடலில் விளையாடினாள். பின்னர் படகில் ஏறி சிறிது தூரம் சென்றாள். அவ்வேளை மீன் ஒன்று அவள் மடியில் பாய்ந்தது. அம்மீன் மடியில் அழகிய குழந்தையாகி சங்கு, சக்கரம் முதலியவற்றைக் கொண்டதாகவும் காட்சி அளித்தது. இல வல்லியையும் தன் பூர்வீக பலனை எய்தியமை எண்ணி மகிழ்வடைந்தாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை அவளுக்கு அளித்துவிட்டு மறைந்தது.

இலவல்லி மச்சமாய், மாகவுமாய் காட்சியளித்த மாயவனால் அருளப்பட்ட சக்கரத்தை வல்லிபுரத்துக்குக் கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தாள். இலவல்லியின் ஆழ்ந்த பக்தியின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆலயம் ஆதலால் வல்லிபுர ஆழ்வார் எனப் பெயர் பெற்று சிறப்புப் பெற்றது எனலாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசை நடைபெறுகின்றது. சூரிய வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரம் இடம்பெறுகின்றது. அதே நேரம் வைஷ்ண வர்களால் திருமாலின் சக்கரம் ஆயுதமாகப் பூசிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பம் சமாகும்.

ஆஞ்சநேயர் வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றதைக் காணமுடிகின்றது. சமுத்திர தீர்த்தத்தின் போது சக்கரத்துடன் ஆஞ்சநேயரும் எடுத்துச் செல்லப்படுவார்.புராதன மக்களுடைய நாகதம்பிரான் வழிபாட்டினையும் இங்கு காணலாம். இவ் ஆலயத்தில் நாக தோஷம் நீங்க நாகதம்பிரானுக்கு பல நேர்த்திக் கடன்களை அடியவர்கள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நினைத்த காரியங்கள் நிறைவேறவும், திருமணப் பாக்கியம், குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பல நேர்த்திக் கடன்களை ஆற்றி வேண்டியதை வேண்டியவர் களுக்கு அருளும் காத்தற் கடவுள் விஷ்ணு பகவானும் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.

வல்லிபுர ஆழ்வார் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்
Raajan Hardware Stores

Hardware Merchants, Building Materials, Tokyo Cement, Nippon Cements, Rhino Roofing Products, PVC Pipes & Paints Items.
No:411, Main Street, Pointpedro.
தொ.பே : 021 226 4327

அனைவருக்கும் வல்லிபுர ஆழ்வார் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்
நந்தினி பழக்கடை

சகல விதமான உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள் மற்றும் வெளிநாடுக்கு அனுப்பக்கூடிய பருத்தித்துறை தட்டை வடை மற்றும் பலகார வகைகள், சுத்தமான பனாங்கட்டி, எள்ளுப்பாகு, கேக், பிஸ்கற் வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
நந்தினி பழக்கடை
நவீன சந்தை, (பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை)
T.P: 077 273 7514


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வல்லிபுர ஆழ்வார் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்
நெல்லியடி சரவணா ரெக்ஸ்

பண்டிகைக் காலங்களுக்கேற்ற ஆடை வகைகளினதும் பாரம்பரியத்தின் கைராசியான திருமணப் பட்டுப் புடைவைகளினதும் சாம்ராச்சியம்
171, பிரதான வீதி, நெல்லியடி.
(சம்பத் வங்கி அருகில்) கரவெட்டி
021 226 2992

நியூ ஸ்ரார் தளபாட நிலையம்
வல்லிபுர ஆழ்வார் தேர் சிறப்பிதழ்
தீபாவளியை முன்னிட்டு.........
இன்று முதல்....
அனைத்து தளபாடங்களுக்கும்
5% முதல் 15% வரையான விலைக்கழிவு

New Star Furniture
171 Jaffna Road ,Nelliyadi
Tp: 021 561 8081
077 917 4358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 26.09.2015 III

**மகோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்.**



வருடா வருடம் மகோற்சவம் நடைபெறுகின்றது. அதனால் மக்களும் மாயவனின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். தேர்த்திருவிழா என்றதுமே பக்தர்கள் நாலாதிசையிலும் இருந்து முந்தியடித்துக் கொண்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் வேண்டி ஓடி வருகின்றனர். மாயவனும் தேரேறி வீதியுலா வந்து பக்தர்கள் கேட்டவரம் அருள்கின்றான்.

வல்லிபுரமாயவன் தேரிலே வீதியுலா வரும் கண்கொள்ளாக் காட்சியை நேரில் கண்டுகளிக்க இயலாதவர்கள் எம்பெருமானை நினைவு கூர்ந்து அவனருளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை. எனவே இச் சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.மாயவன்வேண்டிய நேரத்தில் வேண்டிய அவதாரங்களை எடுத்து அடியவர்களை அண்மித்துச் சென்று அவர்களைக் காப்பாற்றி அருள் பாலிப்பவர். மஹோற்சவம் இனிதே நிறைவுறவும் பக்தர்கள் பயன் பெறவும் எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

இ.அன்னலிங்கம்.J.P
முகாமை அறங்காவலர், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.

**பிரதம குருமார்களின் நல்லாசிகள், நல்வாழ்த்துக்கள்**



இன்றையதினம் எல்லாம் வல்ல மாயவன் தாழ்பணிந்து பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் மிகப் புனிதம் வாய்ந்ததான இரதோற்சவ தினமாகும். கடந்த புரட்டாதி. 07ஆம் நாள் கொடியேற்றதுடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இனிதே நடைபெற்று, இன்று சங்காரத் தொழிலைக் குறிக்கின்றதான தேர்த்திருவிழாவாகும். அடியவர்களின் பழுதுயர்களைந்து ஆன்ம ஈடேற்றத்துக்காக பாவங்களை, ஆணவம்,கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அழித்து மக்களைக் காக்கும் இறைவனின் தொழிலாகும். எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுரச் சக்கரரூப மாயவன் திருத்தேரிலேறிவந்து அடியார்படுதுயர் களையும் இந்நாளில் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக சமாதானமாக வாழ ஸ்ரீ வல்லிபுர மாயவனைப் பிரார்த்தித்து தமிழ் மக்கள் விரும்பியதைப் பெற்று நல்வாழ்வு பெற அவனை வேண்டி மாயவனின் நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் பெரும் உவகையுடன் கூறிக் கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு.(J.P), பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு.(J.P),
பிரம்மஸ்ரீ சுதர்சன கணாதீஸ்வரக்குரு.
பிரதான குருமார்கள், ஸ்ரீ ஆழ்வார் பீடம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்,துன்னாலை, புலோலி.

மதுசி போன் சொப்
MATHUSHI PHONE SHOP
* Unlocking
* Spare Parts
* All Kind Of Cellular Phone Sales
* Software & Hardware Solutions
* Lap Accessories & Lap Repair
Junction
VELVETTITHURAI
T.P - 021 226 4448

மாயவன் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்
SEA BLUE
RESTAURANT
Rooms Available
Ac / Non Ac
Jaffna
Tel: 021 222 2626 021 490 0624 077 222 9354
No: 890, Hospital Road, Chundukkuli.

வாடிக்கையாளர் அனைவருக்கும் மாயவன் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்
சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில் குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்.
தீபன்
உரிமையாளர் சி.தீபானந்
பதிப்பகம்
தொ.இல
077 652 0315
நீதிமன்ற வீதி, பருத்தித்துறை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
theepanoffsetprinters@gmail.com

சகல அழகுக் கலைச் சேவைகளும் ஒரே இடத்தில்..
இயற்கையான..
அமைதியான..
ரம்மியமான சூழலில்..
மணப்பெண் ஒப்பனைக்கு கற்பனைத்திறன் கொண்ட பெண் கலைஞர்களின் சேவை
தூரிகை பியூட்டி பார்லர்
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி

அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வல்லிபுர ஆழ்வார் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.
ஸ்ரீ சுசிலா
ஆபரண மாளிகை
Sri Susila
Gold House
(916 KDM) தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
239, Main Street, Point Pedro
T.P: 077 721 0206, 021 226 1003, 021 320 7437

EAGLE PAINT SHOP
NELLIADY
வல்லிபுர ஆழ்வார் நல்லாசி அனைவருக்கும் கிட்டட்டும்
உங்கள் வாகனங்கள், இல்லங்கள் மற்றும் அலுவலகங்களை அழகுபடுத்த
★ ஸ்பிறே பெயின்ற் வகைகள் (Debeer, Sunny, Metalic)
★ கட்டட பெயின்ற் வகைகள் (Colour box, GLO, Shield Kenlux)
நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
077 149 2439

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்

**கீரன் பான்சி**

இல.1-5-6 நவீன சந்தை, வல்வெட்டித்துறை
தொ.பே :077 344 1590

சகல விதமான கட்டட உபகரணங்களுக்கும் பெயின்ற் வகைகளுக்கும், மின்சார உபகரணங்களுக்கும் நாடவேண்டிய இடம்.

**IEYNGARA KALANCHIYAM**

Main Street, Point Pedro
077 190 7478

தேர் ஏறிவரும் மாயவன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

**மனோகரன் ஹாட்வெயார்**

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், PVC பைப், மாபிள் வகைகள், என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.
தொ.பே : 021 226 4192

**BABI BEAUTY PARLAUR**
(பபி பியூட்டி பார்லர்)

பேஷியல்கள், ஐபுரோ, முடிகருள் பண்ணுதல், முடி அயன் செய்தல், மற்றும் திருமண, பிறந்த நாள் ஐசிங்கேக் சேவைகளும் வழங்கப்படுகின்றன மணப்பெண் ஒப்பனைகள் (காலத்திற்கேற்ப நவீன முறையில் மேற்கொள்ளப்படும்)

BABI BEAUTY PARLAUR
1st mail post : Pointpedro. T.P - 077 850 5065

வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

சகலவிதமான மருந்து வகைகளும் பால்மா வகைகளும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

**MANTHIKAI PHARMACY**

Puloly. Tel: 021 226 3283

வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்

**Green Leaf Cream House**

N.M.M.V.Road, Nelliady, Karaveday.
T.P: 077 377 3197

தமிழ், சிங்கள, ஆங்கில நாளேடுகளையும் சஞ்சிகைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் மற்றும் வெஸ்ரேன் யூனியன் பணபரிமாற்றம் இடம் பெறும்

**KAVITHA TRADERS**

PAPERR AGENT

MAIN STREET, POINT PEDRO. T.P: 021 373 5681

வல்லிபுர ஆழ்வார் தேர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

அதி நவீன டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

**ஜனனி நகை மாடம்**

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க வரை நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.
Tel: 077 7245054

கிளை: **கிசோனி நகை மாளிகை**

தங்க நகைவியாபாரம்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

T.P: 077 364 3286

**PRIYANKA**

Digital Colour Lab & Studio

Pointpedro Road, Nelliyady. 0094 21 226 2737

X-Treme Prints

15 நிமிடங்களில்
NIC, Passport, Postal, Licence, Visa, Studio Sitting படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
Digital Photo Printing (6x4 - 12x36)
Album Designing, Album Making.
Photo Frames Making (Chrystal, Duro, Glass)
Chrystal Frame Making.
Cool, Hot, UV, 3D Lemination.
Indoor & Outdoor Photography.

**EASY SOLUTIONS**

www.easysolutions.lk

கணணி விற்பனை திருத்தம்
லப்டொப் விற்பனை திருத்தம்
இணைய தள வடிவமைப்பு
இணைய விளம்பரம்
டொமைன் சேவர் இடவசதி
மென்பொருள் வடிவமைப்பு
நெற்வேர்க்கிங்
அன்ரிவைரஸ் தீர்வுகள்

MMV Road, Nelliady
TP : 021 226 1120 , 0774386599 www.facebook.com/Easysolutions.lk

எம்மிடம் கணணிகளை கொள்வனவு செய்து கணணி பராமரிப்பு சேவையினை எப்பொழுதும் இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.

இணையதள வடிவமைப்பு, இணையதளப்பதிவு, சேவர் வசதிகள் வழங்குதல் மென்பொருள் வடிவமைப்பு, அனைத்திலும் தற்போது நாம்....

**GIFT corner**

தேரேறிவரும் வல்லிபுர ஆழ்வார் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

சகல விதமான பரிசுப்பொருட்களின் சாம்ராட்ஷியம்.

M.M.V.Road Nelliady T.P.No.021-2261515

**Mr.Concrete**

ISO 9001 : 2008

Kodikamam road, Puloly.

Tel : 0217 222 333 , 021 226 2777
Hotline : 0776126089
web - www.mrconcrete.lk
e-mail: mrconcretelk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40,000

பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா ஐக்கிய நாடுகள் சபையில் மிக முக்கியமான நாடு என்பதோடு, சர்வதேச ரீதியில் செல்வாக்கு மிகுந்த நாடாகவும் திகழ்கின்றது. இந்த நிலையில், இலங்கையில் பொது மக்களுக்கு எதிராக அநியாயங்கள் நடந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அதனைத் தடுத்திருக்கவேண்டும். அது இந்தியாவின் கடமையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாட்டின் இறையாண்மை என்பதும் அதுவே எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஒவ்வொரு நாடும் தமது குடிமக்களைக் காப்பாற்றவேண்டுமென்பதோடு, அதனைச் செய்ய குறித்த நாடு ஒன்று தவறும் பட்சத்தில் நட்பு நாடுகள் தலையிட்டு பொதுமக்களைக் காப்பாற்றவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மிகத் தெளிவான சர்வதேசச் சட்டங்கள் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இந்தியா இந்த விடயத்தில் தவறிழைத்துள்ளதாகவே தான் கருதுவதாகவும் கூறியுள்ளார்.

இந்தியா தலையிட்டுச் சமரசத்தை ஏற்படுத்தியிருந்தால், 40 ஆயிரம் பொதுமக்களின் உயிரிழப்பைத் தடுத்திருக்கலாம் எனவும், தென்னாபிரிக்கா போன்று அது உள்நாட்டுப் பிரச்சினை என இந்தியா தெரிவித்திருப்பதைத் தன்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

40 ஆயிரம் அப்பாவிப் பொது மக்கள் கொலைசெய்யப்பட்டது உள்நாட்டுப் பிரச்சினை அல்ல எனவும், அது சர்வதேச விவகாரம் எனவும் அவர் இந்தச் செவ்வியின் போதுமேலும்தெரிவித்துள்ளார். (த–சி)

## சிறுவர்

ஒருவர் குறிப்பிட்டார்.

இளவயதுத் திருமணம் மற்றும் இளவயதுக் கர்ப்பம் என்பன, 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 249 ஆக இருந்து 2011 ஆம் ஆண்டு 408 ஆக அதிகரித்துள்ளது. பின்னர் 2013 ஆம் ஆண்டு 104 ஆகக் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டு 83 ஆகக் குறைவடைந்துள்ளது. இந்த வருடத்தின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் 29 சம்பவங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன.

இதேவேளை, சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், 2010 ஆம் ஆண்டு 163 ஆகவும், 2011 ஆம் ஆண்டு 146 ஆகவும் இருந்து 2013 ஆம் ஆண்டு 71 ஆகக் குறைந்துள்ளது. இதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு 69 ஆகக் குறைந்து, இந்த ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் 27 சம்பவங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகங்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இறுக்கமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட இருப்பதாகவும் அரச அதிபர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.

(த–5)

## அமெரிக்கத் தீர்மானம்

சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் சபை யில் நேற்றுமுன்தினம் சமர்ப் பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணையில் இதற்கு முன்னர் கூறப்பட்ட, சர்வதேச பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றம் என்ற பதமும் முற் றாக நீக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசு, தற்போது ஆட்சியில் இருந்திருந்தால் ஜெனிவா விவகாரம் மிகவும் பாரதூரமாக அமைந்திருக்கும். புதிய அரசின் ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளுக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றியாக இதனைக் கருதுகின்றோம்.

கடந்த மார்ச் மாதத்தில் இந்த விசாரணை அறிக்கையை வெளியிட ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தீர்மானித்திருந்தார். எனினும் புதிய அரசின் முயற்சியில் இந்த மாதம் வரை, அதனைக் காலம் தாழ்த்துவதற்கு முடிந்தது.

இதுபுதியஅரசுக்குக்கிடைத்த முதலாவது வெற்றி.

அதேபோன்று சர்வதேச விசாரணையை தவிர்த்து உள்ளக விசாரணையை இலங்கைஅரசுவலியுறுத்தி வந்த நிலையில் அமெரிக்காவின் தீர்மானமும் உள்ளகப் பொறிமுறை மீது நம்பிக்கை கொண்டதாகக் காணப்படுகின்றது. எனவே இது மைத்திரி அரசுக்குக் கிடைத்த இரண் டாவது வெற்றி.

அமெரிக்காவின் தீர்மானம் தற்போது சமர்ப்பிக்கப் பட்டுள்ள விடயம் ஒருபுறமிருக்க, அதற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கையின் பிரதிநிதிகள் ஜெனிவா மாநாட்டில் பேசுவார்கள். எதிர்வரும் 30ஆம் திகதி மனித உரிமைகள் சபைக்கு தீர்மானத்திற்கு வரும். அதன் பின்னரே அரசு தீர்மானம் குறித்து ஆலோசிக்கும்–என்றார். (த–வ)

## கலப்பு நீதிமன்றின்

பிக் கப்பட்டது போன்று கலப்பு நீதி மன்றத்தின் மூலமே அது சாத்தியமாகும். இவ்வாறு வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், தற்போது அமெரிக் கா வின் யோசனைக்கு அமையக் கலப்பு நீதிமன்றத்துக்குப் பதிலாகச் சர்வதேச ஒத்து ழைப்புடன் கூடிய உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தியுள்ளனர்.

உள்ளக விசாரணை எவ்வளவு இதயசுத்தியுடன் நடைபெறும் என்பது. இலங்கை யில் தமிழ் மக்களின் விவகாரங்களில் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் சான்று பகரும். இது ஒரு கண்துடைப்பு நாடகமாக அமையுமே தவிர தமிழ் மக்களுக்கு நியாயத்தையும் பெற்றுக் கொடுக்காது.

நடக்கப் போகின்ற விசாரணை ஒரு குற்றவியல் விசாரணையாகும். இதில் வழக்குத் தொடுநரிலிருந்து விசாரிப்பவர்கள் வரை இதயசுத்தியுடன் நடப்பார்களா என்பதை எமது கடந்த கால வரலாற்றிலிருந்து எம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆதலால் தமிழ்த் தலைமைகள் சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுப்பவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இல்லையேல் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பது கேள்விக் குறியாகவே காணப்படும் – என்று சுட்டிக்காட்டியுள்ளார். (த–5)

## அமெ. தீர்மானத்தை

சட்டமீறல்கள், குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டவாளர்களை உள்ளடக்கிய நம்பகமான நீதிச் செயற்பாட்டை முன்னெடுக்குமாறு வலியுறுத் தப்பட்டுள்ளது, வரவேற்கத்தது.

இந்த நீதிமன்றச் செயற்பாட்டை முன் னெடுப்பதற்கு இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்தினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முழுமையான பங்களிப்பை வழங்கவுள்ளது. அதேவேளை, இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு தனது ஒத்துழைப்புக்களை வழங்கி முழு அளவிலான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

மேலும், இந்த தீர்மான வரைவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக நீதிமன்றம் உருவாக் கப்பட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுவதன் மூலம், கடந்த காலத்தில் காணப்படும் நிலைமைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான ஒரு வியத்தகு மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது. இந்த வரைவானது பல்வேறு கடினமான நிலைமைகளில் கருத்தொற்றுமை மிக்கதாகவுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலும், பாதிக்கப்பட்ட தரப்புக்கான பொறுப்புக்கூறும் தரப்பி னர் என்ற அடிப்படையிலும் பாதிக்கப் பட்ட தரப்பினர் திருப்தி கொள்ளும் வகையில் சொற்றொடர்கள் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந் தோம். ஆகவே இந்த வரைவில் கூறப் பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்திற்கான நீண்ட பயணத்தின் ஆரம்பமாக அமையும்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்காகக் குரல் கொடுத்து அவர்களின் நம்பிக்கைகளை வெற்றிபெறச் செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்புக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் – என்றுள்ளது.

(த–5)

## குடும்பஸ்தர் ஒருவர் ரி.ஐ.டியால் கைது

யாழ்ப்பாணம், செப்.26

கொடிகாமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை அவர் அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். வன்னியிலிருந்து பின்னர் முகாமில் தங்க வைக்கப்பட்டு அதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த மார்க்கண்டு நேமிநாதன் (வயது– 41) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். அவருக்கு 4 பிள்ளைகளும் உள்ளனர். விவசாயம் செய்து வரும் அவரை கொடிகாமத்துக்கு வந்து சந்திக்குமாறு அவருக்குக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் அங்கு சென்ற போதே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4–9)

### மரண அறிவித்தல்

**திருமதி மஞ்சுளா சிவராசா**

மலர்வு 19 . 12 . 1965



உதிர்வு 25 . 09 . 2015

மஞ்சகம், மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மஞ்சுளா சிவராசா 25.09.2015 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகளும் செல்லையா சிவராஜா(யாழ்போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும் அபர்ணா (பொறியியலாளர்SEC), அபர்ணன்(Dialog - Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும் துவாரகேதன்(பொறியியலாளர்-Virtusa ) அவர்களின் அன்பு மாமியாரும், புனிதராசா மைதிலி அவர்களின் அன்புச்சகோதரியும், கோபி (வீரசிங்கம் மத்திய கல்லூரி) அவர்க ளின் பெரியதாயாரும் காலஞ்சென்ற செல்லையா, வள்ளியம்மை ஆகியோரின் மருமகளும், வர்ணிகாவின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

மஞ்சகம்,
மீசாலை கிழக்கு,மீசாலை. 077 679 8732, 077 087 4403

### மரண அறிவித்தல்

**திருமதி அமிர்தநாயகி (செல்வராணி) அந்தோனிப்பிள்ளை**



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தநாயகி அந்தோனிப்பிள்ளை (செல்வ ராணி) நேற்று (25.09.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வரப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளையின் (ராசு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிமியோன் ஞானப்பிரகாசம் பார் பரம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் பொன்னுத்துரை மேரியோசேப்பின் தம்பதியரின் அன்பு மருமகளும், றிபினெக் (கனடா) அன்ரன் டோமினிக் (இலங்கை) ஆஷா (சுவிஸ்) மேரிசுலேக்கா (லண்டன்) மேரி நிர்மலா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயும், பவா (கனடா) காஞ் சனா (இலங்கை) உதயகுணசீலன் (சுவிஸ்) காலஞ்சென்ற டன்ஸ்ரன் (லண்டன்) ஜீவசந்திரன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும், அபி நாஸ் (கனடா), சுஜீவன் (சுவிஸ்), சுயந்தன் (சுவிஸ்), மதுஷன் (லண் டன்) றுஷானா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மகேஸ் வரி (இளைப்பாறிய ஆசிரியை) திரேசாதங்கராணி (நியூசிலாந்து) பேபி சறோசா (இலங்கை) அருமைநாயகம் (லண்டன்) லீலிமலர் (இலங்கை) காலஞ்சென்ற ஞானசோதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அந்தோனிப் பிள்ளை (சின்னன்) காலஞ்சென்ற போல் அமிர்தம்மா (இலங்கை) ஆகி யோரின் மைத்துனியும், M.பேரின்பநாயகத்தின் (இளைப்பாறிய சப் இன்ஸ்பெக்டர் -கனடா) மருமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை,
021 300 7016

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

### மரண அறிவித்தல்

**சூசைப்பிள்ளை அன்ரன் குணசீலன்**



192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை அன்ரன் குணசீலன் நேற்று (25.09.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சூசைப்பிள்ளை காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மேரி கிறேஸ், வில்லியம் ஜோஜ், அன்ரன் றொபேட் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவதாஸ் (சுதன்), சறோ, பியங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும், துமிலன், விதுஷா ஆகியோரின் அன்பு மாமனும், திலானி, திலக்சன், றூபிறோஸ், றோஸாமெய் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.09.2015) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
சி. சூசைப்பிள்ளை (தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்குதலில்

கொண்டு முறையிடப்பட்டது. அந்தக் குழு அடாவடியில் ஈடுபட்டுச் சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னரே மோசமாகத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தாக்குதலாளிகள் அங்கிருந்து சென்ற பின்னர் அரை மணி நேரம் கழித்தே பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர் என்று கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் பொலிஸார் மீது குற்றம்சாட்டியுள்ளனர். பொலிஸார் விரைந்து செயற்பட்டிருந்தால் தாக்குதலை நிறுத்தி உயிரிழப்பைத் தடுத்திருக்கலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

யாழ். பஸ் நிலையத்தின் பின்புறமாக மின்சார நிலைய வீதியில் கடந்த சனிக்கிழமை இரவு 10.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கண்டியைச் சேர்ந்தவரும், சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் உள்ள வீட்டில் வசிப்பவருமான எஸ்.மாதவமணிவண்ணன் (வயது -46) என்பவரே உயிரிழந்தார். அதில் அவரது மனைவியான யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்கும் தர்சினி (வயது-41), மனைவியின் சகோதரனான யாழ்.போதனா வைத்தியசாலையில் ஊழியராகப் பணிபுரியும் சி.சுசீந்தராஜ் ஆகியோரும் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த ஆசிரியர் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளுக்கெனத் தனியார் கல்வி நிலையத்தை நடத்தி வருகிறார். சம்பவம் நடப்பதற்கு முன்னைய சனிக்கிழமை அவருக்குத் திருமணம் நடந்துள்ளது. கடந்த சனிக்கிழமை அவரும் மனைவியும் நெல்லியடிக்குச் சென்று திரும்பி வந்து மின்சார நிலைய வீதியில் உள்ள தமது வீட்டுக்குச் செல்ல முன்னர் பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் தண்ணீர்ப் போத்தல் வாங்கியுள்ளனர். அப்பொழுது இரவு 10.20 மணி இருக்கும்.

அவ்வாறு வாங்கிக் கொண்டு திரும்பியபோதே அந்த இடத்தில் நின்றிருந்த சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் அவர்களைத் தடுத்து வைத்துள்ளனர். அவர்களுடன் ஆபாசமான வார்த்தைகளையும் பிரயோகித்த அந்தக் குழுவினர் அடாவடியில் ஈடுபட்டுள்ளனர்.

உடனே யாழ்.பொலிஸாருக்கும் 119 என்ற இலக்கத்துக்கும் அறிவித்ததாகக் கூறும் பாதிக்கப்பட்டவர்கள், சுமார் ஒன்றரை மணித்தியாலமாகப் பொலிஸார் அங்கு வரவில்லை என்றும் குற்றம் சுமத்தியுள்ளனர். அதனால் மனைவி தனது சகோதரனுக்குத் தொலைபேசியில் சம்பவத்தைக் கூறியுள்ளார். சகோதரன் அங்கு சென்ற போது நிலைமை மோசமாகித் தாக்குதல் நடத்தப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

அந்தக் கும்பலிடமிருந்து மனைவியை மீட்கும்போது கணவர் மீது அவர்கள் கம்பியினால் தலையிலும் கையிலும் மோசமாகத் தாக்கியுள்ளனர். இதனால் ஒரு கட்டத்தில் அவர் அந்த இடத்திலேயே விழுந்துவிட்டார். அதன் பின்னரே அந்தக்குழு அங்கிருந்து சென்றுள்ளது. அதன் பின்னரே விழுந்து கிடந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அந்தச் சம்பவம் நடைபெற்று சுமார் ஒன்றரை மணித்தியாலங்களின் முடிந்த பின்னரே பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

அவரது ஒரு கையில் மட்டும் பல இடங்களில் எலும்புகள் நொறுங்கியுள்ளன என்றும், தலையில் மண்டையோட்டில் பல உடைவுகள் காணப்பட்டுள்ளன என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பயனளிக்காது 7 ஆம் நாளான நேற்று அதிகாலை 12.45 மணிக்கு உயிரிழந்தார்.

தாக்குதல் சம்பவத்தையடுத்து 3 ஆம் நாள் யாழ்.அரசடியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். நேற்று குறித்த ஆசிரியர் உயிரிழந்த நிலையில் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## அமெ.

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக, பொதுநலவாய மற்றும் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கி விசேட வழக்கறிஞர்கள் அலுவலகம் ஒன்று அமைக்கப்படும் எனவும், அதனூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றிமுன்தினமிரவு நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே பிரதமர் ரணில் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை கடந்த 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அதில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்குக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை உருவாக்கவேண்டும் என்று பரிந்துரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவினால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை ஒட்டியதாக இலங்கை தொடர்பிலான தீர்மான வரைவு, கடந்த 18 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த வரைவை இலங்கை அரசு நிராகரித்திருந்தது. அதன் பின்னர் குறித்த தீர்மான வரைவு தொடர்பாக மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இரண்டு முறைசாராக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தது.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட தீர்மான வரைவு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த வரைவில், கலப்பு நீதிமன்றம் தொடர்பிலான பரிந்துரை நீக்கப்பட்டு, உள்நாட்டு விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த தீர்மான வரைவை இலங்கை அரசு ஏற்றுக் கொள்வதாகவும், அந்தத் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்குவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்துப் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்களின் ஆதரவுடன் உள்நாட்டு நீதிப் பொறிமுறையின் கீழ் விசாரணையை நடத்துவது தொடர்பாக ஐநா மனித உரிமைகள் சபையின் முக்கியமான நாடுகளுடன் புரிந்துணர்வுக்கு இலங்கை வந்திருக்கிறது.

இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கப்படும். நாம் நீண்டகாலத்துக்கு அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாது. நாம் கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக அழுத்தங்களை எதிர் கொண்டு வருகிறோம். பிரதான மீறல்கள் குறித்து, இலங்கையின் நீதிப் பொறிமுறையின் கீழ், நாட்டின் சொந்தச் சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய, விசேட வழக்கறிஞர்களைக் கொண்ட அலுவலகம் ஒன்று அமைக்கப்படும். அதனூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

இந்த விசேட வழக்கறிஞர்கள் அலுவலகத்தில் பொதுநலவாய நாடுகள் மற்றும் சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கத்திலுள்ள வழக்கறிஞர்களின் ஒத்துழைப்புகள் பெறப்படும். அதற்கான அனைத்துச் சட்டங்களும் இலங்கையில் நிறைவேற்றப்படும்.

அனைத்து நடவடிக்கைகளும் இலங்கை அரசமைப்புக்கு அமைய முன்னெடுக்கப்படும். அரசியல் தீர்வுக்குச் செல்லவும் அதற்குத் தேவையான அரசமைப்பு மாற்றங்களைக் கொண்டு வரவும் இணங்கியுள்ளோம்- என்றார். (த-வ-5)

## நம்பகரமான

பில் அமெரிக்க இராஜங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உண்மை, நீதி மற்றும் பரிகாரத்துக்கான முக்கியத்துவத்தின் பகிரப்பட்ட அங்கீகாரத்தின் மைல் கல்லைப் பிரதி நிதித்துவம் செய்யும், நல்லிணக்கத்தை முன்னிறுத்தல் மற்றும் அனைத்து இலங்கையர்களுக்கும் நீடித்த சமாதானம் மற்றும் அபிவிருத்தியை உறுதி செய்வதில், மீள நிகழாதிருப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் தீர்மானம் ஒன்றை அமெரிக்காவும் பங்காளர்களும் இலங்கையுடன் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்தோம்.

இணை அனுசரணையாளர்களாக இணைந்து கொள்ளும், இலங்கை அரசின் முடிவானது, தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான வழியை ஏற்படுத்துகிறது.

இலங்கையைச் சமாதானப் பாதையில் இட்டுச் செல்வதற்காக இந்த ஆண்டில் இலங்கையர்கள் இரு முறை வாக்களித்துள்ளதுடன், இலங்கையை நீண்ட காலம் வலுவிழக்கச் செய்து கொண்டிருந்த பிளவுபடுத்தல் அணுகுமுறையில் இருந்தும் நாட்டை மாற்றியுள்ளனர்.

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களினதும் சிவில் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கும் உற்சாகமிகு நடவடிக்கைகளை எடுத்து வரும் இலங்கைக்கான எமது ஆதரவை இந்தத் தீர்மானம் வெளிப்படுத்துவதுடன், மீள நிகழாதிருப்பதை உறுதி செய்வதற்கு கடந்த காலத்தின் வலிமிகு அனுபவங்களையும் அடையாளப்படுத்துகிறது.

இலங்கையர்களுக்கு உரித்தான மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு மற்றும் ஈடுபாட்டுடனான நம்பகமான இடைக்கால நீதிச் செயற்பாட்டின் ஊடான முக்கியமான படிநிலையை இந்த தீர்மானம் குறிக்கிறது. காணாமற்போனவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்கள் குறித்த பதில்களை அறிந்து கொள்வதற்கு இந்தத் தீர்மானம் உதவும்.

உண்மை, நீதி, பரிகாரத்தை வழங்குவதற்கான வழிகளை குறிப்பிடுவதுடன், கௌரவம் மற்றும் தொழிசார் நிபுணத்துவத்துடன் நடந்து கொண்ட, இராணுவத்தில் உள்ளவர்கள் உள்ளடங்கலாக, அனைவரினதும் நற்பெயரைப் பாதுகாக்கும் அதேவேளை, மீள நிகழாதிருப்பதற்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் கொழும்பில் வைத்து நான் உறுதியளித்ததைப் போல, இந்த முக்கியமான, ஆனால், சவால் நிறைந்த படிநிலைகளை முன்னெடுக்கும் இலங்கையுடன் இணைந்து செயலும் எமது உறுதிப்பாட்டில் அமெரிக்கா தொடர்ந்தும் திடமாக இருக்கும்-என்றுள்ளது. (த-வ-5)

## சமூகவிரோதிகளை

தோடு அவர்களது மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்குமாறும் நீதிபதி கூறினார்.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், குற்றவாளிகளையும் சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கும் விசேட அதிரடிப் படையினரை அமர்த்தித் தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளுமாறு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார். இதுபற்றிய தற்போதைய நிலைப்பாட்டை பொலிஸார் மேல் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினர். இதன்போதே இந்த விடயங்களை நீதிபதி கூறியுள்ளார்.

யாழ்.நகர், கொக்குவில் மற்றும். சுன்னாகம் பொலிஸ் பகுதிகளில் நடைபெற்ற வாள்வெட்டுக்கள், தெரு ரவுடித்தனங்கள் என்பன விசேட அதிரடிப்படையினரின் துணையுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனச் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கொக்குவிலில் நடைபெற்ற வாள்வெட்டு தனிப்பட்ட பகை காரணமாகவே இடம்பெற்றதாகவும், எதிரி அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்.நகரில் விசேட பொலிஸ் பாதுகாப்பு நடைமுறை தொடங்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அதன் பின்னரே மேற்கொண்டு செய்ய வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நீதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நீதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை மாணவர்கள் பகிரங்க இடங்களில் மது அருந்துவதாக முறைப்பாடுகள் வந்துள்ளன. அவ்வாறான மாணவர்களைச் சாராயப் போத்தல்களுடன் கையும் மெய்யுமாகக் கைது செய்யவேண்டும். மாணவர்கள் பாடசாலை நேரத்தில் சீருடையில் வீதிகளில் காணப்பட்டால் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். மாணவிகளின் பின்னால் மாணவர்கள் கூக்குரலிட்டுச் செல்வதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு செல்பவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் மாணவர்கள், இளைஞர்கள் சந்திகளிலும் மதகுகளிலும் கூடிநின்று கும்மாளம் அடிக்கும் செயல்களையும் கட்டுப்படுத்த வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களின் முன்னால் நின்று மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் மாணவிகளிடம் சேஷ்டை செய்யும் இளைஞர்களையும், அங்கு மாணவிகளுக்குப் பாதுகாப்பு என்று கூறிக் கோஷ்டியாக மோதல்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய வேண்டும்.

கூட்டமாகக் கூக்குரலிட்டு மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் பவனி வருவது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பாடசாலை மாணவ,மாணவிகள், யுவதிகள் பொதுமக்கள் அச்சமடைய நேரிட்டுள்ளது. வீதிகளில் கூட்டமாக மோட்டார் சைக்கிள்களில் வேகமாக ஓடுவதால் வாகனப் போக்குவரத்துக்கும் பொது மக்களின் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படுகின்றது. இவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்ய வேண்டும்.

வேலையில்லாமல் மோட்டார் சைக்கிள்களில் திரியும் இளைஞர்களிடம் ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு கைத்தொலைபேசி, கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி என்பனவே அவர்களின் சொத்தாக உள்ளன. இவைகள் வெளிநாடுகளில் இரவு பகல் பாராது உழைக்கும் உறவுகளின் வியர்வை சிந்திய சம்பாத்தியத்தில் பெறப்பட்டவை. இவர்கள் வீதிகளில் தங்களை ஹீரோவாக கற்பனை செய்து கொள்கின்றார்கள். தொழில் இல்லாததால் வீட்டில் இவர்களின் நிலைமை ஸீரோ. இவர்களைக் கைது செய்வதோடு, அவர்களின் மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தாலே யாழ்.நகரத்தின் 90 வீதமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று நீதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற பகுதிகளில் கடல்மண் களவாக ஏற்றிச் செல்வது அதிகரித்திருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டத்துக்கு முரணாக மாடுகள் வெட்டப்படுகின்றன. அவற்றின் எலும்புக் கூடுகள் காணப்படும் புகைப்படங்களை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சந்தேக நபர்களது பெயர் விவரங்களையும் நீதிபதி அவரிடம் வழங்கியுள்ளார். (த-4)

## திலீபனின்

இன்று தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் அனுஷ்டிக்கப் படுகின்றது.

1987 ஆம் ஆண்டு 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரில் திலீபன் என்று அழைக்கப்படும் இராசையா பார்த்தீபன் உண்ணா விரதப் போராட்டத்தைச் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்தார். 12 நாள்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்த அவர் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி சாவடைந்தார்.

திலீபனின் நினைவாக நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இப்போது இடித்தழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் அவர் உண்ணாவிரதமிருந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுக் கல் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளது. (த-5-21)

## வல்லிபுர ஆழ்வார்

பகுதியில் பருத்தித்துறை பொலிஸாரால் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்துக்குள் இடம்பெறும் திருட்டுக்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் கமராக்கள் பல பொருத்தப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போவாலும் வடமராட்சி சிற்றூர்தி சங்கத்தாலும் விசேட பஸ்சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தின் சூழலில் இருக்கும் அன்னதான மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருவதுடன் ஆலயச் சூழலில் ஆங்காங்கே தாகசாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (ந-108)

## 10 வயதுச்

பெற்றோரது வீட்டில் எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் சிறுவனின் தந்தை வீட்டில் இருந்துள்ளார் என்றும், சம்பவம் இடம்பெற்றவேளை தந்தை வீட்டில் இருக்கவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் அமெ. பயணம் வெற்றி தரும்

## சுதந்திரக் கட்சி நம்பிக்கை

கொழும்பு, செப். 26

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் பரிந்துரைசெய்யப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றப் பொறி முறைமையைத் தவிர்த்து உள்ளூர்ப் பொறிமுறையினூடாக விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் அமெரிக்கப் பிரேரணையில் திருத்தங்களை மேற்கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமெரிக்கப் பயணம் வழிவகுக்கும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி நம்பிக்கை வெளியிட்டது.

அதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளை நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தி இலங்கைக்குச் சாதகமான பெறுபேற்றைப் பெற்றுத்தருவார் என்றும்– அந்தக் கட்சி மேலும் நம்பிக்கை வெளியிட்டது.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சுதந்திரக் கட்சி மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, டிலான் பெரேரா, பைஸர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க,

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் விசாரணைக் குழுவின் விசாரணைகள் இலங்கையில் இடம்பெறவில்லை. இங்குள்ள எவரும் அதனிடம் சாட்சியமளிக்கவில்லை. விசாரணைக்கு உதவி செய்யவுமில்லை. எனவே, இந்த விசாரணை அறிக்கையானது ஒருபக்கச்சார்பானதாகும். இலங்கைக்கு எதிரான புலிகளுக்கு ஆதரவானவர்களே சாட்சியமளித்திருந்தனர் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இவ்வாறான பின்னணியில் கடந்த ஜனவரி 8ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் இலங்கை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச நாடுகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார். மார்ச்சில் சமர்ப்பிக்கப்படவிருந்த அறிக்கை செப்ரெம்பருக்குப் பிற்போடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா பிரேரணையொன்றையும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரவுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு சர்வதேச நாடுகளின் அரச தலைவர்க ளைச் சந்தித்து இடம்பெறும் பேச்சுகளில், மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கலப்பு நீதிமன்ற கட்டமைப்புக்குப் பதிலாக, உள்ளகப் பொறிமுறையூடாக எமது நீதிமன்றக் கட்டமைப்பின் கீழ் தீர்வுகாண முடியும் என்ற நிலைமையை ஏற்படுத்துவார் என நம்பிக்கை கொள்கின்றோம்.

இதனூடாக அறிக்கையை முழுமையாக நிராகரிக்காமலும், அதேவேளை ஏற்றுக்கொள்ளாமலும், பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சரின் ஆதரவைப் பெற்று நடவடிக்கை எடுப்போம்–என்றார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட அமைச்சர் டிலான் பெரேரா –

இங்கு எவரும் குற்றவாளிகள் அல்லர். குற்றவாளிகளாக எவரும் இனங்காணப்படவுமில்லை. எனவே, உள்ளகப் பொறிமுறையூடாக விசாரணை நடத்தினால்தான், குற்றவாளிகள் இருக்கின்றனரா? இல்லையா? என்று ஆராயமுடியும்.

ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவின் அமெரிக்க பயணத்தினூடாக எதிர்வரும் 7 நாள்களுக்குள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்–என்றார். (த–சி)

## தூக்குத் தண்டனை செய்தியால் கைதிகளுக்கு வயிற்றோட்டம்

கொழும்பு, செப்.26

தூக்குத் தண்டனை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியால் வெலிக்கடை செப்பல் வார்டில்' தடுத்து வைக்கப்பட்டுள்ள கட்டாய தூக்குத் தண்டனைக் கைதிகள் 492 பேர் கலங்கிப்போய் நிற்பதாகவும் அவர்களின் மனநிலைமிகவும் மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மரண பயத்தால் திடீர்ச் சுகவீனமுற்ற பல கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வயிற்றோட்டம், மயக்கம் போன்ற உபாதைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெலிக்கடைச் சிறைச்சாலை நிர்வாகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

செப்பல் வார்டின் அருகிலுள்ள தூக்குமரம் புனர்நிர்மாணம் செய்யப்படுவதும், இரண்டு தூக்குக் கயிறுகள் களஞ்சிய சாலையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுப் பரீட்சிக்கப்படுவதும் கைதிகள் மத்தியில் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதனால் அவர்கள் திடீரென நோய்வாய்ப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். 1871ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி இந்தத் தூக்கு மரம் ஆங்கிலேயர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதிக்குப் பின் இலங்கையில் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை. (த–சி)

## றுகுணு பல்கலை மாணவரின் ஆக்கத்துக்கு இரண்டாம் இடம்

### சர்வதேச ரீதியில் கிடைத்துள்ளது

கொழும்பு, செப். 26

றுகுணு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த மாணவர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த புதிய ஆக்கமொன்றுக்கு 157 நாடுகளிடையே இரண்டாவது இடம் கிடைத்துள்ளது.

பிரிட்டனின் பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடத்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் கண்காட்சிக் குறுகுணு பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் மூவரால் அந்தப் புதிய தயாரிப்பு முன்வைக்கப்பட்டிருந்தது.

மடிக்கணினி தொடர்பாக வெளிப்புறக் குளிராக்கித் தொகுதியொன்றை உருவாக்கியிருந்ததே இவர்களது புதிய தயாரிப்பாகும். தற்போது பாவனையில் உள்ள மடிக்கணினிகள் வெளிப்புறக்காற்றை உள்ளே இழுத்து அங்கே இருக்கும் உஷ்ணமான காற்றை வெளியேற்றுகின்றன. அது கூலிங் – அக்டிவ் மற்றும் கூலிங் – பசிவ் முறைமையாகும். இந்த முறைமையின் மூலம் வெளிப்புறக் காற்று மண்டலத்தில் இருக்கும் தூசுகள் நுண்ணுயிர்கள்கூட கணினிக்குள் உட்செல்வதால் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள வெளிப்புறக் குளிராக்கித் தொகுதியானது முற்றுமுழுவதுமாக இலத்திரனியல் முறைமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, அதன்மூலம் காற்று வடித்தெடுக்கப்பட்டுக் கணினிக்கு உட்செலுத்தப்படுகிறது. இது செயற்றிறன்மிக்க தொகுதியொன்றாவதோடு பயனும்கூட. உயர்மட்டத்தில் இருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

தனுர மலிங்க நஜன் அக்ரம், நிர்மானி ரஞ்சகொட ஆகிய மாணவர்களால் இந்தப் புதிய ஆக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை இந்த ஆண்டு முடிவில் வர்த்தகச் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (த–22)

## ஜெனிவாவில் இலங்கையின் நடவடிக்கைகளால் அதிர்ச்சி

### *நிமல்ஹா பெர்னாண்டோ தெரிவிப்பு*

ஜெனிவா, செப்.26

ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகள் பின்பற்றும் அணுகுமுறை குறித்து இலங்கையின் மனித உரிமை ஆர்வலர் நிமல்ஹா பெர்னாண்டோ அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் குறித்து நடைபெறும் கலந்துரையாடல்களில் இலங்கைப் பிரதிநிதிகள் முன்வைத்துள்ள நிலைப்பாடுகள் குறித்தே அவர் இவ்வாறு அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பிரதிநிதிகள் வெளிப்படுத்துவது கொழும்பின் நிலைப்பாடா என்பது எனக்குத் தெரியாது. இது கொழும்பின் நிலைப்பாடாக இருந்தால் அது எனக்கு ஆச்சரியமளிக்கும். குறிப்பிட்ட நகல் வடிவில் பாலியல் வன்புணர்வு, சித்திரவதைகள் போன்ற விடயங்களைப் பற்றிக் குறிப்பிடப்படுவதைக் கூட அவர்கள் விரும்பவில்லை என நிமல்ஹா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (த–வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், பொம்மர்ஸ் அடுத்த சுற்றுக்குள்



கரணவாய், செப். 26

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

***நெடியகாடு எதிர் பொம்மர்ஸ்***

நியூட்டன் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் பொம்மர்ஸ் வி.கழகம் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. பொம்மர்ஸ் சார்பாக சாரங்கன்.4 கோல்களையும் வைகுந்தன் மற்றும் கோபி ஆகியோர் தலா ஒரு கோலையும் பதிவுசெய்தனர்.

***இளைஞர் எதிர் சென்.லூட்ஸ்***

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இரண்டாம் பாதியில் வீறுகொண்டெழுந்த திக்கம் தொடர்ச்சியாக 4 கோல்களைப் போட்டு அசத்தி, முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அகிலதீபன் மற்றும் அரகரன் ஆகியோர் தலா 2 கோல்களை விளாசினர். (ம-108)

# வெள்ளிப்பதக்கம் வென்ற சென்.பற்றிக்ஸ் அணிக்கு நேற்று கல்லூரியில் கௌரவம்



யாழ்ப்பாணம், செப். 26

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி உதைபந்தாட்ட அணிக்கு கல்லூரி சமூகத்தினரால் நேற்று பெரும் எடுப்பில் கௌரவம் வழங்கப்பட்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியிலிருந்து கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரியின் மத்தியூஸ் மண்டபம் வரை வீரர்கள் அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அதிபர் அருட்தந்தை ஜொறோ செல்வநாயகத்தின் தலைமையில் வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருத்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட், சிறப்பு விருத்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பளர் சண் தயாளன், கொமர்சல் வங்கியின் வடபிராந்திய முகமையாளர் றோய் நீக்கிளஸ், சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் யாழ். பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவர் மா[illegible] தாஸ் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-23)

# ஸ்ரான்லியிடம் வீழ்ந்தது மகாஜன



யாழ்ப்பாணம், செப். 26

யாழ். மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் 19வயதுக்கு உட்பட்ட அணியினருக்கான ரி-20 தொடரின் ஆட்டங்களில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி 6 இலக்குகளால் மகாஜனாவை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 16 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரணவன் 19 ஓட்டங்களையும், தயூஸ்ரன் 17 ஓட்டங்களையும், ஜசிந்தன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணியின் சார்பில் விதுசன், சுஜிகரன் தலா 3 இலக்குகளையும் விஸ்ணுவானன், பிரசாந் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

115 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து இலக்கினை அடைந்தது. அதிகபட்சமாக விஸ்ணுவானன் 46 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார் பில் ஜெசிந்தன், துலக்சன் இரு வரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)

# சண்ஸ்ரார் உதைபந்து முடிவுகள்



யாழ்ப்பாணம், செப். 26

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு சூழலியல் மேம்பாட்டு அமைவகம் மற்றும் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புங்குடுதீவு சண்ஸ்ரார் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள். புங்குடுதீவு ஈஸ்வரன் அணிக்கும் புங்குடுதீவு சண்ஸ்ரார அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு சண்ஸ்ரார அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

புங்குடுதீவு பாரதி அணிக்கும் புங்குடுதீவு நசரேத் அணிக்கும் இடையிலான ஆட்டத்தின் போது இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெருததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிரப்பு உதைகளில் புங்குடுதீவு பாரதி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

***பாடசாலைகளுக்கு இடையிலான ரி-20 தொடர்***

யாழ்ப்பாணம், செப். 26

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் 19 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கிடையே நடத்தி வரும் துடுப்பாட்டத்தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் மத்தியின் மைதானத்தில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் காலை 9 மணிக்கு மான[illegible]பாய் இந்துக் கல்லூரி அணி[illegible] எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்குக்கு ஸ்ரான்லிக் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக்கல்லூரி அணி மோதவுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக்கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

***புங்குடுதீவு உதைபந்தாட்டத் தொடர்***

புங்குடுதீவு சண்ஸ்ரார் வி.கழகம் மற்றும் சூழலியல் மேம்பாட்டு அமைவனம் ஆகியன இணைந்து தீவக அணிகளுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டத்தொடரின் சில ஆட்டங்கள் சண்ஸ்ரார் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

இதன்படி காலை 9 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சண்ஸ்ரார் பி அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா அணியும், 9.45 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு ஐங்கரன் அணியும், மு.ப. 10.15 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மகேஸ்வரி அணியை எதிர்த்து அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியும் மோதவுள்ளன. (ம-23)

# சென்.மேரிஸ் எதிர் கில்லறி இறுதியில் இன்று மோதல்

கரணவாய், செப். 26

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.மேரிஸ் வி.கழகத்தை எதிர்த்து கில்லறி வி.கழகம் இன்று மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு கழுகுகள் வி.கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி நந்தன உடவத்த, மேலதிக அரச அதிபர் (காணி) ச.முரளிதரன் மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எம். நவநீதமணி உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-108)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆதிக்கம் செலுத்துகிறது மட்ரிட் இரண்டாம் இடத்தில் செல்டா விகோ



## ஆஸிக்கு மேலும் பின்னடைவு

ஆஸ்திரேலியா அணி தற்போது மூத்த வீரர்களின் ஓய்வு மற்றும் வீரர்களின் காயம் ஆகியவற்றின் காரணமாகத் திண்டாடி வருகிறது. இந்நிலையில் அந்த அணியின் முன்னணிப் பந்து வீச்சாளர் கம்மின்ஸ் காயம் காரணமாக வரவிருக்கும் பங்களாதேஷ் தொடரில் இருந்து விலகியுள்ளார்.


கம்மின்ஸிற்கு பதிலாக ஜேம்ஸ் பல்க்னர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். கம்மின்ஸுக்குப் பதிலாக பல்க்னர் இணைக்கப்பட்டுள்ளமை ஆஸிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. கம்மின்ஸ், பல்க்னர் இருவரும் சமதிறமை கொண்டவர்கள் ஆதலால் எவரேனும் ஒருவர் அணியில் இடம்பிடித்தால் போதும் என்பதே ஆஸியின் விவாதம். (ம)

ஸ்பெயினின் முன்னணி இருபது உதைபந்தாட்ட அணிகள் பங்கேற்கும் லாலிகா உதைபந்தாட்டத் தொடரில் அத்லெடிக் பில்பாவோ அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய ரியல் மட்ரிட் அணி 13 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளது.

ரியல் மட்ரிட் அணிக்கும் அத்லெடிக் பில்பாவோ அணிக்கும் இடையே நடந்த ஆட்டத்தில் 19ஆவது நிமிடத்தில் பென்ஸிமா, ரியல்மட்ரிட் அணிக்கான முதல் கோலை அடித்தார். அத்லெடிக் அணியின் பலவீனமான பின்களத்தை எளிதில் கடந்த அவர் முதல் கோல் அடித்து ரியல் மட்ரிட்டுக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார். அத்லெடிக் அணி உடனடியாக மும்முரத் தாக்குதலைத் தொடுத்தது. அந்த அணியின் கடுமையான போராட்டத்துக்கு 67ஆவது நிமிடத்தில் பயன் கிடைத்தது. அத்லெடிக் அணியின் சபின் மெரினோ தலையால் முட்டிப் பதில் கோலை அடித்தார். இதன்மூலம் இந்தச் சீசனில் ஒரு கோலைக் கூட அனுமதிக்காத ரியல் மட்ரிட் கோல் காப்பாளர் கெய்லோர் நவாஸின் சாதனை முடிவுக்கு வந்தது. இரு அணிகளும் 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தமை வெறும் 3 நிமிடங்களுக்கு மட்டுமே நீடித்தது. பென்ஸிமா, 70ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலை விளாசி 2–1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட்டை வெற்றி பெறச் செய்தார். இதுவரை 5 ஆட்டங்களில் விளையாடியுள்ள ரியல் மட்ரிட் 13 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது.

மற்றுமொரு பலமான அணியான செல்டா விகோ அணி 13 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் (கோல் கணக்கில் மட்ரிட்டை விட பின்தங்கியதால் இரண்டாம் இடம்) உள்ளது. ரியல் மட்ரிட் சார்பாக பெறப்பட்ட கோல்களில் பெரும்பாலானவை றொனால்டோவால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





சர்வதேச பூப்பந்தாட்டத் தரப்படுத்தல் நேற்று வெளியிடப்பட்டது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால் தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்துள்ளார். (ம)

## டோனி கலந்துகொண்டமைக்காக இந்திய இராணுவத்துக்கு 60 லட்சம் ரூபாய்




இங்கிலாந்தில் கடந்த வாரம் நடந்த ராணுவ வீரர்களுக்கான நலநிதி கிரிக்கெட் தொடரில் இந்திய அணித் தலைவர் டோனி பங்கேற்று விளையாடினார். குறித்த தொடரில் டோனி கலந்து கொண்டமைக்காக இந்திய இராணுவ வீரர்களுக்கு கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாக்கள் வரை வழங்கப்பட்டுள்ளன.

ஹீரோஸ் லெவன் அணியில் விளையாடிய டோனி குறித்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். இந்த ஆட்டத்தின் மூலம் 9 கோடி ரூபா நிதி திரட்டப்பட்டது. இந்தத் தொகையில் இருந்து 60 லட்சம் ரூபா இந்திய ராணுவ வீரர் களுக்காக வழங்கப்பட்டுள்ளது. டோனி ஆட்ட நாயகன் விருது வென்றமையாலும் குறித்த ஆட்டத்தில் பங்கெடுத்தமையாலுமே இந்திய இராணுவ வீரர்களுக்கு இந்த அளவு பெரும் தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சென்.மேரிஸ் இலகுவெற்றி

யாழ்ப்பாணம், செப். 26

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்குகளில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந் துறை சென்.மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)



## பெடரரிடம் 17 சர்வதேசக் கிண்ணங்களா!

### கோமாவிலிருந்த மீண்ட ரசிகர் இன்ப அதிர்ச்சி

ரென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரரின் தீவிர ரசிகர் ஒருவர் 11 ஆண்டுகள் கோமாவில் வீழ்ந்து தற்போது அதிலிருந்து மீண்டுள்ளார். அவர் ரோஜர் பெடரர் இன்னமும் டென்னிஸ் உலகில் அபாரமாக ஆடிவரும் செய்தியாலும், அவரிடம் 17 சர்வதேச அந்தஸ்துப் பெற்ற கிண்ணங்கள் உள்ளன என்ற செய்தியாலும் இன்ப அதிர்ச்சி அடைந்தார்.

அபாரிசியோ என்ற குறித்த ரசிகர் ஒரு கார் விபத்தில் சிக்கி 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் கோமாவில் வீழ்ந்தார்.

அந்த ஆண்டில்தான் பெடரர் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்திருந்தார். கடந்த ஆகஸ்ட் 27மே திகதி கோமாவிலி ருந்து கண் விழித்தார் குறித்த ரசிகர். விழித்தவுடன் தனது தாயார், தன் குடும்பத்தினர், நண்பர்கள், நாட்டு நடப்பு உலக விவகாரம் ஆகியவற்றைக் கேட்டறிந்ததோடு, தனது நாயகனான ரோஜர் பெடரர் பற்றியும் கேட்டறிந்தார்.

பெடரர் தொடர்பாக குறித்த ரசிகர் தெரிவித்ததாவது – பெடரர் ஓய்வு பெற்றிருப்பார் என்றே நினைத்தேன். ஆனால் 34 வயதில் அவர் இன்னமும் விளையாடி வருகிறார், அதுவும் உலகின் தலைசிறந்த வீரராக. தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார் என்பதையும் கேள்வியுற்றபோது என்னிடம் அவர்கள் விளையாடுகிறார்கள் என்றே முதலில் நினைத்தேன். என்னால் நம்ப முடியவில்லை. அவர் 17 சர்வதேசக் கிண்ணங்களை வென்றுள்ளார் என்று கேள்விப்பட்டவுடன் என் கைகள் என் முகத்திற்குச் சென்றது. பெடரர் மிகச் சிறந்த வீரர் என்பதை நான் அறிவேன். ஆனால் அவர் இவ்வளவு சாதனைகள் புரிந்திருப்பார் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை –என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், செப். 26

நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தில் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு குறித்த சனசமூக நிலையத்தால் மரதன் ஓட்டப்போட்டியொன்றை நாளைய தினம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

காலை 7 மணியளவில் நடைபெறவுள்ள இந்த மரதன் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் தமது பங்குபற்றுதலை உறுதிப்படுத்த முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

# செல்டாவிடம் வீழ்ந்தது பார்சிலோனா

நடைபெற்றுவரும் லாலிகா தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி செல்டா விகோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

இத்தனைக்கும் மெஸ்சி, நெய்மார், லூயிஸ் சுவாரஸ் போன்ற உலக நட்சத்திரங்கள் பார்சிலோனா அணியில் அணிவகுத்து நின்றும், செல்டா அணியை அசைக்க முடியவில்லை. இந்த ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பார்சிலோனாவின் தடுப்பு ஆட்டம் பலவீனமாகக் காணப்பட்டது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட செல்டா விகோ அணியினர் அடுத்தடுத்து கோல்களை திணித்தனர்.

அகுடோ நோலிட்டா (26-வது நிமிடம்), லாகோ அஸ்பாஸ் (30ஆவது, 56ஆவது நிமிடம்), ஜான் கிடெட்டி (83ஆவது நிமிடம்) ஆகியோர் செல்டா அணியில் கோல் போட்டு அசத்தினர். பார்சிலோனா தரப்பில் ஆறுதல் அளிக்கும் வகையில் 80ஆவது நிமிடத்தில் நெய்மர் ஒரேயொரு கோலை அடித்தார். முடிவில் செல்டா விகோ 4:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனோவை பந்தாடியது. (ம)




தொழிற் பயிற்சிகள்

* Mobile Phone Repairing (Hardware Software) காலம்: 3 Month
* Electronics காலம்: 9 Month
* Air Conditioning காலம்: 6 Month

பயிற்சிகள் யாவும் செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு: ஆரம்பம் 27.09.2015

JAFFNA TECHNICAL INSTITUTE
(C/O NEW ASIAN CENTER)
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7474, 077 824 9949 (19330) (14.15.17)


## முதல்தர வீராங்கனைகளின் ஆட்டத்துக்கு தகுதிபெற்றால் அசத்துவேன் - பென்னட்டா



சர்வதேச தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலுமுள்ள வீராங்கனைகள் பங்கெடுக்கும் ரென்னிஸ் தொடர் இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ளது. குறித்த தொடரில் விளையாட செரினா, செரபோவா, வோஸ்னியாக்கி மூவரும் ஏற்கனவே தகுதிபெற்றுள்ள நிலையில்–தானும் தகுதி பெற்றால் நிச்சயம் கனதியான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் என்று தெரிவித்துள்ளார் நடப்பு வருடத்தின் அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பென்னட்டா.

முதல்தர வீராங்கனைகளின் ஆட்டம் தொடர்பாக பென்னட்டா தெரிவித்ததாவது:– 'முதல்தர வீராங்கனைகளின் ஆட்டத்துக்கு தகுதி பெறுவேன் என்று எண்ணவில்லை. ஆனால் அமெரிக்கன் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியமை தரப்படுத்தலில் கைகொடுக்கும் என்று எண்ணுகிறேன். ஏற்கனவே தெரிவாகியுள்ள செரினா, செரபோவா, வோஸ்னியாக்கி மூவருக்கும் வாழ்த்துக்கள். கிவித்தோவாவும் தகுதி பெறுவார் என்று எண்ணுகின்றேன். எனக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அமெரிக்கன் தொடரில் சாதித்ததைப் போன்று நிச்சயம் சாதிப்பேன்.'– என்றார். (ம)


ஒரு சதுர அடி பனர் பிறிண்டிங் ரூபா 30/=
ஒரு சதுர அடி பெயர் பலகை ரூபா 195/=
இரண்டு வருட உத்தரவாதம்
சகல விளம்பரப் பலகைகளுக்கான வடிவமைப்புகளும் இலவசம் (Design Charge Free)
வடக்கின் முதற்தர பிறிண்டிங் தொழிற்சாலையான பிறிண்ட் மாஸ்ரரின் அதிரடி விலைச் சலுகைகள்

- டிஜிற்றல் பனர் பிறிண்ட் (Banner) 30/=
- டிஜிற்றல் ஸ்ரிக்கர் (Sticker) 75/=
- பெயர்ப் பலகை (Name Board) 195/=
- பெயர்ப் பலகை Without Galvanize Sheet 165/=
- ஒளியூட்டப்பட்ட பலகை (Light Board) 490/=

PRINT MASTER
136, கே.கே.எஸ் றோட், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
021 205 3322 077 898 3322



தேவை
முன் அனுபவம் உள்ள JCB ஒப்பரேட்டர் (Operator) தேவை. இடம் : மன்னார்
தொடர்பு: 077 474 1753



After A/L... CCTV
துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
CCTV, Network Cabling
Copper Cabling & Wireless
100% தொழில் சார் செயன்முறை பயிற்சி நெறி
*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
Next Batch : 2nd October
ICS Study Overseas 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் 021-4926222, 076-7013060


## இந்திய கிரிக்கெட்டில் கடும் போட்டி



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருந்த டால்மியாவின் சாவின் பின்னர் அடுத்த தலைவர் பதவிக்கு கடும் போட்டிகள் இருப்பதாக இந்திய கிரிக்கெட் வட்டாரங்களிடம் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளராகவுள்ள அனுராத் தாக்கூர், சீனிவாசன், சரத் பவார், மாநில கிரிக்கெட் தலைவர்கள் போன்ற பலர் இது வரை போட்டியில் உள்ளதாக அறியமுடிகிறது. (ம)


பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கிறீர்களா?
தீர்வு இயேசு கிறிஸ்துவிடம்!
செப்டெம்பர் 25-26-27
வெள்ளியிலிருந்து ஞாயிறு வரை
தினமும் மாலை 4.00 மணிக்கு
யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில்
Bless Sri Lanka: 0775 540 839 யாழ்ப்பாணம்: 0775 033 200


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.